# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| ஜோன் எக்ஸரா்: எக்காலத்திற்கும் ஏற்ற மத்திய வங்கியாளா் (சிறப்புக்குறிப்பு) | (I) |
| இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டம் (சிறப்புக்குறிப்பு) | (III) |
| கணக்குகளும் நிதியும் | (IV) |
| வங்கி மேற்பாா்வை | (XXI) |
| தொடா்பூட்டல் | |
| நூலகமும் தகவல் நிலையமும் | (XXV) |
| நாணயம் | (XXVI) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (XXIX) |
| பொருளாதார ஆராய்ச்சி | (XXXI) |
| ஊழியா் சேமநிதியம் | (XXXIII) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (XXXVI) |
| தகவல் தொழில்நுட்பம் | (XXXVIII) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (XL) |
| சட்டம் | (XLI) |
| முகாமைத்துவ கணக்காய்வு | (XLII) |
| கொடுப்பனவுகள் மற்றும் தீா்ப்பனவுகள் | (XLIII) |
| பணிமனை | (XLVI) |
| பொதுப்படுகடன் | (XLVII) |
| பிரதேச அபிவிருத்தி | (L) |
| செயலகம் | (LVI) |
| பாதுகாப்புப் பணிகள் | (LVI) |
| புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள் | (LVII) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பாா்வை | (LIX) |
| வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் | (LXII) |
| பயிற்சி | (LXIII) |
| நலன்புரி | (LXIV) |
| மனிதவளங்கள் முகாமைத்துவம் | (LXIV) |
| நிதியியல் உளவறிதல் பிரிவு | (LXVII) |

## சிறப்புக் குறிப்பு II-1

### ஜோன் எக்ஸ்ரர்: எக்காலத்திற்கும் ஏற்ற மத்திய வங்கியாளர்[1]

மத்திய வங்கியின் நிறுவன ஆளுநர் ஜோன் எக்ஸ்ரரின் முதலாவது சிரார்த்த தினம் 2007 பெப்புருவரி 28இல் அனுட்டிக்கப்பட்டது. அவர் 95 நீண்ட ஆண்டுகளுக்கு பயன்மிக்க முறையில் வாழ்ந்து 2006இல் காலமானார்.

"எக்ஸ்ரர் அறிக்கை" என தற்போது அறியப்படும் அறிக்கையில் அவரால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புகளூடாக இலங்கை மத்திய வங்கியை 1950இல் நிறுவுதற்காக எந்தவித ஒளிவு மறைவுமின்றி தனது முன்மதி, புலமை மற்றும் அனுபவங்களை ஜோன் எக்ஸ்ரர் வழங்கினார். அவர் மத்திய வங்கியின் முதலாவது ஆளுநராக இளவயதான, 39இல் பதவியேற்றார். அவருக்கு ஒப்படைக்கப்பட்ட பணியாதெனில் வங்கியை நிறுவுதல், அதற்கு அலுவலர்களை ஆட்சேர்த்தல் மற்றும் அதை முதற் சில ஆண்டுகளுக்கு வழிநடத்திச் செல்லல் என்பனவாகும். இந்நடவடிக்கை மூலம் இது இறுதியில் இலங்கையரின் முகாமைத்துவத்தால் பொறுப்பேற்கப்படும். 1940களின் பிற்பகுதியில் அவரது அறிக்கையில் அவர் வெளிப்படுத்தும் மத்திய வங்கியின் விதிகளின் தொகுப்பும் தத்துவமும் இன்று கூட சமஅளவில் சரியென நிரூபிக்கப்படுகிறது. ஏனெனில், மத்திய வங்கியாளர்களின் பின்னைய பரம்பரைகள் அவற்றை விளங்கிக் கொள்வதில் எந்தவித சந்தேகத்தையும் கொண்டிருக்காதவாறு நாணயச் சட்டத்தின் ஒவ்வொரு பிரிவினது நியாயப்படுத்தலையும் இது கொண்டிருக்கிறது. எனவே, எந்த ஒரு நியமங்கள் மூலமும் ஜோன் எக்ஸ்ரர் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற மத்திய வங்கியாளராக விளங்குகிறார்.

பிரித்தானியர்களிடமிருந்து நாடு மரபுரிமையில் பெற்ற நாணயச்சபை முறைமையை பிரதியீடு செய்யும் நெகிழ்ச்சித் தன்மைமிக்க மத்தி வங்கியை நிறுவுவதற்கான ஆரம்ப அறிக்கையைத் தயாரிப்பதற்காக எக்ஸ்ரரின் நியமனம் தொடர்பான கதை முன்னைநாள் சிரேஷ்ட துணை ஆளுநர் எட்மென்ட் எறமுத்துகொலவால் எழுதப்பட்ட "இலங்கை மத்திய வங்கியின் நினைவுக் குறிப்புகள்" என்ற புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அவரின் கருத்துப்படி, நாட்டின் விசேட நிலை மற்றும் வருங்கால வாய்ப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கிக்கான ஆரம்ப அறிக்கையைத் தயாரிப்பதற்கு வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அரசு தீர்மானித்ததுடன் ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்தும் உதவியைக் கோரியது. இதனால் இந்நோக்கத்துக்காக தகைமையடைய நிபுணர் ஒருவரைப் பெற்றுக் கொள்வதற்கு பெடறல் றிசேவ் பாங்க் ஒவ் நியுயோர்க் அணுகப்பட்டது. அந்நேரத்தில் பிலிப்பைன்ஸ் நிதி அமைச்சில் மதியுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஜோன் எக்ஸ்ரரின் பணிகள் வங்கிக்கு கிடைக்கத்தக்கதாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

ஜோன் எக்ஸ்ரா புகழ்மிக்க கல்விசார் அறிவையும் தொழில்சார் நிபுணத்துவத்தையும் கொண்டிருந்தார். அவர் வூஸ்ரர் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்ற பின்பு, பட்டபின் படிப்பு வேலையை கல்வி மற்றும் டிப்ளோமாக்களுக்கான பிளெச்சர் சட்டக் கல்லூரியிலும் ஹார்வேட் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்தார். இலங்கை அரசின் பொறுப்பினை ஏற்க முன்பு, எக்ஸ்ரர் உயர் மதிப்பைக் கொண்டிருக்கும் எம்ஜரி பெடறல் றிசேவ் முறைமையிலும், பிலிப்பைன்ஸ்ஸில் நிதிச் செயலாளருக்கான மதியுரைஞராகவும் பணி புரிந்தார். இங்கிருந்தே மத்திய வங்கியை நிறுவுவதற்கான நிபுணராக அவர் வந்தார். அவர் மத்திய வங்கி ஆளுநராக 3 ஆண்டுகள் பணி புரிந்தார். எக்ஸ்ரர் 1953இல் உலக வங்கியில் ஒரு வருடத்திற்கு பணி புரிந்தபின், பெடறல் றிசேவ் பாங்க் ஒவ் நியூயோர்க்கில் பன்னாட்டுத் தொழிற்பாடுகளுக்கான பிரதித் தலைவராக பெடறல் றிசேவ் முறைமைக்கு திரும்பினார். 1959இல் எக்ஸ்ரர் சிற்றி வங்கியாக பின்பு மாறிய முதலாவது தேசிய சிற்றி வங்கியில் இணையுமாறு அணுகப்பட்டார். 1960இலிருந்து 1972 வரை அவர் சிற்றி வங்கியின் சிரேஷ்ட துணைத்தலைவராக இருந்ததுடன், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் அரசுகளுடான அதன் தொடர்புகளுக்குப் பொறுப்பாக இருந்தார். 1971இல் தங்கப் பரிவர்த்தன நியமம் முறிவடைந்த வேளையில், தங்கச் சொத்துக்கள் மீது பெறப்பட்ட பெரும் செல்வத்துடன், எக்ஸ்ரர் 1972இல் உரிய காலத்திற்கு முன்பே சேவையிலிருந்து இளைப்பாறி தனியார் நிபுணத்துவப் பணிக்குச் சென்றார்.

பணத்தை அச்சிடுவதன் மூலம் பொருளாதாரச் சுபீட்சம் அடைய முடியாது என நம்பிய பொருளியலாளர்களின் பழைய காப்பாளர்களைச் சேர்ந்தவர் எக்ஸ்ரர். இது உண்மையிலேயே 1930 களின் பிற்பகுதி மற்றும் 1940 அளவில் காணப்பட்ட கெயின்சியனிசிமின் பிரபல்யமான "இடர்பாட்டை வெல்லல்" என்பதற்கு எதிரானது. எக்ஸ்ரர் அவரது பொது உரைகளிலும், படைப்புக்களிலும், முழுமையான தொழில்நிலையைப் பெற்றுக் கொள்வதற்கு பற்றாக்குறை நிதியிடலின் செல்லுபடியாகும் தன்மை பற்றி சந்தேகம் வெளியிட்டிருந்தார். இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்ட முதல் நாளே, அதனால் நிறைவேற்ற முடியாத விடயங்களுக்காக மத்திய வங்கியைப் பயன்படுத்துவதற்கு எதிராக எச்சரிக்கை செய்தார். மத்திய வங்கி தானாகவே பொருட்களையும், பணிகளையும் உற்பத்தி செய்ய முடியாத போதும், சரியான நாணய நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரங்களை ஏற்படுத்த முடியுமென சுட்டிக் காட்டினார். எதிர்கால சுபீட்சத்திற்கு மத்திய வங்கி அத்தியாவசியமான நிபந்தனை என்ற கருத்தை எக்ஸ்ரர் பேணி வந்தார். விலை உறுதிப்பாட்டைப் பேணுவதன் மூலம் சுபீட்சம் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் பொருளாதார முகவர்கள் நீண்ட கால சுபீட்சங்களின் அடிப்படையில் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். மத்திய வங்கியின் ஒரே ஆயுதம் பணத்தை அச்சிடுவதாகும். விலை மட்டங்களை மாற்றுவதன் மூலம் அப்பணம் ஒரு மாயையாக மட்டுமே செயற்படுகிறது. எக்ஸ்ரர் அறிக்கையில், பண உருவாக்கத்தினூடாக உருவாக்கப்பட்ட உயர் வருமானம் இறக்குமதி

செய்யப்பட்ட பொருட்களின் நுகர்வை இலகுவாகத் தூண்டி மோசமான சென்மதி நிலுவை இடர்பாடுகளைத் துரிதப்படுத்தும் என்பதைத் தர்க்கித்தார். பற்றாக்குறை நிதியிடலை ஒரு கருவியாக மத்திய வங்கி பயன்படுத்துவதற்கான எந்த முயற்சியையும் பாதுகாப்பதற்காக, இலங்கை மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதை அல்லது சொத்துக்களைக் கட்டியெழுப்புவதில் நேரடியான வர்த்தக ஆர்வத்தைக் கொண்டிருப்பதைத் தடை செய்வதற்கு நாணயச் சட்டத்தில் ஏற்பாடு ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஆர்வங்கள் பண உருவாக்கத்துக்கு இட்டுச் சென்று, முரண்பட்ட ஆர்வங்களை உருவாக்கி கடுமையான பொருளாதார தத்துவங்களின் அடிப்படையில் முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்குமென எக்ஸ்ரர் சுட்டிக் காட்டினார். மத்திய வங்கியின் குறிக்கோள் ஒன்றாக இலாபத்தைப் பின்பற்றுவதும் எக்ஸ்ரரின் கடுமையான கண்டனத்துக்குட்பட்டது. தொழில்நுட்பப் பக்கத்திலிருந்து நோக்கும் போது, பொருளாதாரத்தை வீக்கப்படுத்துவதன் மூலம் மத்திய வங்கி எந்த அளவிலான இலாபத்தையும் பெறமுடியுமாதலால் மத்திய வங்கி இலாபத்தைத் தேடுதல் எதுவித அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை. எனவே, எக்ஸ்ரர் அறிக்கை, மத்திய வங்கியின் இலாபங்களை அரசுக்கு மாற்றும் போது எழும் எந்தவிதமான பணவீக்க அல்லது பணச்சுருக்க விளைவுகளையும் தவிர்ப்பதற்கான பொறிமுறையொன்றை முன் வைத்தது. அவ்வாறான மாற்றல்கள் வர்த்தக வங்கிகள் அவற்றின் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு இட்டுச் செல்வதன் மூலம் வங்கிகளின் பல்புடை கொடுகடனை உருவாக்கும் இயலளவை அதிகரிக்கின்றது. ஆகவே, மத்திய வங்கியின் இலாபங்களின் ஒதுக்கீடு சம்பந்தமாக நாணயச் சட்டத்தில் விசேட ஏற்பாடுகளை எக்ஸ்ரர் ஏற்படுத்தினார். இதன்படி, மத்திய வங்கி இலாபங்கள் முதலில் உள்நாட்டு நாணயத்துக்கு உதவும் விதத்தில் அதன் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் பின்பு மத்திய வங்கியிலிருந்தான அரசின் கடன்பாடுகளை மீளச் செலுத்துவதற்கு அல்லது சாதாரண இலாபமாற்றலாக அரசுக்குச் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

மத்திய வங்கியின் தனித்துவம் சார்ந்த பிரச்சனையாக வங்கியின் அதிஉயர் தீர்மானத்தை மேற்கொள்ளும் அமைப்பான நாணயச்சபையை அமைக்கும் போது இதன் உறுப்பினர் ஒருவராக நிதி அமைச்சின் செயலாளர் இருப்பது எக்ஸ்ரரின் கண்டனத்திற்குரியதாக விளங்கியது. கேள்வியாதெனில் நாணயச்சபையில் நிதிஅமைச்சுச் செயலாளரின் பிரசன்னம் நாணயக்கொள்கையைப் புறந்தள்ளி இறைக்கொள்கை முன்னணி வகிக்குமா என்பதேயாகும். இத் தர்க்கத்துக்கு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்ட போதும், சமாதானத்துடனும், விட்டுக் கொடுப்புடனும் இணைந்திருப்பதற்கு அரசு மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டுக்குமான சூழலை உருவாக்குவது எக்ஸ்ரரின் நடவடிக்கையாக விளங்கியது. தனித்துவத்தின் அளவு, மத்திய வங்கியின் வரவு செலவுத்திட்டம், முக்கிய அலுவலர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் அரசுடன் கலந்தாலோசிக்காது நாணயக் கொள்கையை மேற்கொள்வதற்கான சாத்தியமான அதிகாரம் என்பவற்றூடாக விரிவாக்கப்பட்டுள்ளது. எக்ஸ்ரரின் மதிநுட்பம் யாதெனில் மத்திய வங்கி இயலுமான அளவுக்கு அரசிலிருந்து விலகியிருப்பதனை விட அரசுடன் கலந்தாலோசனையில் ஈடுபட வேண்டுமென்பதாகும். இவ் ஒழுங்குமுறையானது இயற்றப்பட்ட சிறிய சட்டவாக்கப் பிரிவினூடாக அல்லாது அனுபவம், நிபுணத்துவம் மற்றும் அரசியல் சம்பிரதாயம் என்பவற்றின் அடிப்படையில் இருக்கவேண்டுமென எக்ஸ்ரர் எதிர்பார்த்தார். எனவே, எக்ஸ்ரர் 21 ஆவது நூற்றாண்டில் எமக்கு விட்டுச் சென்ற பாடம் யாதெனில், மத்திய வங்கியும், அரசும் அவர்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் நன்கு தெரிந்து வைத்துக் கொள்வதுடன், நாட்டின் நன்மைக்காக ஒவ்வொருவராலும் வகிக்கப்படும் வேறுபட்ட பங்குகளை அவர்கள் தொடர்ந்து பாராட்டும் நீதிநெறியில் செயற்பட வேண்டுமென்பதாகும்.

---

[1]இக்கட்டுரை ஜோன் எக்ஸ்ரரின் முதலாவது சிரார்த்த தினம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் திரு. டபிள்யு.ஏ. விஜேவர்த்தன அவர்களால் தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரையிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டதாகும்.

## சிறப்புக் குறிப்பு 11-2
## இலங்கை மத்திய வங்கியின் உபாயத்திட்டம் 2007 - 2011

இலங்கை மத்திய வங்கி 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் இலங்கை நிதியியல் துறையின் உச்ச நிறுவனமாக 1950இல் நிறுவப்பட்டது. இலங்கை மத்திய வங்கியானது, மத்திய வங்கியின் ஆளுநரைத் தலைவராகக் கொண்ட நிதித்திட்டமிடல் அமைச்சின் செயலாளர் மற்றும் யாப்புக் குழுவின் உடன்பாட்டுடன் நிதியமைச்சரின் விதந்துரைப்பின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட நாணயச் சபையினால் ஆளப்படுகிறது. 2002இல் நாணயவிதிச் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தத்தின் நியதிகளின்படி, இலங்கையின் உற்பத்தித்திறன் மிக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்துகின்ற நோக்குடன் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறை உறுதிப்பாட்டினையும் கவனிக்கின்ற குறிக்கோள்கள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் கவனம் இந்நாட்டின் வளமான எதிர்காலத்திற்கு சாதகமான விதத்தில் பங்களிக்கக்கூடிய இவ்விரட்டைக் குறிக்கோள்களை எய்துவதன் மீதே குவிந்திருக்கிறது. இவ்விலக்கினை அடையும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி 2007-2011 ஆண்டு காலப்பகுதிக்காக நடுத்தரகால உபாயத்திட்டமொன்றினை வடிவமைத்திருக்கின்றது.

இவ்வுபாயத்திட்டம், இலங்கை மத்திய வங்கியின் நடுத்தரகால இலக்குகளையும் இவற்றை எவ்வாறு அடைவதென்ற திட்டங்களையும் எடுத்துக் காட்டுகின்றது. திட்டமானது வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணிகளையும், வங்கியின் பொதுவான போக்கினையம் அதேபோன்று வங்கி அதன் பணிகளை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமையக்கூடிய மதிப்புக்களையும் பற்றி விளக்குகிறது. இவ்வுபாயத்திட்டமானது, ஓராண்டிற்கும் கூடுதலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சிகளின் பெறுபேறாகும். ஆலோசனையில் ஊழியர்களில் பரந்தளவு தொகுதியினர் பங்கேற்றுக் கொண்டனர். தீர்மானத்தில் உபாய யோசனைகளை உள்ளடக்கும் விதத்தில் கம்பனிகள் மற்றும் மூத்த முகாமைத்துவத்திலுள்ளவர்கள் தீவிரமாகப் பங்கேற்ற பல செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இறுதியாக மூத்த முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் மத்திய வங்கி அலுவலர்களின் ஆலோசனையுடன் தொலைநோக்கு, பணிகள், மதிப்புக்கள் மற்றும் உபாயத்திட்டம் என்பன இறுதியாக்கப்பட்டன.

வங்கியானது அதன் முக்கிய அலுவல்துறைகளில் பின்பற்ற எண்ணியுள்ள உபாயங்களை திட்டம் அடையாளம் கண்டுள்ளது. தொழிற்பாட்டு முன்னுரிமைகளின் அடிப்படையில் இம்முக்கிய அலுவல்துறைகள் அடையாளம் காணப்பட்டன. அவை பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறை உறுதிப்பாடு, நாணய வழங்கல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் முகவர் பணிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. முக்கியமான செயலாற்றக் குறிகாட்டிகளூடாக, செயலாற்றத்தினை அளவிடுவதனை இயலச் செய்யும் விதத்தில், ஒவ்வொரு துறைகளிலும் கால நிர்ணயத்துடன் இலக்குகள் ஏற்படுத்தப்பட்டன. வங்கியின் உபாயத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு திணைக்களங்கள் அவர்களின் நடவடிக்கைத் திட்டங்களை தயாரித்ததுடன் திணைக்களங்களின் நடவடிக்கைத் திட்டங்களை செயன்முறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் விதத்தில் மூலவளங்கள் நிர்ணயிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும். நடவடிக்கைத் திட்டமானது முன்னேற்றங்களை இலகுவான முறையில் கண்காணிப்பதனையும் திட்டமிடப்பட்ட இலக்குகளை எய்துவதனை நோக்கி செயற்பாடுகளை நெறிப்படுத்துவதனையும் வங்கிக்கு இயலச் செய்யும். முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கும் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்குமாக உதவி ஆளுநர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தனியான கொள்கை ஆய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

**தொலைநோக்கு, பணிகள் மற்றும் மத்திய வங்கியின் மதிப்புக்கள்**

**தொலைநோக்கு -**

இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கு பங்களிக்கும் விதத்தில் மத்திய வங்கி நம்பகத்தன்மையுடனும் இலக்கவாற்றலுடனும் இருத்தல் வேண்டும்.

**பணிகள் -**

கொள்கைத் தூண்டுதல், மதியுரை, பற்றுறுதி மற்றும் நேர்த்தியான செயற்பாடு என்பன ஊடாக உறுதியான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினையும் நிதியியல் முறை உறுதிப்பாட்டினையும் பேணுதல்.

**மதிப்புக்கள் -**

- உட்தூண்டுதல்மிக்க தலைமைத்துவத்திற்கான பற்றுறுதி
- நாம் என்ன செய்கிறோமோ அது தொடர்பான வெளிப்படையானதன்மை
- எமது முதன்மைப் பங்குடமையாளர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தன்மை
- ஒருங்கிணைந்த - நம்பிக்கை, தங்கியிருக்கும் தன்மை மற்றும் நேர்மை
- தொழில்சார் நிபுணத்துவ தகுதிக்கான பற்றுறுதி
- வாழ்நாள் முழுவதும் கற்றறிதல், அறிவினைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் புதுமைகள்
- வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் உறுதியாகவும் துல்லியமாகவும் சரியான நேரத்திலும் மேற்கொள்ளல்
- முகாமைத்துவம் மற்றும் கொள்கை வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான தொழிற்பாட்டு சுயநிர்ணயத்தினை உறுதிப்படுத்தல்
- பெறுபேறுகள் மற்றும் வெளியீடுகளுக்கு அவசரமானதும் தொடர்ச்சியானதுமான பற்றுறுதிகளைக் கொண்டிருத்தல்
- வேலை நடைமுறைகளில் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பிற்கான பற்றுறுதியைக் கொண்டிருத்தல்




இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும். உபாயத்தின் திட்டமிடல் தொடர்பான முன்னேற்றங்களின் நியதிகளில் வழமையாக தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் வங்கியின் கட்டுப்பாட்டு அமைப்புக்களினூடாக பெறுபேறுகளை வழங்குமாறு திணைக்களங்கள் அறிவுறுத்தப்பட்டன. நாணயச்சபைக்கு உபாய செயலாற்ற அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் பொருட்டு அதனைத் தயாரிக்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தலின் ஒவ்வொரு சுற்றும் முடிவடைவதற்கு முன்னதாக உபாய மீளாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். அடையாளம் காணப்பட்ட உபாய குறிக்கோள்களை எய்துவதில் அடையப்பட்ட முன்னேற்றங்களின் சாராம்சங்களை அறிந்து கொள்வதற்காக காலாந்தர செயலாற்ற அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## 1. கணக்குகளும் நிதியும்

**இலங்கை மத்திய வங்கி**
**ஐந்தொகை**
**திசெம்பர் 31இல் உள்ளவாறானது**

| | குறிப்பு | 2006 (ரூபா '000 ) | 2005 (ரூபா '000 ) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச்சமமானவையும் | 1 | 105,601,686 | 146,128,811 |
| நிதியியில் சொத்துக்கள் | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 2 | 107,413,474 | 104,937,757 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் தங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் | 2 | 11,905,227 | 8,743,882 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 2 | 68,211,989 | 13,992,948 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 3 | 67,276,214 | 60,491,555 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்து பெறத்தக்கவை | | 155,840 | 163,667 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 360,564,430 | 334,458,620 |
| | | | |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| முதலீட்டுப் பட்டியல் - இலங்கை அரச பிணைகள் | | 67,507,503 | 51,806,545 |
| அரசுக்கான முற்பணங்கள் | 4 | 49,015,400 | 39,746,300 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 5 | 2,487,446 | 2,468,989 |
| ஏனைய உள்நாட்டுப் பெறத்தக்கவை | | 1,173,461 | 678,665 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 6 | 45,185 | 45,248 |
| ஏனைய சொத்துக்கள் | | 600,997 | 558,140 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 120,829,992 | 95,303,887 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 481,394,422 | 429,762,507 |
| | | | |
| **ஏனைய சொத்துக்கள்** | 7 | 2,267,537 | 1,351,677 |
| பொருட்களின் இருப்பு | | 59,766 | 59,766 |
| தங்க இருப்பு | | 1,957,404 | 1,590,099 |
| நானாவிதச் சொத்துக்கள் | 8 | 7,171,183 | 7,717,108 |
| சொத்து, பொறிகள், இயந்திரங்கள் | 9 | - | 115,787 |
| அருவச் சொத்துக்கள் | | 11,455,890 | 10,834,437 |
| **மொத்த ஏனைய சொத்துக்கள்** | | 492,850,312 | 440,596,944 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | |
| | | | |
| **பொறுப்புக்களும் பங்குகளும்** | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 10 | 10,134,724 | 15,630,980 |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | | 33,477,598 | 28,285,643 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை | 11 | 97,032,223 | 102,635,004 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | | 1,544,545 | 1,326,619 |
| ஏனைய வெளிநாட்டுச் செலுத்தப்பட வேண்டியவைகள் | | 142,189,090 | 147,878,246 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| | | | |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 12 | 82,615,387 | 65,483,580 |
| வர்த்தக வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 13 | 1,356,351 | 931,592 |
| அரச, அரச முயற்சிகளின் மீதிகள் | | 562,000 | 14,107,000 |
| திறைசேரி உண்டியல்களும் பிணைகளும் (மீள் கொள்வனவுகள்) | 14 | 2,754,936 | 199,344 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்துடனான வைப்புக்கள் | | 1,231,476 | 838,397 |
| ஏனைய கொடுப்பனவுகள் | | 88,520,150 | 81,559,913 |
| **மொத்த உள்நாட்டு நாணய நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | 230,709,240 | 229,438,159 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| | | | |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டதிலுள்ள நாணயம் | | 157,239,605 | 132,436,496 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | | 59,985 | 278,660 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய வேலைக்குப் பின்னைய நன்மைகள் திட்டங்கள் | | 1,121,818 | 974,983 |
| நானாவிதப் பொறுப்புக்கள் | | 370,149 | 333,013 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | 158,791,557 | 134,023,152 |
| **பங்குகள்** | | | |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 15 | 103,349,515 | 77,135,633 |
| **மொத்தப் பொறுப்புக்களும் பங்குகளும்** | | 492,850,312 | 440,596,944 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு**

2006 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் அதனுடன் தொடர்பான அவ்வாண்டில் முடிவடைந்த குறிப்புக்கள் 1.1இலிருந்து 1.5வரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வருமானக்கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, பங்கு அசைவுக் கூற்று, முக்கியமாகக் கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் 0.1இ24 வரை தெரிவிக்கப்பட்டிருக்கும் விளக்கக் குறிப்புக்கள் என்பனவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13ஆம் பிரிவு உடன்சேர்த்து வாசிக்கப்படும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154இற்கு அமைவாக நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) இன் பிரிவு 42(2) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இதுவரையான எனது பரீட்சிப்புக்களிலிருந்து கண்டறியப்பட்ட எனது அபிப்பிராயத்தின்படியும் எனக்குக் கிடைத்த தகவல்கள் மற்றும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களின் படியும் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2006 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் நிதி நிலைமை தொடர்பாக உண்மையானதும், நியாயமானதுமான கருத்துக்களையும் அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளையும் காசுப் பாய்ச்சலையும் தருகிறது.

13 மார்ச்சு 2007
கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு.7

| பி. ஏ. பேமதிலக்க | அஜித் நிவாட் கப்ரால் | கே. எம். ஏ. என். டவுலகல |
|---|---|---|
| கணக்காய்வாளர் நாயகம் | ஆளுநர் | முதன்மைக்கணக்காளர் |

## இலங்கை மத்திய வங்கி
## வருமானக் கூற்று
## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2006 (ரூபா'000) | 2005 (ரூபா'000) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டிவருமானம் | 16 | **10,786,599** | 6,924,471 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | **(80,208)** | (90,502) |
| விலை மாற்றங்களிலிருந்தான தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | **992,017** | 768,660 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **11,698,408** | 7,602,629 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 17 | **(2,258,478)** | (1,799,733) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(2,258,478)** | (1,799,733) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் (நட்டம்) | | **22,358,038** | (12,955,088) |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம் (நட்டம்)** | | **31,797,968** | (7,152,192) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 16 | **5,330,970** | 6,138,434 |
| வட்டிச் செலவு | 17 | **(381,426)** | (839,599) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **4,949,544** | 5,298,834 |
| ஏனைய வருமானம் | 18 | **710,411** | 1,101,691 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம் (நட்டம்)** | | **37,457,923** | (751,667) |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளணிச் செலவுகள் | | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | 19 | **(1,292,044)** | (911,107) |
| - வரைவிலக்கணம் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | 19 | **(181,476)** | (149,168) |
| - ஓய்விற்குப் பின்னரான வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டச்செலவு | 19 | **(4,625,893)** | 1,148,180 |
| | | **(6,099,413)** | (2,208,455) |
| பெறுமானத் தேய்வும் பதிவளிப்பும் | | **(466,671)** | (458,876) |
| பொருட்பட்டியல் செலவு | | **(1,543,026)** | (1,273,044) |
| நிருவாகச் செலவுகள் | 20 | **(876,632)** | (976,044) |
| அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் மற்றும் தேறிய சில்லறைகளின் பதிவழிப்பு | | - | (8,209) |
| **மொத்த தொழிற்பாட்டு செலவுகள்** | | **(8,985,742)** | (4,924,628) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)** | | **28,472,181** | (5,676,295) |
| வருமானவரி | | **(620,565)** | (570,182) |
| இவ்வாண்டிற்கான தேறிய இலாபம் / (நட்டம்) | | **27,851,616** | (6,246,477) |

# இலங்கை மத்திய வங்கி
## காசுப் பாய்ச்சல் கூற்று
## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2006 (ரூபா '000 ) | 2005 (ரூபா '000 ) |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| **மூலம்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **9,777,792** | 6,399,379 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **22,783** | 48,895 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **991,682** | 768,660 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம் / (இழப்பு) | | **(352,657)** | 1,703,091 |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **474,810** | 145,767 |
| | | **10,914,410** | 9,065,792 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **2,130,611** | 1,652,955 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **384,519** | 840,641 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **(470,892)** | 1,326,591 |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவு | | **6,732,521** | 2,659,687 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **531,545** | 538,943 |
| | | **9,308,304** | 7,018,817 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்:** | 21 | **1,606,106** | 2,046,975 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு | | **(666,266)** | (749,609) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் மீள் பெறுகைகள் | | **110,982** | (2,356,411) |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை / மீட்டல் | | **406** | 474,764 |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | **15,025** | 16,582 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | **9,049** | 35,633 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **(13,545,000)** | 6,894,000 |
| | | **(14,075,804)** | 4,314,959 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **40,459,822** | 56,826,530 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **2,193,369** | 131,617 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ குறைப்பு | | **924,448** | (2,050,609) |
| ஏனைய உள்ளூர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு மற்றும் கொடுபடத்தக்கவை | | **192,672** | (191,819) |
| கொடைகள் தவிர்ந்த சொத்துப் பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **102,230** | 53,708 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | **1,273,645** | 93,810 |
| | | **45,146,186** | 54,863,237 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(59,221,990)** | (50,548,278) |
| **நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **மூலம்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல் | | **188,483,464** | 151,998,690 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல் | | **(163,680,355)** | (135,471,163) |
| சுற்றோட்டத்திலுள்ள தேறிய நாணய வழங்கல் | | **24,803,109** | 16,527,527 |
| **கழிக்குக:** | | | |
| அரச கொடுக்கல் வாங்கல் மீதான சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல் / (புறக்கீடுகள்) | 22 | **19,243,588** | (32,265,077) |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றுறோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (புறக்கீடுகள்) | 23 | **(17,131,807)** | (11,613,517) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (புறக்கீடுகள்) | | **2,111,781** | (43,878,594) |
| | | **22,691.328** | 60,406,121 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **(13,684,511)** | (10,970,720) |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | **-** | 5,000,000 |
| | | **(13,684,511)** | (5,970,720) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **9,006,817** | 66,376,841 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | | **(48,609,067)** | 17,875,538 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **8,081,942** | (15,257,617) |
| 2006 சனவரியில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **146,128,811** | 143,510,890 |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 24 | **105,601,686** | 146,128,811 |

## இலங்கை மத்திய வங்கி
## பங்குடைமை அசைவுக் கூற்று
## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | பங்களிக்கப்பட்ட மூலதனம் (ரூபா '000 ) | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் (ரூபா '000 ) | ஏனைய ஒதுக்கங்கள் (ரூபா '000 ) | திரட்டிய இலாபங்கள் (ரூபா '000 ) | மொத்தம் (ரூபா '000 ) |
|---|---|---|---|---|---|
| **2005 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | 662,382 | 81,010,798 | 7,208,442 | 88,896,622 |
| தேறிய நட்டம் | - | - | - | (6,246,477) | (6,246,477) |
| அரசுக்க மாற்றம் செய்யப்பட்ட 2004இற்கான தேறிய இலாபம் | - | - | - | (5,565,152) | (5,565,152) |
| அதேநேர மொத்த தீர்ப்பனவின் மிதக்கும் நிதிக்கு மாற்றப்பட்டது | - | - | 26,476 | (26,476) | - |
| நடுத்தர மற்றும் நீண்டகால கடன் ஒதுக்குகளுக்கு மாற்றப்பட்டது | - | - | 1,500,000 | (2,500,000) | - |
| பொது ஒதுக்கத்திற்குமாற்றப்பட்டது | - | - | 103,123 | (103,123) | - |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றம் | - | - | (12,955,088) | 12,955,088 | - |
| விற்பனைக்கான கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய நியாமான பெறுமதி/ (நட்டம்) | - | - | 50,640 | - | 50,640 |
| **2006 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | 662,382 | 69,735,949 | 6,722,302 | 77,135,633 |
| தேறிய இலாபம் | - | - | - | **27,851,616** | **27,851,616** |
| அதே நேர மொத்தத் தீர்ப்பனவின் மிதக்கும் நிதிக்கு மாற்றப்பட்டது | - | - | **40,263** | **(40,263)** | - |
| இ.ம.வ. குறிப்பிடப்பட்ட ஒதுக்குக்கு மாற்றப்பட்டது | - | - | **221,903** | **(34,540)** | **187,363** |
| தேறல் செய்யப்பட்ட மீள் மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றம் | | **(7,416)** | - | **7,416** | - |
| சீராக்கங்கள் மற்றும் மீள்வகைப்படுத்தல்களின் தேறிய விளைவு | - | **(181,909)** | - | - | **(181,909)** |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றம் | - | - | **22,358,038** | **(22,358,038)** | - |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய நியாயமான பெறுமதி /(நட்டம்) | - | - | **(1,643,188)** | - | **(1,643,188)** |
| **2006 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **15,000** | **473,057** | **90,712,965** | **12,148,493** | **10,349,515** |

## இலங்கை மத்திய வங்கி
## நிதியியல் கூற்றின் பகுதியாக வாசிக்கப்பட வேண்டியவை

| | | 31.12.2006இல் உள்ளவாறு ('000 ரூபா) | 31.12.2005இல் உள்ளவாறு ('000 ரூபா) |
|---|---|---|---|
| 1. | **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்** | | |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள நிலுவைகள் | **1,182,304** | 2,487,257 |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்கள் | **86,968,117** | 112,950,743 |
| | ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையான வைப்புக்கள் | **9,416,427** | 14,244,835 |
| | பெடரல் ஓ. வங்கியுடனான மீள்கொள்வனவு உடன்படிக்கை கணக்குகள் | **8,034,838** | 16,445,975 |
| | | **105,601,686** | 146,128,811 |
| 2. | **நிதியியல் சொத்துக்கள்** | | |
| | இலாப மற்றும் நட்டங்களூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | **107,413,474** | 104,937,757 |
| | இலாபம் அல்லது நட்டங்களூடாக சந்தைப் பெறுமதியில் தங்கத்தில் குறிக்கப்பட்ட பிணையங்கள் | **11,905,227** | 8,743,882 |
| | விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | **68,211,989** | 13,992,948 |
| | | **187,530,690** | 127,674,587 |
| 3. | **பன்னாட்டு நாணயம் நிதியம் தொடர்பான மொத்தச் சொத்துக்கள்** | | |
| | சிறப்பு எடுப்பனவு உரிமையிலுள்ள உடைமைகள் | **291,772** | 154,585 |
| | பன்னாட்டு நாணய அனுமதிப் பங்கு | **66,984,442** | 60,336,970 |
| | **பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான மொத்தச் சொத்துக்கள்** | **67,276,214** | 60,491,555 |
| 4. | **அரசுக்கான முற்பணங்கள்** | | |
| | சுழலும் கொடுகடன் | **49,015,400** | 39,746,300 |
| | **அரசுக்கான மொத்தக் கடன்கள்** | **49,015,400** | 39,746,300 |
| 5. | **ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | |
| | வெளிநின்ற மூலதனம் | **2,198,616** | 2,461.951 |
| | சுசகன, சுனாமி கடன் திட்டத்தின்கீழ் பெறத்தக்கவை | **2,467,332** | 2,441,860 |
| | பெறத்தக்க வட்டி | **4,217,107** | 5,100,696 |
| | **பெறத்தக்க மொத்தம்** | **8,883,045** | 10,004,507 |
| | **கழிக்குக:** ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஏற்பாடு | **(2,178,492)** | (2,434,822) |
| | இடைநிறுத்தப்பட்ட வட்டி | **(4,217,107)** | (5,100, 696) |
| | **தேறிய பெறத்தக்கவை** | **2,487,446** | 2,468,989 |
| 6. | **நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்** | | |
| | வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | **12,185** | 12,248 |
| | பிச் ரேட்டிங் லங்கா லிமிடெட் | **29,500** | 29,500 |
| | வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் லிமிட் | **3,500** | 3,500 |
| | | **45,185** | 45,248 |
| 7. | **இருப்புக்கள்** | | |
| | சுற்றோட்டத்திற்கான தாள்கள் | **1,757,198** | 1,126,682 |
| | சுற்றோட்டத்திற்கான நாணயக் குத்திகள் | **440,354** | 213,702 |
| | இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள் | **96,600** | 43,627 |
| | | **2,294,152** | 1,384,011 |
| | **கழிக்குக: மெதுவாக அசையும் விடயங்களுக்கான ஏற்பாடு** | **(55,300)** | (55,300) |
| | | **2,238,852** | 1,328,711 |
| | எழுதுகருவிகள் மற்றும் நானாவிதப் பொருட்கள் | **28,685** | 22,966 |
| | கிரயம் மற்றும் தேறிய கைத்தேறத்தக்க பெறுமதியின் குறைந்த பெறுமானத்தில் மொத்த இருப்புக்கள் | **2,267,537** | 1,351,677 |

**8. சொத்து பொறி மற்றும் கருவிகள்**

| கொண்டிருக்கும் பெறுமதி | காணியும் கட்டடமும் ரூபா '000 | கருவிகள் ரூபா '000 | அலுவலகத் தளபாடமும் பொருத்துக்களும் ரூபா '000 | ஏனையவை ரூபா '000 | மொத்தம் 31.12.2006 உள்ளபடி ரூபா '000 | மொத்தம் 31.12.2005 உள்ளபடி ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த தேய்மானம் பெறுமதிக் குறைப்பிற்கான ஏற்பாடு நீங்கலாக சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 6,404,761 | 881,856 | 220,746 | 209,745 | **7,717,108** | 8,238,062 |
| புதிதாக வாங்கப்பட்டவை | 11,843 | 1,907 | 23,762 | 64,721 | **102,233** | 146,982 |
| விற்பனை செய்யப்பட்டவை | (14,696) | - | (13) | - | **(14,709)** | - |
| மீள் பகுப்பாய்வு செய்யப்பட்ட / பதிவழிக்கப்பட்டவையில் தேறிய விளைவு | (282,560) | - | - | - | **(282,560)** | (209,060) |
| ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் | (92,748) | (52,366) | (48,579) | (157,196) | **(350,889)** | (458,876) |
| ஒன்று சேர்ந்த தேய்மானம் நீங்கலாக திசெம்பர் 31ஆம் நாள் உள்ளவாறு | 6,026,600 | 831,397 | 195,916 | 117,270 | **7,171,183** | 7,717,108 |

| | 31.12.2006இல் உள்ளவாறு ('000 ரூபா) | 31.12.2005இல் உள்ளவாறு ('000 ரூபா) |
|---|---|---|
| **9. அருவச் சொத்துக்கள்** | | |
| கணனி மென்பொருள் செலவு | | |
| செலவு: | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **463,149** | 463,149 |
| புதிதாக வாங்கப்பட்டவை | - | - |
| விற்கப்பட்டவை | - | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **463,149** | 463,149 |
| பதிவளிப்பும் பெறுமதி குறைவும் | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **347,362** | 231,575 |
| ஆண்டிற்கான பதிவளிப்புக் கட்டணம் | **115,787** | 115,787 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | **463,149** | 347,362 |
| தேறிய ஏட்டுப் பெறுமதி | | |
| சனவரி 1இல் உள்ளவாறு | **115,787** | 231,574 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு | - | 115,787 |
| **10. வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க தொகை** | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **9,587,227** | 15,226,975 |
| ஏனைய நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **547,497** | 404,005 |
| | **10,134,724** | 15,630,980 |
| **11.. பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்** | | |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற | **26,036,677** | 23,704,228 |
| வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **279,102** | 15,232,384 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **11,482,955** | 10,343,397 |
| ப.நா. நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள் | **33,689,353** | 30,390,652 |
| அனுமதிப் பங்குப் பொறுப்பு | **25,544,136** | 22,964,343 |
| | **70,995,546** | 78,930,776 |
| **பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான மொத்தப் பொறுப்புக்கள்** | **97,032,223** | 102,635,004 |

| | | 31.12.2006இல் உள்ளவாறு ('000 ரூபா) | 31.12.2005இல் உள்ளவாறு ('000 ரூபா) |
|---|---|---|---|
| 12. | **வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | | |
| | **வங்கிகளின் வைப்புக்கள்:** | | |
| | - தொடர்பான தரப்பினர் | **35,299,563** | 28,801,112 |
| | - ஏனையோர் | **47,306,679** | 36,677,286 |
| | | **82,606,242** | 65,478,398 |
| | **நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்:** | | |
| | - தொடர்பான தரப்பினர் | **60** | 863 |
| | - ஏனையோர் | **9,085** | 4,319 |
| | | **9,145** | 5,182 |
| | | **82,615,387** | 65,483,580 |
| | கழிக்குக: ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழான முற்பணங்கள் | - | - |
| | வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள் | **82,615,387** | 65,483,580 |
| 13. | **அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நிலுவைகள்** | | |
| | அரசுடனான வைப்புக்கள் | **741.648** | 372,485 |
| | அரச முகவர்கள் மற்றும் நிதியங்கள் | **614,703** | 559,107 |
| | | **1,356,351** | 931,592 |
| 14. | **ஊழியர் நன்மைகள் திட்டங்களிலுள்ள நிலுவைகள்** | | |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொடர்பான தரப்பினர் | **2,137** | 153,160 |
| | ஊழியர் இளைப்பாறல் ஓய்வூதிய திட்டம் - தொடர்பான தரப்பினர் | **1,558,055** | 40,393 |
| | விதவைகள் /விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதித்திட்டம் - தொடர்பான தரப்பினர் | **693,479** | 5,791 |
| | வெகுமதி தொடர்பாக கொடுபடத்தக்கவை | **35,235** | - |
| | மருத்துவ நன்மைத் திட்டம் தொடர்பாகக் கொடுபடத்தக்கவை | **466,030** | - |
| | **மொத்த ஏனைய வைப்புக்கள்** | **2,754,936** | 199,344 |
| 15. | **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | |
| | மூலதனம் | **15,000** | 15,000 |
| | நடுத்தர நீண்டகால கொடுகடன் ஒதுக்குகள் | **9,425,000** | 9,425,000 |
| | மூலதனப் பங்களிப்புக் கணக்கு | **577,859** | 577,859 |
| | நிலையான சொத்து மீள் மதிப்பீட்டுக் கணக்கு | **473,057** | 662,382 |
| | சந்தைப் பெறுமதியிடல் ஒதுக்கு - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் | **(1,778,265)** | (135,077) |
| | ஆண்டுக்கான இலாபம் | **27,851,616** | (6,246,477) |
| | பன்னாட்டு ஒதுக்கு மீள்மதிப்பீடு | **52,610,034** | 30,251,996 |
| | ஏனைய ஒதுக்குகள் | **14,175,214** | 42,584,950 |
| | | **103,349,515** | 77,135,633 |
| 16. | **நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | காசு, காசுக்குச் சமமானவைகள் | **4,460,836** | 3,912,533 |
| | நிதியியல் சொத்துக்கள் | **6,191,870** | 2,925,756 |
| | பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் | **133,893** | 86,182 |
| | **வெளிநாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **10,786,599** | 6,924,471 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | முதலீட்டுச் சொத்துப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | **5,173,853** | 6,080,553 |
| | நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | - | 14,209 |
| | ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **157,117** | 43,672 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்தக்களிலிருந்தான மொத்தத் தேறிய வட்டிவருமானம்** | **5,330,970** | 6,138,433 |
| | **நிதியியல் சொத்திலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **16,117,569** | 13,062,904 |

| | | 31.12.2006இல் உள்ளவாறு ('000 ரூபா) | 31.12.2005இல் உள்ளவாறு ('000 ரூபா) |
|---|---|---|---|
| 17. | **நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| | **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| | ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு கொடுபடவேண்டிய தொகைகள் | **1,154,945** | 548,417 |
| | பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **1,064,836** | 1,249,248 |
| | மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | **36,188** | - |
| | ஏனைய வெளிநாட்டுக் கொடுபடத்தக்கவை | **2,509** | 2,068 |
| | **வெளிநாட்டு நாணய நிதிய பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டி செலவு** | **2,258.478** | 1,799,733 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலிருந்தான வட்டி செலவு** | | |
| | மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | **381,426** | 839,599 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலிருந்தான மொத்த வட்டி செலவு** | **381,426** | 839,599 |
| | **நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **2,639,904** | 2,639,332 |
| 18. | **ஏனைய வருமானம்** | | |
| | பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர் | **3,683** | 9,121 |
| | - ஏனையவர்கள் | **525** | 16,222 |
| | சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையின் மீதான இலாபம் | **316** | 16,583 |
| | நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள முதலீடுகளை விற்பதன் மீதான இலாபம் | **344** | 622,913 |
| | பிற்போடப்பட்ட கொடைகளின் பதிவளிப்பு | **221,835** | 218,676 |
| | பல்வகை வருமானம் | **483,708** | 218,176 |
| | **ஏனைய மொத்த வருமானம்** | **710,411** | 1,101,691 |
| 19. | **ஆளணிச் செலவுகள்** | | |
| | தொழில் தருநரினால் செலுத்தப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும்வரி உட்பட சம்பளங்களும் கூலிகளும் | **1,292,044** | 911,107 |
| | வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவு தொகைத் திட்டச் செலவுகள் | **181,476** | 149,168 |
| | ஊழியத்துக்குப் பின்னரான வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவுகள் | **4,625,893** | 1,148,180 |
| | | **6,099,413** | 2,208,455 |
| 20. | **நிர்வாகச் செலவுகள்** | | |
| | திருத்தங்களும் பேணல்களும் | **337,176** | 312,417 |
| | தகவல் | **76,059** | 70,088 |
| | தொழில்ரீதியான பயணம் | **16,876** | 23,009 |
| | வாடகைச் செலவுகள் | **1,547** | 349 |
| | அச்சிடல் | **17,732** | 15,645 |
| | கணக்காய்வுக் கட்டணம் | **10,013** | 8,200 |
| | நாணச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | **591** | 437 |
| | ஓய்வுபெற்றோருக்கான மருத்துவ நன்மைகள் | - | 20,519 |
| | சொத்துக்கள், கருவிகள் பொறிகளுக்கான பதிவளிப்புக்கள் | - | 93,049 |
| | இலங்கை மத்திய வங்கி சேம நிதிய வட்டிச் செலவு | **195,000** | 155,178 |
| | பல்வகை | **221,638** | 277,153 |
| | | **876,632** | 976,044 |
| 21. | **தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணைக்கப்படுத்தல்** | | |
| | **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | **27,851,616** | (6,246,477) |
| | **கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| | தேய்மானம் | **466,672** | 458,876 |
| | பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(5,313,769)** | (6,080,552) |
| | அறவிடமுடியாக்கடன் பதிவழித்தல்/ (மீண்டும் பதிவு செய்தல்) | **9,960** | (82,700) |
| | வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஊழியர் நன்மைத் திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கு | **4,625,893** | 1,148,180 |
| | பெறப்படாத தேறிய வெளிநாட்டுச் செலாவணி (இலாபம் / குறைப்பு) | **(22,711,030)** | 14,658,179 |
| | ஏனைய ஒதுக்கங்கள் | **1,505,358** | (277,325) |
| | பிற்போடப்பட்ட கொடைகள் | **(218,676)** | (218,676) |

| | 31.12.2006இல் உள்ளவாறு ('000 ரூபா) | 31.12.2005இல் உள்ளவாறு ('000 ரூபா) |
|---|---|---|
| **கூட்டுக(கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவுகள்** | | |
| இருப்புக்களின் (அதிகரிப்பு) / குறைப்பு | **(915,860)** | (400,888) |
| பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைப்பு | **(1,010,442)** | (523,788) |
| பல்வகைப் பொறுப்புக்களின் (அதிகரிப்பு) / குறைப்பு | **(2,812,803)** | (5,583) |
| கொடுபடத்தக்க வட்டியில் (அதிகரிப்பு) / குறைப்பு | **124,774** | 145,736 |
| ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைப்பு | **(66,088)** | 46,330 |
| **கூட்டுக(கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| முதலீடுகளிலிருந்தான வருமானம் | **(4,840)** | (10,137) |
| பெறப்பட்ட பங்கிலாபம் | **(4,208)** | (25,343) |
| சொத்துக்கள், பொறிகள், கருவிகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்டவை | **(316)** | (16,582) |
| முதலீடுகளின் விற்பனையிலிருந்தான இலாபங்கள் | **(343)** | (612,776) |
| பெறப்படாத தேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **80,208** | 90,502 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **1,606,106** | 2,046,975 |
| **22. அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல்/ (எடுப்பனவுகள்)** | | |
| இலங்கை அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சி | **(132,655.180)** | (133,512,344) |
| முதலீட்டுச் சொத்துப் பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **148,788.162** | 102,127,387 |
| பெறப்பட்ட வட்டி- உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப் பட்டியல் | **(5,733,735)** | (5,728,286) |
| இலங்கை அரசுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு/ (குறைப்பு) | **9,269,100** | 4,955,200 |
| அரச, அரச முயற்சிகளுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(424,759)** | (39,157) |
| பெறப்பட்ட அரச கொடைகள் | - | (67,877) |
| | **(19,243,588)** | (32,265,077) |
| **23. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (எடுப்பனவுகள்)** | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **(17,131,807)** | (1,181,024) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான ஒரு நாளுக்குள்ளான திரவ வசதி (அதிகரிப்பு) / குறைப்பு | - | (10,432,493) |
| | **(17,131,807)** | (11,613,517) |
| **24. ஆண்டு முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை** | | |
| **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **105,601,686** | 146,128,811 |
| **ஆண்டு முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை** | **105,601,686** | 146,128,811 |

**1.1 இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்கள் தொடர்பாக அதன். பொறுப்புக் கூறும் தன்மை மற்றும் நிதியியல் செயலாற்றம்**

இலங்கை நாணயவிதிச் சட்டத்தின் கீழ் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைகளின் நிருவாகம், மேற்பார்வை, ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றிற்கு பொறுப்பான மேலாண்மை நிறுவனமாக மத்திய வங்கி நிறுவப்பட்டது. இச்சட்டத்திற்கிணங்க, மத்திய வங்கி பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய மையக்குறிக்கோள்களை அடைவதற்கு பொறுப்புடையதாக இருந்து வருகிறது.

ஆகவே, மத்திய வங்கியின் பொதுமக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தன்மை மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றி என்பனவற்றின் அடிப்படையில் அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் காத்திரமானதன்மை அதன் மையக் குறிக்கோள்களை எய்துவதற்கு இட்டுச் செல்ல வேண்டுமேயன்றி, அதனளவில் இலாபமீட்டுவது அவசியமானதல்ல. இந்த நியதிக் குறிக்கோள்களே ஏனைய அரச அல்லது தனியார் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியினை வேறுபடுத்தும் அடிப்படைப் பண்புகளாக விளங்குகின்றன. இதன்படி, இலாபத்தன்மையுடன் தொடர்பான அணுகுமுறையினை மத்திய வங்கி மேற்கொண்டிருந்திருக்குமாயின், வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்களில் செல்வாக்கினை ஏற்படுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கை நடவடிக்கைகளினூடாக அதன் இலாபங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடிய தனியாற்றலை அது கொண்டிருப்பதனால் அதன் மையக் குறிக்கோள்களை விட்டுக் கொடுக்கின்ற அதேவேளையில் வங்கி இலாபங்களை பெற்றிருந்திருக்க முடியும். ஆகவே, மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு என்பனவற்றைப் பின்பற்றும் தனித்தன்மை கொண்ட நிறுவனமாக இருப்பதற்கு, தற்செயலான அல்லது கோட்பாடு ரீதியாக முக்கியமாக இருக்க வேண்டிய வெறுமனே இலாபத்தன்மை கொண்ட குறிக்கோள்களிலிருந்தும் தனித்திருப்பது அவசியமானதாகும்.

இப்பின்னணியில், மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் அதன் நாணயக்கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணிவீத முகாமைத்துவம், நாணய வழங்கல் போன்றன அவை பெறப்பட்டவாறு அவற்றின் பெறுமதியிலும் பொதுவான பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறும் தன்மையினை நிறைவேற்றுகின்றமையின் ஒரு பகுதியாக நிதியியல் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய தன்மைக்கு அடிப்படையொன்றினை வழங்குவதற்காக ஏற்புடைத்தான கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக, இக்கூற்றில் அறிக்கையிடப்பட்டவாறான நிதியியல் செயலாற்றமானது இப்பின்னணியின் அடிப்படையிலேயே விளக்கப்படவும் விளங்கிக் கொள்ளப்படவும் வேண்டும்.

**1.2 அறிக்கையிடுகின்ற நிறுவனமும் நியதி அடிப்படையும்**

இவை இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றிற்கு பொறுப்பான அதிகாரசபையாக திருத்தப்பட்டவாறு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்ட விதியின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கூற்றுக்களாகும். இலங்கை மத்திய வங்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ளதுடன் இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1இல் அமைந்திருக்கிறது.

**1.3 கணக்கீட்டுக் கொள்கை**

**1.3.1 தயாரிப்பிற்கான அடிப்படை**

நிதியியல் கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினால் அடையாம் காணப்பட்டவாறு நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டடம், குறிப்பிடத்தக்க நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த, வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அறிக்கையிடுகின்ற வடிவம்**

வங்கியானது நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. ஐந்தொகையில்ஈ அத்தகைய தனித்தன்மை பெற்ற வகையிலுள்ள திரவத்தன்மையின் பொருட்டு சொத்துக்களும் பொறுப்புக்களும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவ் அறிக்கையிடும் அணுகு முறையானது முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் 1.5இல் மிக முழுமையாக விபரிக்கப்பட்டவாறு வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**இணங்குவிப்புக் கூற்று**

31 திசெம்பர் 2006இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**காட்டப்படும் நாணயம்**

வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திலேயே தரப்பட்டுள்ளன.

**1.3.2. முக்கியமான கணக்கீட்டு தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள்**

கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செய்முறையின் போது நிதிக்கூற்றில் அடையாளம் காணப்பட்ட தொகைகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவற்றில் நிதியியல் கூற்றுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையின்மீது கணிசமான தாக்கங்களைக் கொண்டுள்ளன. மதிப்பீட்டில் சம்பந்தப்படுத்துவதிலிருந்தும் வங்கி விலகி பின்வரும் தீர்ப்புக்களை வழங்கியது.

**விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டின் பெறுமதி இழப்பு**

செலவினைவிட சந்தைப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்கக் கூடிய வீழ்ச்சி காணப்படும்பொழுது விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் பெறுமதி குறைவடைந்ததனை வங்கி தீர்மானிக்கின்றது. இந்த தீர்மானமானமெடுத்தலில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்க கூடியளவு தொடர்பான தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு பெற்றதன் பின்னரான நன்மைத் திட்டங்கள்**

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுடைய செலவானது உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப் படுகிறது. உண்மைப் பெறுமதியிடலானது கழிவிட்டு வீதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்படும் திரும்பல் வீதங்கள், எதிர்கால இழப்பீட்டு தொகைகளுக்கான அதிகரிப்புக்கள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் என்பன பற்றிய எடுகோள்கள் மேற்கொள்ளப்படுவதனை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய திட்டங்களின் நீண்டகாலத்

தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்கனவான நிலையற்ற தன்மையினால் மாற்றமுறலாம்.

### 1.3.3 இந்த ஆண்டுக் காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட திருத்தப் பட்ட பன்னாட்டு நிதி அறிக்கையின் நியமங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகளானது, கடந்த ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட கொள்கைகளுடன் மாற்றமுறாமல் காணப்படுகின்றது. வங்கியானது நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள் தொடர்பில் பன்னாட்டு கணக்கியல் நியமம் 39: நிதியியல் சாதனங்கள் அங்கீகரித்தல் மற்றும் அளவிடல், பின்பற்றப்பட்டுள்ளது. புதிதாக பின்பற்றப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் குறிப்பு 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.3.4 அமுலுக்குக் கொண்டுவரப்படாத வெளியிடப்பட்ட நியமங் களுக்கான நியமங்கள், விளக்கவுரைகள் மற்றும் திருத்தப் பிரேரணைகள்

தற்போதுள்ள நியமங்களிற்குப் பதிலாக பிரசுரிக்கப்பட்ட சில புதிய நியமங்கள், திருத்தங்கள், விளக்கவுரைகள் ஆகியன வங்கியினுடைய 01 சனவரி 2007 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும் கணக்கிடல் காலத்துக்கோ அல்லது பின்னரான காலத்திற்கோ பொருத்தமானதாகும்,ஆனால் வங்கியானது இவற்றை முன்கூட்டியே இணைக்கவில்லை, அவைகளாவன:

பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 7, நிதியியல் கருவிகள்: பன்னாட்டுக் கணக்கியல் நியமம் 1 நிதிக்கூற்றுக்களின் வெளியீடுகள் மூலதன வெளிப்படுத்தலிற்கான வெளிப்படுத்தல்கள் மற்றும் மேலதிக திருத்தங்கள் (2007 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும்), பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 7 நிதிக் கருவிகள் பற்றிய தகவல்களை முன்னேற்றுவதற்காக புதிய வெளிப்படுத்தல்களை அறிமுகப்படுத்துகிறது. இது கடன் இடர்நேர்வுகள், திரவத்தன்மை இடர்நேர்வுகள் சந்தை இடர்நேர்வுகளைப் பற்றிய குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக நிதியியல் கருவிகளில் இருந்து எழுகின்ற இடர்நேர்வுகளுக்கு பாதிக்கக்கூடிய தன்மை பற்றிய தரம் மற்றும் கணிய தகவல்களுடைய வெளிப்படுத்துகையைத் தேவைப்படுத்துகிறது. இது பன்னாட்டு கணக்கியல் நியமம் 30, வங்கிகள் மற்றும் அதையொத்த நிதி நிறுவனங்களுடைய நிதிக் கூற்றுக்களின் வெளிப்படுத்துகை, மற்றும் பன்னாட்டு கணக்கியல் நியமம் 32, நிதிக்கருவிகள்: வெளிப்படுத்தல்கள் மற்றும் வெளியிடுதல் என்பவற்றின் வெளிப்படுத்தல் தேவைகள் என்பவற்றை பிரதியீடு செய்கிறது. பன்னாட்டு நிதி அறிக்கை நியமத்தின்கீழ் அறிக்கையிடும் அனைத்து நிறுவனங்களுக்கும் இது பிரயோகிக்கப்படும். பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 1 இன் திருத்தம் ஆனது ஒரு நிறுவனத்தினுடைய மூலதனத்தின் அளவு மற்றும் இது எவ்வாறு வெளிப்படுத்தல்களை அறிமுகப்படுத்துகிறது. வங்கியானது பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 7 மற்றும் பன்னாட்டு கணக்கியல் நியமம் 1 க்கான திருத்தம் என்பவற்றுடைய தாக்கத்தை அளவிடும் செய்முறையை செய்கிறது.

பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 8, செயற்பாட்டுப் பகுதிகள் (2007 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும்) பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 8ஆனது, ஒரு நிறுவனம் தனது வருடாந்த நிதி அறிக்கைகளில் அதனது செயற்பாட்டு பகுதிகள் பற்றிய தகவல்களை எவ்வாறு அறிக்கையிடல் என்பது பற்றி விபரிக்கிறது. வங்கியானது பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமம் 8 மற்றும் இதனது சுயமான பிரயோகம் என்பனவற்றின் தாக்கங்களை அளவிடும் செய்முறையை நடைமுறைப்படுத்துகிறது.

## 1.4 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் கூற்று

### 1.4.1 வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்

வங்கிகளின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாக இலங்கை ரூபா காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களின் கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற நாளன்று நடைமுறையில் இருந்த நாணய சந்தை விலையின் அடிப்படையில் குறிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் ஏற்புடைத்தாயிருந்த செலாவணிவீத சந்தை விலையை பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மீளமாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றிற்கு கொண்டு செல்லப்பட்டன. மீள்மாற்றல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பின்வருமாறு.

| | **2006**<br>ரூபா | 2005<br>ரூபா |
|---|---|---|
| அவுத்திரேலிய டொலர் | **85.2221** | 74.6987 |
| கனடா டொலர் | **92.8256** | 87.7484 |
| யூரோ | **141.5844** | 120.9629 |
| யப்பானிய யென் | **0.9050** | 0.8661 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | **162.0330** | 145.9530 |
| இசுடேர்லிங் பவுண் | **211.2861** | 175.9428 |
| ஐ.அ.டொலர் | **107.7056** | 102.1172 |

வரலாற்று செலவு அடிப்படையில் கணிக்கப்பட்ட நிதிசார் அல்லாத வெளிநாட்டு நாணய விடயங்கள் முதல் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த திகதிகளில் உள்ள நாணயமாற்று வீதங்களில் மாற்றப்பட்டுள்ளது.

### 1.4.2 நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் பொறுப்புக் களையும் அவற்றுடன் இணைந்த வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சல்களையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியினது வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்தவ தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்றது. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், நாணயங்களை வழங்குதல் மற்றும் வங்கித் தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரதிபலிக்கின்றன.

வங்கியின் நிதி நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைச் சிறந்த முறையில் வழங்குவதற்காக இந் நடவடிக்கைகளை தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுவது நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங் காணப்பட்டுள்ளதுடன், இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவைத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்துக் கிரமமான

வழிக் கொள்வனவுகளும் விற்பனைகளும் வர்த்தகம் செய்யப்பட்ட திகதியில் இனங் காணப்பட்டன. கிரமமான வழிக் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளான நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளிற்கு ஒழுங்குவிதிகளின் மூலம் அல்லது சந்தையின் மரபு வழிமுறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் வழங்கல் தேவைப்படுகின்றது.

### இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தை பெறுமதியிலான பிணையங்கள்

வர்த்தக நடவடிக்கைக்காக வைத்திருக்கப்படுவது என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியிலான வகைப் பிணையங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த பிணையங்கள் விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப் படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில், வர்த்தகப்படுத்தக் கூடிய பிணையங்களின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி ஒன்றாகவோ இனங் காணப்படுகின்ற வேளையில் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பிணையம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள்மதிப்பீட்டிலிருந்து அடையப்படாத இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும், இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (பிணையத்தின் விற்பனை மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும்.

### வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்க தாகவுள்ள முதலீடுகள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாகவுள்ள முதலீடுகள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுதியில் ஏற்படும் மாற்றங்கள் ஐந்தொகையில் ஒதுக்குகளின் கீழ் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணைங்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங் காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும் இழப்புக்களும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கும்வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும்வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை உரிமையாண்மையில் தனியொரு கூறாக (ஐந்தொகையின் ஒதுக்குகளின் கீழ் காட்டப்படுகின்றது) இனங் காணப்படுகின்றது. அந்த நேரத்தில் முன்னர் மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது இழப்பு வருமானமாக உள்ளடக்கப்படும்.

### தங்கத்திலான பிணையங்கள்

வெளிநாடுகளிலுள்ள இணைக்கிணை நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தங்கப் பிணையங்கள் ஆரம்பத்தில் கிரகச் செலவில் குறிப்பிடப்படுகின்றன. தங்கத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும். தங்கம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள் பெறுமதியிடலிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (தங்கத்தினை விற்பதன் மூலமாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்படும் இலபமாக/ (இழப்பாக) பதியப்படும்.

### பெறுதிக் கருவிகள்

பெறுமதிக் கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டு ஒப்பந்தங்களில் காணப்படுகிறது. அத்தகைய பெறுமதி நிதியியல் கருவியின் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக இதை ஒத்த முதிர்ச்சி தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்பான வீதங்களில் கணிப்பிடப்படுகின்றன. இலாபம் அல்லது இழப்பு நிலையிலுள்ள அனைத்துப் பெறுமதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது ஐந்தொகையில் உள்ள விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

### பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுவதனைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில் ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இந் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகின்றது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாக கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து ப.நா.நிதிய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள் பெறுமதி யிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்து கட்டணங்களும் வட்டியும் வருமானக் கணக்கில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### காசும் காசிற்கு சமமானவைகளும்

காசும் காசிற்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்கியது.

உள்நாட்டு நாணயத்திலான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் மேற்கொள்ளுகின்றது. இவை காசின் நகர்வுடன் தொடர்பானவையல்ல, இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன் முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினூடான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையில், ஏலங்களில் கோரப்படாத திறைசேரி உண்டியல்களின் பகுதியின் கொள்வனவு மற்றும் அரசாங்கம், மத்திய வங்கி என்பவற்றால் நாணயக் கொள்கை நடைமுறையின் கீழ் வழங்கப்பட்ட பிணைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

அத்தகைய கொள்வனவுகள் விற்பனைகள் அல்லது அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாக பிரதிபலிக்கப்படுகின்றன. இவை நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 29, மற்றும் குறிப்பு 30 என்பவற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏக அதிகாரம்கொண்ட அதிகார சபையாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி நாணய விதிச் சட்டத்திற்கிணங்க, பொதுமக்களுக்கு நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியால் வழங்கல் செய்யப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனையும் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பாகவுள்ள வேளையில், உடமையாளரின் கையில் காசு விடயமாகவுள்ளது. சுற்றுறோட்டத்திலுள்ள நாணயத்திலான அசைவானது காசுப் பாய்ச்சல் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கின்ற, மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை முறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவு கட்டளை செயற்பாடுகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில் பெறப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசினை பகிர்ந்தளிக்கின்றது. இது ஒன்றில் சுற்றோட்ட பொறுப்பிலுள்ள நாணயங்களுடன் அல்லது வர்த்தக வங்கிகளிலுள்ள மீதிகளுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப் பட்டவாறு காசு/கொடுப்பனவு கட்டளையின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலான காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் ஐந்தொகையில் சொத்துக்களாக தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள் கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப் பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள் கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள் கொள்வனவு விலைக்குமிடையிலான வேறுபாடும், நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையிலான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இவை வருமானக் கூற்றில் செலவினமாகக் காட்டப்படுகின்றன.

நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) ஐந்தொகையில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

### முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணைகள்

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்களை உள்ளடக்குகின்றது. இவை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதனால் ஐந்தொகையில் இச் சொத்துப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்படும் செலவில் பதியப்படுகிறது.

### அரசிற்கான முற்பணங்கள்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிங்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### ஏனைய நிறுவனங்களிற்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகைகளிலிருந்து சேகரிக்கப்பட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதை கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன்களுக்கான (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிட முடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

### பிணையங்கள் கடன் வழங்கல்

கடன் கொடுக்கல் வாங்கல்களின் கீழான தொடர்புடைய தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல்கள் ஐந்தொகையில் மட்டுமே பிரதிபலிக்கின்றது. உடமையினுடைய இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் ஏதுமிருப்பின் அவையும் மாற்றப்பட்டுள்ளது.

### நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

நிதிச்சொத்தொன்று பின்வருவன தொடர்பாக பெறுமதி இழப்பு உடையதாக இருக்கின்றதோ என்பதனை அறிவதற்காக வங்கியானது ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது.

### கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள்

கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட கடன்கள் மற்றும் பெறுவனவுகள், பெறுமதி இழப்புக்கு உட்பட்டமை தொடர்பாக கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் காணப்படுமானால் இழப்பின் தொகையானது சொத்துக்களின் அளவுக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் நடப்பு பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் (உறப்படாத எதிர்காலவரவு இழப்புக்கள் நீங்கலாக) நிதிச் சொத்துக்களின் பயனுறுதியிலுள்ள வட்டி வீத மூலத்தில் கழிவிடப்பட்டு கணிக்கப்படுகின்றது. (உ+ ம் பயனுறுதியிலுள்ள வட்டி வீதமானது ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது) சொத்தின் அளவானது நேரடியாகவோ அன்றி மேலதிக கொடுப்பனவுக் கணக்கினை பாவிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும். இழப்பின் அளவானது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

வங்கியானது பெறுமதி இழப்பு காணப்படுவதற்கான

கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் குறிப்பிடத்தக்க தனிப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்டதாக மற்றும் குறிப்பிடத்தக்க தனிப்பட்டதற்ற நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்ட அல்லது ஒன்று சேர்ந்ததாக காணப்படுவதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட மதிப்பீட்டில் நிதிச் சொத்தில் பெறுமதி இழப்பு காணப்படுவதற்கான எந்த கண்டு கொள்ளக்கூடிய ஆதாரமும் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டால், குறிபிடத்தக்கதோ அன்றி குறிப்பிடத்தக்கதற்றதோ சொத்தானது அதே வரவு இடர்நேர்வு பண்புகளுடன் நிதிச் சொத்துக்களின் குழுவுக்குள் உள்ளடக்கப்படுவதுடன் அந்த நிதிச் சொத்துக்களின் குழு பலவீனத்திற்காக ஒன்றுசேர்த்து மதிப்பிடப்படுகின்றது. பலவீனத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் தொடர்ச்சியாக இனங்காணப்பட்ட பலவீன இழப்புக்கள் பலவீனத்தின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

ஒரு தொடர்ச்சியான காலத்தில் பலவீன இழப்பு வீழ்ச்சியடைவதுடன் அவ்வீழ்ச்சி பல்லின இழப்பு இனங் காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக் கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட பலவீன இழப்பு எதிர்மறையாக்கம் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. அத்துடன் எதிர்மறையாக்கல் திகதியில் சொத்து கொண்டுள்ள பெறுமதி அதன் கடன்தீர் செலவினை விஞ்சாது.

### விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சொத்து பலவீனப்பட்டால், ஒரு தொகையானது செலவிற்கும்(எந்த ஆரம்ப கொடுப்பனவு மற்றும் கடன் தீர்ப்பனவு பெறுமதியின் நிகர பெறுமதி)மற்றும் அதன் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம், இலாபத்திலோ அல்லது இழப்பிலோ முன்னர் இனங்காணப்பட்ட எந்த பெறுமதி இழப்பையும் கழிவீடு செய்தல் என்பன அதன் நிகர மதிப்பில் வருமானக் கூற்றிற்கு மாற்றப்படும். நிகர மதிப்பீட்டு கருவிகளிலான எதிர்மறையாக்கல்கள் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேறுபடுத்தல்களாக இலாபத்தில் இனங்காணப்படவில்லை. கருவிகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பானது பலவீன இழப்பொன்று இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ இனங்காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் கடன் கருவிகளினாலான பெறுமதி இழப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக எதிர்மறையாக்கப்படும்.

### வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள்

வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன்தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றல்கள் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாக தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக் கணக்கில் செலவுகளாக இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பில் மீள் கொடுப்பனவினூடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகிறது.

### நிதியியல் உத்தரவாதங்கள்

நிதியியல் உத்தரவாதங்களானது நிதி அறிக்கைகளில் நியாயமான பெறுமதியிலேயே ஆரம்பத்தில் மதிப்பிடப்படுகின்றது. இவை ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் நியாயமான பெறுமதியில் காட்டப்படுகிறது. ஆரம்ப மதிப்பீட்டைத் தொடர்ந்து வங்கியினுடைய ஒவ்வொரு உத்தரவாதங்களினதும் பொறுப்புக்கள், அத்தகைய உத்தரவாதங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் நிதியியல் கடப்பாடுகளை தீர்க்கத் தேவைப்படும் செலவுகளுடைய சிறந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது.

### ஏனைய நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

## 1.4.3. ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

### துணை நிறுவனங்களில் முதலீடுகள்

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன. உரிமையாண்மை முறைமையின் கீழ் கணக்கிடப்படாத அத்தகையவற்றினுடைய விளைவுகள் கணிசமானவையல்ல.

### தங்க இருப்பு

உயர்ந்த திரவத் தன்மையைக் கொண்ட பண்டமான தங்க இருப்பு கிரயச்செலவில் வைத்திருக்கப்படுகின்றது.

### இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயச் செலவு அல்லது விற்றுப்பெறக்கூடிய பெறுமதி இவற்றின் குறைந்த பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவு நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

### சொத்து, பொறி மற்றும் கருவி

நாளுக்கு நாள் சேவையின் கிரயச் செலவுகள் நீங்கலாக பெறுமதியிலான திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு என்பன கழிவு செய்யப்பட்டு சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் கிரயச் செலவில் குறிப்பிடப்படுகின்றது. இனங்காணப்பட்ட பிரமாணத்தை உள்ளடக்கப்படும் செலவானது அடையும் பொழுது குறிப்பிட்ட கிரயச் செலவுகள், குறிப்பிட்ட சொத்து, பொறி மற்றும் கருவிகளின் பாகங்களை மாற்றியமைத்தலுக்கான செலவினையும் உள்ளடக்கி இருக்கும். காணி மற்றும் கட்டடங்கள் காணி மீதான பெறுமானத் தேய்வுகள் மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியைத் தொடர்ந்து அறவிடப்பட்ட பெறுமதி இழப்புக்கள் என்பவற்றைக் கழித்து பெறப்பட்ட நியாயமான பெறுமதியில் கணிப்பிடப்படுகிறது.

பெறுமானத் தேய்மானமானது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற் கொண்டு நேர்கோட்டு வழிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப் பெற்றுக் கொள்ள முடியாதபோது, நிகழ்வு அல்லது மாற்றம் குறிகாட்டும் சந்தர்ப்பத்தில் பொறி மற்றும் கருவிகளின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்பிற்காக மதிப்பிடப்படுகின்றது. கீழ்வரும் செலவு, காணி மற்றும்

| சொத்துக்களின் வகை | பயனுறுதிக்காலம் |
|---|---|
| இலவச காணியிலான கட்டடங்கள் | 50ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணியிலான கட்டடங்கள் | குத்தகைக்காலத்திற்குமேல் |
| பொறி மற்றும் பொறி செய்பாகங்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் | 4 ஆண்டுகள் |
| வாசிப்பதற்கு பயன்படும் பொருட்கள் | 3 ஆண்டுகள் |

கட்டடங்களிலான ஆரம்ப இனங்காணல்களில் முன்கொண்டுவரும் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையானது கட்டடங்கள் மற்றும் தொடர்ந்துவரும் திரண்ட பலவீன இழப்புக்களிலான தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத் தேய்வுகள் கழிவீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலான சந்தைப் பெறுமதியாகும்.

மீள் மதிப்பிடப்பட்ட சொத்தினது சந்தைப் பெறுமதியானது முன்கொண்டு வரப்படும் தொகையிலிருந்து வேறுபடுவதில்லை என்பதனை நிச்சயப்படுத்த அடிக்கடி மேற்கொள்ளும் மீள்மதிப்பீடானது போதுமானதாகும்.

முன்னரே வருமானச் செலவு கூற்றில் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு பெறுமதிகளிலான குறைவுகளிற்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட ஒதுக்குகள் தவிர்ந்த மதிப்பீட்டின் மிகைகள் ஐந்தொகையின் உரிமையாண்மைப் பகுதியில் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினுள் வரவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வருடத்தின் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள அதே சொத்தின் பதிவழிக்கப்பட்ட பற்றாக்குறை தவிர்ந்த மறுமதிப்பீட்டின் பற்றாக்குறை தொகையானது வருமானக் கூற்றில் இனங் காணப்படுகின்றது. பாவனை அல்லது ஒதுக்கிவைத்தலில் எதிர்காலத்தில் எந்தப் பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதபோது அல்லது சொத்து, பொறி மற்றும் கருவியின் பாகம் ஒன்று ஒதுக்கிவைத்திலின் போது மீள் இனங் காணப்படுகின்றது. ஒதுக்கிவைத்திலின்போது விற்பனை செய்யப்பட்ட சொத்திற்கான மறுமதிப்பீட்டு மேலதிகத் தொகையானது நிறுத்திவைத்த இலாபத்திற்கு மாற்றப்படுகின்றது. சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்தரு ஆயுட் காலம் மற்றும் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான சந்தப்பங்களில் ஒழுங்காக சீராக்கப்படுகின்றது.

**அருவச் சொத்துக்கள்**

கணனி வன் பொருளுடன் சேர்க்கப்படாத கணனி மென்பொருள் ஆனது அருவச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதுடன் கிரயகச் செலவில் கணிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கணிப்பீட்டைத் தொடர்ந்து இத்தகைய அருவச் சொத்துக்களானது 4 வருட பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் ஒன்றுதிரட்டப்பட்ட பதிவளிப்புக்களை கிரயத்திலிருந்து கழித்துப்பெறப்பட்ட பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**பெறுவனவுகள்**

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பாக்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் குறிக்கோள் சான்றுகளின் அடிப்படையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நானாவிதச் சொத்துக்கள்**

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப் பெறத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிதிநிலைமைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள், கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்புக்கு உள்ளாக்கப்படலாம் என வெளிகாட்டுமாயின் வங்கியானது அதன் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், அதன் நிதிசாரா சொத்துக்கள் பெறுமதி இழப்புக்கு உட்படுவதாக வெளிக்காட்டப்படுகிறதா என அளவிட்டுக் கொள்ளும். ஏதாவது அத்தகைய குறியீடுகள் காணப்படுமாயின், வங்கியானது சொத்துக்களுடைய மீள் பெறுகை செய்யப்படக்கூடிய தொகையின் மதிப்பீட்டினை மேற்கொள்ளும். கொண்டு செல்லப்படும் சொத்துப் பெறுமதியானது மீள் பெறுகை செய்யக் கூடிய சொத்துப் பெறுமதியைவிட அதிகமாக காணப்படின். அந்தச் சொத்து, பெறுமதி இழப்புக்கு உட்பட்டதாக கருதப்படுவதுடன் அதன் மீள் பெறுகை செய்யக்கூடிய பெறுமதிக்கு மதிப்பிறக்கம் செய்யப்படும்.

**ஏற்பாடுகள்**

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்புரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும். ஏற்பாடு ஒன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங் காணப்படுகிறது.

**சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது, சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு பெற்றதன் பின்னரான நன்மை திட்டங்கள்**

வங்கியால் செயல்படுத்தப்படும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்குப் பின்னரான நலத்திட்டங்கள் பற்றிய விபரம் குறிப்பு 35இல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

**நிர்ணயிக்கப்பட்ட நன்மை திட்டங்கள்**

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், ஓய்வூதிய வெகுமதி, ஓய்வு பெற்றதன் பின்னரான மருத்துவ நன்மைகள் ஆகிய நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களை வங்கி நடைமுறைப்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களுக்கும் வங்கியும் திட்டத்திற்கு பொருத்தமான நன்மை பெறுவோரும் தனியாக நிர்ணயிக்கப்படும் நிதியமொன்றிற்கு உதவு தொகையினை செலுத்தி வருகின்றன. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழான நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

சேவைக்குப் பின்னரான செலவானது நன்மைகள் உரித்தாகும்வரை சராசரிக்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையில் இனங்காணப்படுகின்றது. அறிவுரையை பின்பற்றுவதன் மூலம் நன்மையானது ஏற்கனவே உரித்தாக்கப்பட்டிருக்குமானால் மாற்றங்கள், நன்மை திட்டம், சேவைக்குப் பின்னரான செலவு உடனடியாக இனங்காணப்படுகின்றது.

அனுபவ அடிப்படையிலான சீராக்கங்கள் மற்றும் திட்டமிடல் சொத்துக்களின் பெறுமதியில் 10 சதவீதத்திலும் விஞ்சியதான உண்மை எடுகோள்களின் மாற்றங்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடமைப்பாடுகளுடைய 10 சதவீதம் என்பவற்றிலிருந்து எழுகின்ற உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஊழியர்களுடைய எதிர்பார்க்கப்படும் மிதமாக உள்ள சராசரி வேலை காலத்தின் மீதான வருமானத்திற்கு எதிராக ஓர் ஒழுங்குமுறையில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும். இதன் விளைவாக உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் விரைவாக இனங் காணப்படுகிறது.

### நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள் தொடர்பான நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர் களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கின்றது. இவை தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வரும் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### கொடைகள்

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்கான உறுதிப்பாடு இருக்குமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடு செய்வதற்கு தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங் காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரசகொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம்வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக் கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

### ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் தொடர்பான செலவுகள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் கொடுபடத் தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள்மீது செலுத்தத்தக்க வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையை கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனம் காணப்படுகின்றது.

### வருமானவரி

1949ஆம் ஆண்டு திருத்தப்பட்டவாறான 58ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வங்கி வருமானமானத்திற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

### வருமானம் மற்றும் செலவினங்கள்

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக் கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக் கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங் காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து,பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

### வட்டி

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்து வருவாய்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

### பங்கிலாபங்கள்

பங்குடைமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டவுடன் பங்கிலாப வருமானம் இனங் காணப்படுகின்றது.

### பல்தரப்பட்டவை

பல்தரப்பட்ட வருமானமும், செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

எதிர்பாராத நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் உள்ளிட்ட எதிர்பாராத மற்றும் கடப்பாட்டு விடயங்கள்**

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடு என்பன ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என இனங்காணப்பட்ட தொடர்பான தலைப்புக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளன. பொருத்தமான வேளைகளில் அத்தகைய தொகைகள் சிறந்த மதிப்பிடல்களில் அளவிடப்படுகின்றது.

## 1.5 நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றுவதற்கு அல்லது மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பனவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- நாணய வெளியீடு
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப் பாட்டினையும் வசதிப்படுத்தல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும் முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமுகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பொருட்டு அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உளநாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும். இந்த நடவடிக்கைகளுடைய விளைவுகள், வருமானக் கூற்றின் அமைப்பில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் அர்த்தத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ்வெளியீட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது அரச பிணையங்கள், நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

**உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்**

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

அ. திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித் தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம்அல்லது வங்கித் தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சலையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்ததுடன் பெருமளவிற்கு தொடர்புடையதாகவுள்ளது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆ. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைக்காக அன்றி நாணய தொழிற்பாடு களுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

**பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்**

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகைகளானது வங்கியினுடைய நிதிக்கூற்று மூலங்களினுடையே பகுதியாகக் கட்டமைக்கப்படாததால் இந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

## 2. வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் ஆற்றலினையும் உறுதிப்படுத்துவதனையும் வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் வழங்கியோரின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதனையும் கருத்திற் கொண்டு உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. 2006இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் 23 வர்த்தக வங்கிகளையும், 14 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கி 37 உரிமம் பெற்ற வங்கிகள் தொழிற்பட்டதுடன், உரிமம் பெற்ற வங்கிகளின் பெயர்கள் ஆங்கில நெடுங்கணக்கு வரிசையில் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**அட்டவணை II.1**
**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

| | |
|---|---|
| 1 | இலங்கை வங்கி |
| 2 | சிற்றி பாங்க் என்.ஏ |
| 3 | கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட் |
| 4 | டொயிஷ் பாங்க் ஏஜி |
| 5 | டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட் |
| 6 | ஹபீப் பாங்க் லிமிடெட் |
| 7 | ஹட்டன் நசனல் பாங்க் லிமிடெட் |
| 8 | ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் |
| 9 | இந்தியன் பாங்க் |
| 10 | இந்தியன் ஒவசீஸ் பாங்க் |
| 11 | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 12 | நெசனல் டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட் |
| 13 | நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் லிமிடெட் |
| 14 | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 15 | மக்கள் வங்கி |
| 16 | பப்ளிக் பாங்க் பெர்காட் |
| 17 | சம்பத் பாங்க் லிமிடெட் |
| 18 | செலான் பாங்க் லிமிடெட் |
| 19 | ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் |
| 20 | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 21 | த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் |
| 22 | யூனியன் பாங்க் (பாகிஸ்தானுடன் கூட்டிணைக்கப்பட்ட) லிமிடெட் |
| 23 | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட் |

| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | |
|---|---|
| 1 | செலிங்கோ சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 2 | டிஎவ்சீசீ வங்கி |
| 3 | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 4 | கந்துரட்ட அபிவிருத்தி வங்கி |
| 5 | லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட் |
| 6 | தேசிய சேமிப்பு வங்கி |
| 7 | ரஜரட்ட அபிவிருத்தி வங்கி |
| 8 | றுகுண அபிவிருத்தி வங்கி |
| 9 | சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி |
| 10 | சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட் |
| 11 | எஸ்.எம்.இ. பாங்க் லிமிடெட் |
| 12 | அரச ஈட்டு முதலீட்டு வங்கி |
| 13 | ஊவா அபிவிருத்தி வங்கி |
| 14 | வயம்ப அபிவிருத்தி வங்கி |

2006இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகள் பற்றிய விடயங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள், முன்மதித் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்கமைந்த ஒப்புதல்கள், வங்கிகளின் ஆரோக்கியம் தொடர்பான தொடர்ச்சியான கண்காணிப்பு, (தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்பு) மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் காலாந்தர பரீட்சிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

### 2.1 முன்மதியுடைய ஒழுங்கு விதிகள்

2006இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பல புதிய முன்மதியுடைய ஒழுங்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் அதே போன்று ஏற்கனவே உள்ள முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு திருத்தங்களையும் வெளியிட்டது. இவ்வொழுங்கு விதிகளினதும், வழிகாட்டல்களினதும் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கிய மாற்றங்கள் பற்றிய சுருக்கம் பின்வருமாறு:

(அ) **முதலீட்டுச் சொத்துப்பட்டியல் இரண்டு வகைகளாக பாகுபடுத்தப்படும்,** அதாவது முதலீட்டுக் கணக்குகள், வர்த்தகப்படுத்தல் கணக்குகள். உரிமம் பெற்ற வங்கிகள், கையேற்கப்படும் நேரத்தில் தமது முதலீட்டு வகை பற்றிய தீர்மானத்தை எடுக்க வேண்டியதுடன் அந்தத் தீர்மானம் ஆவணப்படுத்தப்படுத்தலும் வேண்டும். பாகுபடுத்தப் படுதலானது காரணங்களையும் முதலீடுகளை கையேற்றல் நாளில் முகாமைத்துறையின் உள்நோக்கத்தினையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்பு வகைகளின் இடையிலான மாற்றல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இதற்கு மேலாக, வங்கிகள் இந்நோக்கத்திற்காக இரண்டு வெவ்வேறான புத்தகங்களைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) **மூலதனப் போதுமை விகிதம்:** மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதில் ஏற்பட்ட சந்தை இடர் நேர்விற்கான மூலதனக் கட்டணமானது பாசல் மூலதன உடன்படிக்கையுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் அனைத்து வங்கிகளுக்கும் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு இரண்டினையும் உள்ளடக்கிய இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதமான 10 சதவீதத்தினை மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் 5 சதவீதத்திற்குக் குறையாத மைய மூலதனத்துடன் சேர்த்து பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. மேலும், மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பதில் வதிவிட சொத்துக்களின் மீதான முதனிலை ஈட்டினால் பிணையிடப்பட்ட கடன்களுக்கும் (50 சதவீதம்) ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் என வகைப்படுத்தப்பட்ட கடன்களுக்கும் (100 சதவீதம்) பொருந்தத்தக்க இடர்நேர்வு நிறையேற்றல் வீதம் முறையே 55 சதவீதத்திற்கும் 110 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது.

(இ) **பாசல் II இன் சமாந்தர கணிப்பீட்டின் மீதான வழிகாட்டல்கள்:** பாசல் II இன் சமாந்தர கணிப்பீட்டிற்கான வரைவிலக்கணங்களையும் படிவங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டல்கள் II இனை சனவரி 2008 இல் இலகுவான அணுகுமுறையுடன் நடைமுறைப்படுத்தும் உள்நோக்கத்துடன் வழங்கப்பட்டதாகும்.

(ஈ) **"கைவிடப்பட்ட சொத்து" (நீண்ட காலப்பகுதிக்கு கொடுக்கல் வாங்கல்களில்லாத வங்கிக் கணக்குகள்) அறிக்கையிடும் தேவைப்பாடுகள்:** வங்கியியல் சட்டத்தின் 72ஆம் பிரிவில் கூறப்பட்ட படி அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும்

ஒவ்வொரு நிதியாண்டினதும் இறுதியில் ஆறு மாதங்களுக்குள்ளாக "கைவிடப்பட்ட சொத்து" பற்றிய விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கு அறியத்தர வேண்டும். கைவிடப்பட்ட சொத்தானது பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக வங்கிக் கணக்கில் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுமின்றி இருக்கும் வைப்புக்கள் அல்லது ஏனைய பணம் மற்றும் வாடகைக்குரிய காலம் முடிவடைந்த பின்னரான காலத்தில் வங்கியினால் அனுப்பப்பட்ட அறிவித்தலுக்கு மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில் தொடர்பு கொள்ளத் தவறி இருக்கும் வாடிக்கையாளர்களுடைய வங்கிகளின் பாதுகாப்பு வைப்பு பெட்டகங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

(உ) **ஏற்புகளுக்கு எதிரான ஆவணங்களில் கீழான இறக்குமதிகளின் மீதான அளவு வைப்புக்களின் அறிமுகம்:** ஏற்புகளுக்கு எதிரான நியதிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் பட்டியலிடப்பட்ட பெறுமதியின் மீது 50 சதவீதமான அளவு வைப்புக்களின் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது தொடர்பாக வங்கிகள் அளவு வைப்புக்களை செய்யும் நோக்கத்திற்காக இறக்குமதியாளருக்கு எந்தவித முற்பணங்களையும் வழங்கக்கூடாது.

(ஊ) **கடன்களுக்கான பொதுவான ஒதுக்கங்களை அறிமுகப்படுத்தல்:** அனைத்து வங்கிகளும், மேலதிக கடன் வகைகளில் மொத்த செயற்பாட்டு கடன்களினதும் முற்பணங்களினதும் செயற்பட முடியாத முற்பணங்களிலும் இருந்து 1 சதவீதமான ஒதுக்குகளை பேணுதலின் வாயிலாக அவற்றை (3 இலிருந்து 6 மாதங்களுக்கான கடன்களினதும் முற்பணங்களினதும் நிலுவை) ஐயத்துக்கிடமான தேறிய வட்டியின் தொடர்பிலான கணக்குகளிலிருந்து கழிக்கப்பட வழிவகுத்தது. இந்தத் தேவைப்பாடானது 31.12.2006இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு காலாண்டிலும் 0.1 சதவீத ஏற்பாடுகளினை மேற்கொள்வதன் மூலம் 10 காலாண்டுகளுக்கு பிற்போடப்பட்டது.

(எ) **ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள்:** 2005 ஏப்பிறலில் நாணயச்சபை ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.2500 மில்லியனுக்கும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு ரூ.200 மில்லியனிருந்து ரூ.1500 மில்லியனுக்கும் அதிகரித்தது. ஏற்கனவேயுள்ள உரிமம் பெற்ற வங்கிகள் 2006 திசெம்பர் வரையும் மொத்த மூலதனத் தேவைப்பாடுகளின் குறைபாடுகளில் 50 சதவீதத்தினையும் மிகுதி 50 சதவீதத்தின் 2007 திசெம்பரிலும் நிவர்த்தி செய்ய நேரம் வழங்கப்பட்டதுடன் 2006இல் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகள் ஒரு நேர அட்டவணைப்படி மூலதன உள்ளீட்டு திட்டத்தினை சமர்ப்பித்து அதன் மூலமாக ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய புதிய திகதிகளுக்கு ஒப்புதல் பெற்றிருக்குமிடத்து 2008 அளவில் 50 சதவீதமான மூலதனக் குறைபாடுகளை உள்ளீடு செய்யவும் மிகுதி 50 சதவீதமானவற்றை 2009 இலும் நிவர்த்தி செய்யவும் மேலும் ஒரு கால நீடிப்பு வழங்கப்படும்.

மேலும், வங்கிகளிலுள்ள பங்குடமை உரித்து தொடர்பானதும் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பான புதிய பணிப்புரைகள் 2006இல் இறுதிப்படுத்தப்பட்டது.

### 2.2 வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித் தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்

2006ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க வங்கித்தொழில் உரிமங்களுக்காகவும் வங்கிக் கிளைகளை திறப்பதற்கும், மூடிவிடவும், வேறோரிடத்தில் அமைப்பதற்குமாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்தும் செய்முறைப் படுத்தியது. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாக தொழிற்படுவதற்காக லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி லிமிட்டெட்டிற்கும், வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கிக்கும் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளாக தொழிற்படுவதற்காக ஐசிஐசிஐ வங்கி லிமிட்டெட்டிற்கும் யூனியன் வங்கி லிமிடெட் (பாகித்தான்) ஸ்ரான்டட் சாட்டட் வங்கி பாகித்தானுடன் பாகித்தானில் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து யூனியன் வங்கி லிமிடெட் பாகித்தான் தொழிற்பாட்டில் இல்லாமல் போனமையினால் யூனியன் வங்கி லிமிடெட்டின் (பாகித்தானில் கூட்டிணைக்கப்பட்ட) தொழிற்பாடுகளினை தொடர்வதற்காக ஸ்ரான்டட் சாட்டட் வங்கி பாகித்தானுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் 113 புதிய கிளைகளைத் திறப்பதற்கும் 91 வங்கித்தொழில் நிலையங்கள் (விரிவாக்க அலுவலகங்கள் அடகு பிடித்தல் நிலையங்கள், மாணவர் சேமிப்பகங்கள் போன்றவை), 120 கிளைகள் மற்றும் 39 வங்கித்தொழில் நிலையங்களை வேறு இடங்களில் அமைப்பதற்கும், 9 வங்கித் தொழில் நிலையங்களை தரமுயர்த்துவதற்கும் 85 தன்னியக்க கூற்றுப் பொறிகளை தலத்திற்கு வெளியே அமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி 2006 இறுதியில் 1530 கிளைகளும் 1986 ஏனைய வங்கித்தொழில் நிலையங்களும் 1127 தன்னியக்க கூற்றுப்பொறிகளும் தொழிற்பாட்டிலிருந்தன.

### 2.3 உரிமம் பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு (தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு)

வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு வங்கிகளால் காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட நிதியியல் தகவல்களின் அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் நிதியியல் நிலைமைகளை இத்தொழிற்பாடு பகுப்பாய்வு செய்கிறது. இடர்நேர்வு தொடர்பான மதிப்பீடுகள் தனிப்பட்ட வங்கிகளாகவும், வங்கித்தொழில் முறையினை முழுவதுமாகக் கொண்டும் மேற்கொள்ளப்படுகின்றன. தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு வங்கிகளின் நிதியியல் நிலைமைகளின் மீது ஏற்படும் சிக்கலானதும் குறிப்பிடத்தக்களவான துமான மாற்றங்களை அடையாளம் காண்பதற்காக நேரகாலத்துடனான எச்சரிக்கை முறையொன்றாக விளங்குகிறது. இதற்கு மேலதிக புலனாய்வும், பரீட்சிப்பும் தேவைப்படுகின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நீங்கலாக, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளையும் உள்ளடக்கிய வங்கித்தொழில் துறையினை உள்ளடக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் தரவுத்தளத்தினூடாக புதிய உடனடி வெப்தள அறிக்கையிடும் முறையொன்று 2005இல் பரீட்சார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு 2006 யூலையில் முழுமையாக நடைமுறைக்கிடப்பட்டது. இதன்படி, அந்த நேரத்தில் தொழிற்பாட்டிலிருந்த பத்திரங்களின் அடிப்படையிலான அறிக்கையிடும் முறை நிறுத்தப்பட்டது. செயற்றிறனானதும் நேரத்துடனானதுமான சரியான நடவடிக்கைக்கு வசதியளிப்பதற்கான அதேநேர எச்சரிக்கை முறைமையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டுவருகிறது.

### 2.4 உரிமம் பெற்ற வங்கிகளின் நியதித்தன்மைப் பரீட்சிப்புக்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் ஒரு இடர்நேர்வு அடிப்படையிலான பரீட்சிப்புச் செய்முறையினை மேற்கொண்டதுடன், அது வங்கித்தொழில் இடர்நேர்வினை அடையாளம் காண்பதற்கும் அத்தகைய இடர்நேர்வின் முகாமைத்துவம் பற்றியும், இடர்நேர்வுகளை மட்டுப்படுத்தும் மூலவளங்களின் போதுமாந்தன்மையின் மதிப்பாய்வு பற்றியும் கவனம் செலுத்தியது. 2006இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 30 நியதித்தன்மை பரீட்சிப்புக்களில் ஈடுபட்டதுடன் அவற்றில் 2006இல் தொடங்கிய 23 பரீட்சிப்புக்களையும், 2005இல் தொடங்கி பூர்த்தி செய்யப்பட்ட 7 பரீட்சிப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது. 18 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளின் முகாமைத் துவத்துடனான வழமையான சந்திப்புக்கள் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு 2006இல் நாணயச்சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் 12 பரீட்சிப்புக்கள் விரைவில் நிறைவடையும் நிலையிலுள்ளன. செயற்பாடல்லாத முற்பணங்கள் அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன்கள் போன்றவற்றின் குறைவான மதிப்பீடு, அதிகரித்துக் கூறப்பட்ட மூலதனப் போதுமை, தொடர்புடைய தரத்தினர்களுடன் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படுத்துகை, கடன் கணக்குகளின் பலயீனமான நிர்வாகம், உள்ளார்ந்த கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஒழுங்கமைந்த மேலாண்மைக்கு காலாந்தரக் கூற்றுக்கள் சமர்ப்பித்தலில் ஏற்பட்ட தாமதங்கள் என்பனவே பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட ஒரு சில கரிசனைக்குரிய விடயங்களாக இருந்தன.

### 2.5 தடைசெய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை மீதான புலனாய்வுகள்

இத்திணைக்களமானது, வங்கித்தொழிற் சட்டத்தின் 83 சி பிரிவின் நியதிகளின்படி சில தடை செய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை மீதான புலனாய்வுகளைத் தொடங்கியுள்ளது. திட்டமொன்றில் பங்குபெறுநர்கள் உதவுதொகையினை அல்லது பணத்தினை செலுத்தி அதன் மூலம் பெறப்படும் நன்மைகள் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை அல்லது பங்கு பற்றுநர்களினால் செய்யப்பட்ட உதவுதொகைகளில் தங்கியிருக்குமாயின் அத்தகைய திட்டங்கள் தடை செய்யப்பட்ட திட்டங்களாகும். திணைக்களமானது இத்தகைய திட்டங்களின் ஊக்குவிப்பாளர்களாக சந்தேகப்படும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளைத் தொடர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இதற்கு மேலாக இலங்கை மத்திய வங்கி, பிரமிட் தன்மையுடைய அத்தகைய மோசடியான மற்றும் ஏமாற்றும் இயல்புடைய திட்டங்களிலிருந்து விலகியிருக்கமாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கி அறிவுறுத்தும் நோக்கத்துடன் செய்தித்தாள்களில் ரூ.1.3 மில்லியன் செலவில் 17 விளம்பரங்களை வெளியிட்டது.

### 2.6 வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் மீதான தீர்மான நடவடிக்கை

2002 ஒத்தோபரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரம் இடைநிறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவம் வங்கி மேற்பார்வைப் பணியாளருக்கு உரித்தாக்கப்பட்டது. 2005இன் வரவு செலவுத்திட்ட யோசனையின் விளைவாக பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு ஒரு புதிய அரச வங்கியொன்றினை அமைப்பதற்கு விதந்துரைப்பு செய்யப்பட்டது. அந்த வகையில் 2006 ஓகத்து 01இல் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தினை உரித்தாக்கும் குறிக்கோளுடன் ஒரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தொழிற்படும் விதத்தில் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கிக்கு உரிமம் வழங்கப்பட்டது. 2006 நவெம்பர் 15ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வங்கித்தொழிற் சட்டத்திற்கான திருத்தச் சட்டத்தின்படி நாணயச்சபையினால் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தின் உரித்து பற்றிய சட்ட ரீதியான கட்டமைப்பு மற்றும் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் உரித்தாளராகிய வங்கியினால் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் பொறுப்புக்கள் மீது வைப்பாளர்களும், கடன் கொடுத்தோர்களினதும் கோரல்களையும் கேள்விகளையும் பூர்த்தி செய்யும் திட்டத்தினை நாணயச்சபை உருவாக்கியது. பொறுப்புக்கள் மீதான கோரல்களை எதிர்கொள்ளும் திட்டம் வரையப்பட்டதுடன் நாணயச்சபை பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தின் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கிக்கு உரித்தாக்கும் கட்டளையினை வழங்குவதை இயலச் செய்வதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்டு பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் பொறுப்புக்கள் மீதான கோரல்களை எதிர்கொள்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### 2.7 நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பு - சுயவிருப்பு வைப்பு காப்புறுதித்திட்டத்தின் நிருவாகம்

1987இல் தொடங்கிய சுயவிருப்பு வைப்புக் காப்புறுதித்திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத்திட்டம் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும் 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்புடையதாகும். 2006இல் ஒரு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் மட்டுமே அதன் கிராமிய வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி வசதியினைப் பெற்றுக் கொண்டது. 2006 திசெம்பர் 31ஆம் நாளன்று சேகரிக்கப்பட்ட கட்டணங்களையும் 1997இல் இலங்கை மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் உள்ளடக்கிய வைப்புக் காப்புறுதி நிதியம் ரூ.204 மில்லியனாகக் காணப்பட்டது. இந்நிதிகள் ரூ.253 மில்லியன் கொண்ட முகப்புப் பெறுமதியுடன் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ள சுயவிருப்புத் திட்டத்திற்குப் பதிலாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான முன்மொழிவின் சாத்தியத்தன்மை தொடர்பாக நிதியியல்துறை கொத்தணிக் கூட்டங்களில் மேலும் கலந்துரையாடப்பட்டது. செயல்படுத்தக்கூடிய கட்டாய வைப்புக் காப்புறுதித்திட்டம் பரிசீலனையின் கீழ் உள்ளது.

### 2.8 பொதுவான வங்கித்தொழில் மன்றம்

சமகாலப் பிரச்சனைகளை விவாதிப்பதற்கும் கலந்துரை யாடுவதற்குமாக நிறுவப்பட்டபொதுவான மன்றம் 2006இலும் தொடர்ந்தது. அந்த ஏற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(அ) **வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்தக் கூட்டங்கள்:** இக்கூட்டங்கள் வங்கித் தொழிற்பாடுகள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அரங்கமாக விளங்கின. வங்கிகளிடமிருந்து பின்னூட்டல்களைப் பெறும் நோக்குடன் அனைத்து முக்கிய

கொள்கைகள் மற்றும் தொழிற்பாட்டு விடயங்கள் என்பன அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக இக்கூட்டங்களில் விவாதிக்கப்படும். அங்கு கலந்துரையாடப்பட்ட முக்கிய கொள்கை மற்றும் தொழிற்பாட்டு பிரச்சனைகளாக நடைமுறைப் படுத்துதலுக்குப் பின்னரான காசோலை பிரதிமைப் படுத்துதலும் சுற்றோட்டக் குறைப்பும், பாசல் II மூலதன உடன்பாட்டை நடைமுறைப்படுத்துதல், காசோலை தீர்ப்பனவின் தாமதங்கள், சந்தை இடர்நேர்வுக்கான மூலதனக் கட்டணங்களை அறிமுகப்படுத்துதல், வெப்தளங்களை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையிடும் முறைமையை நடைமுறைப்படுத்தல், பணத்தை தூய்மைப் படுத்துதலை தடுக்கும் சட்டம், மற்றும் நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடும் சட்டம் என்பவற்றின் கீழான வங்கிகளின் கடப்பாடுகள், வேளாண்மைத் துறைக்கான கட்டாய கடன் வழங்கல், தனியொரு கடன்பாட்டாளர் எல்லை பற்றிய ஒழுங்கு விதிகளுக்கான திருத்தங்கள், கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய அறிக்கை, வங்கித்தொழில் முறையிலுள்ள கொடுகடன் விரிவாக்கத்தின் உயர் வீதம் மற்றும் உள்ளார்ந்த இடர்நேர்வு, மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிப் பாவனைக்குறைப்புக்கான தேவை, முற்பணங்களுக்கும், கொடுகடன் அட்டை தொழிற்பாடுகளுக்குமான பொதுவான ஏற்பாடுகள் பற்றிய அறிமுகம் என்பன விளங்கின. மேலும் மிகக் கூடுதலான தகவல்களைக் கொண்ட வியாபாரத் தீர்மானங்களை எடுப்பதற்கு வசதி செய்யும் நோக்குடன் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு நாட்டின் பொருளாதாரம் மற்றும் நாணய அபிவிருத்திகள் பற்றி கிரமமாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஆ) **நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு:** வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவில் பணியாற்றியது. நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவானது, முக்கிய நிதியியல் முறையின் உறுதியற்ற தன்மைக்கு இட்டுச் செல்லும் இடர்நேர்வு மற்றும் குறைபாடுகளை மதிப்பாய்வு செய்து, இலங்கை மத்திய வங்கியின் இரு நியதிக் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் உறுதிப்பாட்டினை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை பரிந்துரை செய்தது. 2006இல் நிதியியல் உறுதிப்பாட்டுக் குழுவானது 6 கூட்டங்களை நடாத்தியதுடன், நிதியியல் சந்தைப் பங்கேற்றுநர்களுக்கும் பொதுமக்களுக்கும் நிதியியல்துறை அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான உள்ளார்ந்த இடர்நேர்வுகளது மூலங்கள் பற்றிய விழிப்புணர்வை முன்னேற்றுவதனை நோக்காகக் கொண்டு இரண்டாவது நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வினை வெளியிட்டது.

(இ) **பாரிய நிதியியல் குழுமங்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்துநர்களின் தொழிற்பாட்டுக் குழு:** 2005 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கி, இலங்கை காப்புறுதிச்சபை, இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்புச்சபை, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கம்பனிகளின் பதிவாளர் என்பவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொழிற்பாட்டுக்குழு நியமிக்கப்பட்டது. நிதியியல் உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பாகவுள்ள உதவி ஆளுநர் இக்குழுவின் தலைவராக செயற்பட்டார். இத்தொழிற்பாட்டுக் குழுவின் குறிக்கோளாக, நிதியியல் குழுமங்களுக்கான முழு அளவிலான இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்தல் மற்றம் கண்காணிப்புச் செய்தல், மற்றும் நிதியியல் குழுமங்களினை மற்றும் மேற்பார்வை செய்வதில் தற்போதுள்ள வரையறைகளை எதிர்வு கொள்வதற்கு அவசியான சட்டச் சீர்திருத்தங்களை விதந்துரைப்பது காணப்பட்டது. இவ்வாண்டில் இக்குழு ஆறு கூட்டங்களை நடாத்தியதுடன் இடைக்காலத்தில் தொழிற்பாட்டுக் குழுவின் நடவடிக்கையினை வழிநடத்துவதற்காக கண்டறியப்பட்டவைகள் பற்றிய ஒரு இடைக்கால அறிக்கையினைச் சமர்ப்பித்தது.

(ஈ) **நிதியியல்துறைக் கொத்தணி:** வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிதியியல்துறைக் கொத்தணி நடவடிக்கைகளிலும் பங்குபற்றியது. நிதியியல்துறைக் கொத்தணி, அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரையின் கீழ் 2004 யூனில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழான 24 கொத்தணிகளில் ஒன்றாகும். 2006ஆம் ஆண்டில் நிதியியல்துறை கொத்தணியானது, நிதியியல்துறை மற்றும் மூலதனச் சந்தைத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒத்ததன்மையின் காரணத்தினால் மூலதனச் சந்தைக் கொத்தணியுடன் இணைக்கப்பட்டது. இவ்விரு கொத்தணிகளினதும் முக்கிய குறிக்கோளாக நிதியியல் முறை உறுதிப்பாட்டினை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை உருவாக்கி சனத்தொகையின் அனைத்து பிரிவினரினதும் சிறப்பாக உள்ளூர் தொழில் முயற்சியாளர் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் கிராமியத்துறை என்பவற்றின் நிதி மற்றும் நிதியியல் கருவிகளுக்கான வழிவகைகளை அதிகரித்தல் என்பன விளங்குகின்றன. இணைத்தலைவர்களாக மத்திய வங்கியின் துணை ஆளுநர் மற்றும் திறைசேரியின் துணைச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட நிதியியல்துறை கொத்தணியானது மேலும் எட்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்த வேளையில் மூலதனச் சந்தைக் கொத்தணிக்கு டிஎவ்சிசி வங்கியின் பொது முகாமையாளரும், திறைசேரியின் துணைச் செயலாளரும் இணைத்தலைவர்களாக விளங்கியதுடன் 15 உறுப்பினரையும் உள்ளடக்கியிருந்தது. 2006இல் நிதியியல்துறைக் கொத்தணியும் மூலதனச் சந்தைக் கொத்தணியும் இணைந்து 10 கூட்டங்களை நடாத்தினர். இவ்விரு கொத்தணிகளினதும் நடவடிக்கைகள் நிதியியல் முறைமைக்கு ஒரு தொலை நோக்கினையும் வழிகாட்டலினையும் அபிவிருத்தி செய்வதினையும் முக்கியமாகக் கொண்டிலுருந்ததுடன் செலவுத்திட்டத்தில் 2007 வரவு நிதித்துறைக் கொள்கை தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பித்தது. இரண்டு கொத்தணிகளினதும் நடவடிக்கைகள் கொடுக்கல் வாங்கல்/ இடையீட்டாளர் செலவுகளைக் குறைத்தல், நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல், கொடுகடன் தகவல் பணியகத்தின் செயற்பரப்பையும் பணிகளையும் விரிவுபடுத்துவதனூடாக கடன்பாட்டாளர் தொடர்பான தகவல்களை அதிகரித்தல் மற்றும் சட்டமுறையில் காணப்படும் தாமதத்தினைக் குறைத்தல் என்பனவற்றினூடாக நிதி மற்றும் நிதியியல் சாதனங்களை பெற்றுக் கொள்ளும் வழிகளை அதிகரிப்பதன் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தின.

### 2.9 பாசல் II இன் நடைமுறைப்படுத்தலுக்கான ஆயத்தங்கள்

இத்திணைக்களமானது பாசல் II இன் நடைமுறைப் படுத்தலுக்கான இயலளவினைக் கட்டியெழுப்புதலில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டில் அலுவர்களுக்கான விரிவுரை நிகழ்ச்சித் தொடர்களையும் மேற்கொண்டு வருகின்றமைக்குப் புறம்பாக 17 அலுவலர்களுக்கு பாசல் II தொடர்பான விடயங்களில் 12 வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்கியது. 2005இல் நியமிக்கப்பட்ட குழு இலங்கை மத்திய வங்கியினதும், வங்கிகளினதும் மற்றும் கணக்காய்வு அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் வரைவிலக்கணங் களுக்காக கொள்கைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான வேலைகளிலும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வேலைகளிலும் தொடர்ந்தும் ஈடுபட்டது. பாசல் II இன் சமகால கணிப்பின் மீது வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தல்களின் தாக்கம் இவ்வாண்டில் கண்காணிக்கப்பட்டது.

### 2.10 நிதியியல் முறை பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு

2006இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செய்திப் பத்திரிகைகளில் மூன்று விளம்பரங்களை வெளியிட்டன. அவையாவன (i) “பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியாக அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்கள்” என்ற மாதாந்த விளம்பரம் 9 மாதங்களுக்கு திரும்ப திரும்ப இடம் பெற்றது. (ii) நீங்கள் உங்கள் பணத்தினை சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் வைப்புச் செய்துள்ளீரா? இது இரண்டு மாதங்களுக்கு திரும்பத்திரும்ப இடம் பெற்றது. (iii) நீண்ட காலத்திற்கு கொடுக்கல் வாங்கலின்றி வங்கிக் கணக்குகளை வைத்திருக்கிறீர்களா? ஒரே தடவையாக தேசிய செய்திப் பத்திரிகைகளில் அனைத்து மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இந்த விளம்பரங்கள் நிதியியல் முறை பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை உயர்த்துவது, பொதுமக்களுக்கு நிதியியல் நிறுவனங்களுடனான அவர்களின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான இடர்நேர்வுகள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவது மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளுடன் வாடிக்கையாளர்களினால் வைத்திருக்கப்படும் கைவிடப்பட்ட சொத்துக்களின் சட்ட ரீதியான நிலைமைகள் பற்றி அறிவிப்பது போன்றவற்றை நோக்காகக் கொண்டிருந்தன.

## 3. தொடர்பூட்டல்

2006இல் நாணயச்சபை தகவல் திணைக்களத்தினை தொடர்பூட்டல் திணைக்களமாக பெயர் மாற்றம் செய்தது. வங்கியின் மத்திய தகவல் பரப்பும் மையமாக விளங்கிய இத் திணைக்களமானது மீளப்பெயரிடப்பட்டதன் மூலமாக வங்கியின் கொள்கைகளும் வழிமுறைகளும் பற்றிய விளக்கங்களை, வங்கிக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தகவல்களைப் பரப்புதலுக்கான இரு வழிச் செய்முறையினை வசதிப்படுத்தலின் வாயிலாக மேலும் முன்னேறுவதற்குக் கூடுதலான ஆற்றலினை ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கும்.

இவ்வாண்டில், இத்திணைக்களமானது தொடர்ந்தும் தமது நேரகாலத்துடன் தகவல்களைப் பரப்பும் முயற்சிகளை மேற்கொண்டு தமது தகவல் பரப்புதல்களை மின்னியல் ஊடகத்தின் ஊடாக குறிப்பாக மின்னஞ்சல், வெப்தளத்தின் ஊடாக முன்னேற்றுவதற்குரிய படிமுறைகளை எடுத்துள்ளது. வங்கி வெப் தளமானது திணைக்களத்தினால் நாளாந்தம் பூரணப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன் 2006இல் நாளொன்றுக்கு 600 துணுக்குகள் வரையில் பதிவு செய்தது. இணையத்தளத்தினை மீளமைத்தலானது இலகுவான முறையில் ஆற்றலினை மேம்படுத்தல் மற்றும் கூடுதலான ஒழுங்கமைக்கப்பட்ட தகவல்களை வழங்குதல் என்பவற்றின் மூலமாக, உள்ளடக்குதல் நேரகாலத்தன்மை மற்றும் அணுகும் தன்மை என்பவற்றினை முன்னேற்றும் செய்முறை மூலமாக ஏற்படுத்துவதாகும். புதிய இணையத்தளமானது 2007 நடுப்பகுதியில் பொதுமக்களிடையே பாவனைக்கு விடப்படும். பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புதலில் காலாந்தர தகவல்கள் நாளாந்தம் முதல் ஆண்டு முழுவதும் வரை, பத்திரிகை வெளியீடுகள் மற்றும் அறிவித்தல்கள் அச்சிடுதல் மற்றும் மின்னியல் ஊடகமூடாகவும் வழங்கப்படும். 2006ஆம் ஆண்டில் இத்திணைக்களமானது நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த மாதாந்த பொருளாதார குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச்சுட்டெண்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் போன்ற அரசாங்க பிணையங்கள் தொடர்பான தகவல்கள் என்பவற்றை வெளியிட்டு வைத்தது. வெளியிட்டு வைக்கப்பட்ட பத்திரிகைச் செய்திகள் மற்றும் அறிவித்தல்கள் 1140 ஆகவும் வர்த்தமானி அறிவித்தல்கள் 12 ஆகவும் விளம்பரங்கள் 157 ஆகவும் விளங்கின. பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு திணைக்களம் வாசிக்கும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு இலகு மொழியில் துண்டுப்பிரசுரத் தொகுதிகளையும் வெளியிடத் தொடங்கியது. இவ்வாண்டுக் காலத்தில் 5 புதிய துண்டு பிரசுரங்கள் “செலாவணி வீதம்”, பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள், பிரமிட் திட்டங்களினால் ஏற்படும் அபாயங்களும் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களின் வலையமைப்பு, “லங்கா செக்குயர்” மற்றும் “பணத்தினைத் தூயதாக்குதலைத் தவிர்த்தலும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல்” போன்ற தலையங்கங்களில் வெளியிடப்பட்டன. இந்தத் துண்டுப் பிரசுரங்கள் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டன.

இவ்வாண்டில் திணைக்களமானது பல்வேறு பொருளாதார விடயங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக 18 பத்திரிகை மாநாடுகளை ஒழுங்கு செய்திருந்தது. அத்துடன் காவல்துறை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு பிரமிட் திட்டங்கள் பற்றி ஏனைய திணைக்களங்களூடாக இணைந்து பொதுமக்கள் விழிப்புணர்வுச் செயலமர்வுகளையும், நடைமுறை பொருளாதார விடயங்கள் பற்றி ஊடகவியலாளருக்கு ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினையும் நடாத்தியது. விலை உறுதிப்பாடு பற்றிய விவரணப்படம் 2005இல் வெளியிடப்பட்டதன் மூலம் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதில் வங்கியின் பங்களிப்பு பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டு அது 2006இல் ரூபவாகினியிலும் பல்வேறு சபைகள், பொருட்காட்சிகள், ஆய்வரங்குகளிலும் ஒளிபரப்பப்பட்டு பரந்தளவு பிரபல்யம் கொடுக்கப்பட்டது. உலகளாவிய தகவல் பரப்புதலில் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளம், வங்கியாளர் சங்கங்கள் மற்றும் (ஒருங்கிணைக்கப்பட்ட இணையத்தள பிணையங்கள்) உலக ரீதியான தரவுப் பரப்புதலில் இணைப்பினைக் கொண்டிருந்தது.

இத்திணைக்களம் 2006இல் கொழும்பு பன்னாட்டு புத்தக கண்காட்சியின் வெளியீடுகளின் விற்பனையிலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட “தேசிய சட்ட வாரத்தின்” பொருட்காட்சியிலும் மற்றும் ஏனைய பொருட்காட்சியிலும் பொதுமக்கள் நிகழ்வுகளிலும் பங்குபற்றியதன் மூலம், வங்கி வெளியீடுகளின் பகிர்ந்தளிப்புக்களையும் விழிப்புணர்வுகளையும் உயர்த்துவதற்கு உதவியது.

அச்சகமானது தொடர்ந்தும் வங்கியின் தொகையளவிலான அச்சிடும் தேவைப்பாடுகளை மேற்கொண்ட வேளையில் உயர் தரத்தினையும் வெளியீட்டினையும் பேணியது. அச்சகத்தினால்

பூர்த்தியாக்கப்பட்ட மொத்த அச்சிடும் வேலைகளில் எண்ணிக்கை 330 ஆகும்.

இத்திணைக்களம் ஏனைய திணைக்களங்களுடனும் வங்கியின் பிரதேச அலுவலகங்களுடனும் ஒன்றிணைந்து தொடர்ந்தும் பாடசாலைகளில் இருந்து கிடைக்கும் வேண்டு கோள்களின்படி குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பல்வேறு பொருளாதாரத் தலைப்புக்களில் விரிவுரைகளை ஏற்பாடு செய்து வந்தது. 2006இல் இத்திணைக்களம் 11 அத்தகைய பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை, குறிப்பாக கிராமிய பகுதிகளில் ஒழுங்குபடுத்தியது.

இத்திணைக்களம் வங்கியின் முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய "கவுலுவ" என்ற உள்ளக செய்திச் சஞ்சிகைகளை வெளியிடுவதன் மூலம் வங்கி அலுவலர்களிடையே தகவல்களை தொடர்ந்தும் பரப்புதல் செய்து வருகிறது. 2006ஆம் ஆண்டில் 11 "கவுலுவ" வெளியீடுகள் வெளியிடப்பட்டன. வங்கியானது தொடர்ந்தும் சிங்கள வெளியீடான "சட்டகன", சட்டகனவின் தமிழ் வெளியீடான "குறிப்பேடு" என்பனவற்றை இரு மாதங்களுக்கு ஒரு தடவை (6 வெளியீடுகள்) மற்றும் "செய்தி அளவீடு" காலாண்டுக்கொரு முறை (4 வெளியீடுகள்) என்பவற்றை வெளியிட்டது.

இத்திணைக்களம் வங்கி வெளியீடுகளின் இலவச பகிர்ந்தளிப்புக் கொள்கையினையும் உருவாக்கியதுடன் இவ்வாண்டில் செய்தித்தாள்களில் விளம்பரங்களுக்கு தெரிவு செய்யும் முறையினை திருத்தியமைத்துள்ளது.

**நூலகமும் தகவல் நிலையமும்**

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப்பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. இது தமது புத்தக சேகரிப்புக்களை 18784 இலிருந்து 19791 இற்கும் அறிக்கைகளை 12916 இலிருந்து 13334 இற்கும் இறுவட்டுக்களை 965 இலிருந்து 1019 இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் இவ்வாண்டில் ஒன்று திரட்டப்பட்டு கட்டப்பட்ட 526 தொகுதிகளும் சேகரிக்கப்பட்டன. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலைய நூலகமும் அதன் சேகரிப்புக்களை 5045 இலிருந்து 5143 இற்கு அதிகரித்துக் கொண்டது.

பொருளாதாரம், பொருளியியலளவை மற்றும் நிதி என்பன தொடர்பான 100 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகளை உடனடியாக அணுகத்தக்க விதத்தில் "விஞ்ஞான வழிகாட்டல்" இன் பயன்பாடு அதிகரித்தது. ஆகையால் நூலகம், சஞ்சிகைக்கான சந்தாவை 172 இலிருந்து 120 ஆகக் குறைத்தது.

மீளாய்வுக்குரிய ஆண்டில் நூலகமும் தகவல் நிலையமும் அண்மைய சேர்க்கைகள் (அதாவது புதிய நூல்கள்) "தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் பட்டியல்", "மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள்", "நியூஸ் அலேட்" போன்ற மின்னியல் வெளியீடுகளைத் தொடர்ந்தும் திரட்டி இணையத்தளமூடாக அவற்றைப் பரப்பின. ஒரு பயன்படுத்துநர் குறிப்பினைத் தயாரித்து அதனை தரவுத்தளங்களுடன் இணைத்து திணைக்களத் தலைவர்களால் தெரிவு செய்யப்பட்ட தகவல் பரப்பு முறை தொடங்கி வைக்கப்பட்டது.

வங்கி அலுவலர்கள் நூலக வசதிகளை அதே நேரத்திலேயே பயன்படுத்திக் கொள்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு 4 திணைக்களங்களை உள்ளடக்கி பயன்படுத்துநர்களுக்காக 04 அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்காக 03 அறிமுகப்படுத்துகைகளும் இடம் பெற்றன. வங்கித்தொழில் மற்றும் வலையமைப்பு மீளச் செயற்படத் தொடங்கியதுடன் அதனது 22 உறுப்பினர் நூலகங்களும் மின்னஞ்சல் மூலமாக தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றன. நூலகமும் தகவல் நிலையமும் தேசிய வாசிப்பு மாதத்தில், ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்கு செய்து ஒத்தோபரில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 450 நூல்களை காட்சிப்படுத்தியதுடன் இந்தக் கண்காட்சிக்கு அலுவலர்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்தது. மின்னஞ்சல் மூலமான ஒரு புத்தக மீளாய்வு போட்டி நிகழ்ச்சியும், கேள்வி பதில் நிகழ்ச்சித்திட்டமும் தேசிய வாசிப்பு மாதத்தின் ஏனைய பிரபல்யம் பெற்ற விடயங்களாகும். நூலகம் மற்றும் தகவல் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "வாசிப்பின் பெறுமதி" என்ற விரிவுரையும் தேசிய வாசிப்பு மாதத்தின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு விடயமாக வங்கி அலுவலர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கங்களை மேலும் ஆழப் பதிய வைத்தது.

## 4. நாணயம்

### 4.1 நாணய வெளியீடு

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரம் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2006ஆம் ஆண்டுப் பகுதியிலும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதற்காக சட்ட ரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2006ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் அளவு 2005 இறுதியில் காணப்பட்ட ரூ.132 பில்லியன் இருப்புக்கு மேலாக 19 சதவீத அதிகரிப்பினைக் கொண்டு ரூ.157 பில்லியனாக விளங்கியது. சுற்றோட்டத்திலிருந்த மொத்த நாணயத்தில் நாணயத்தாள்களினது சுற்றோட்டம் 97 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் அளவு 187 மில்லியன் குத்திகளாக ரூ. 404 மில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. 2005 ஆண்டின் ஒப்பிடத்தக்க தொகைகளாக 115 மில்லியன் குத்திகள் ரூ.250 மில்லியன் கொண்ட மொத்தப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. 2000-2006 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குத்திகளின் அளவும் பெறுமதியும் அட்டவணை Iஇல் தரப்பட்டுள்ளன.

### 4.2 புதிய உயர் பெறுமதி இன நாணயத்தாள்

ரூ.2000 பெறுமதி கொண்ட உயர் பெறுமதி இன நாணயத்தாள் 2006 ஒத்தோபர் 17ஆம் நாளன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்தப் புதிய மரபுரிமை தொடர் நாணயத்தாள்கள் உயர் பெறுமதி நாணயத்தாளிற்கான கேள்வி மற்றும், நாட்டில் அண்மையில் விலை மட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நாணயத்தாள் பல நடைமுறை மற்றும் புதிய முன்னேற்றகரமான பாதுகாப்புத் தன்மைகளைக் கொண்டிருந்தது.

நாணயத்தாள்களின் பாதுகாப்புப் பண்புகளை தொடர்ச்சியாக மேம்படுத்துகின்ற வங்கியின் கொள்கையினைப் பேணும் விதத்தில் நடைமுறையிலிருக்கும் ரூ.500 நாணயத்தாள் நிற மாற்றத்துடன் கூடிய "ஸ்டார் குரோம்" பாதுகாப்பு இழையத்துடன் தரமுயர்த்தப்பட்ட வேளையில் புதிய மூலைக்கல் நீர்வரி அடையாளப் பண்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தகைய வழிமுறைகள் போலி நாணயங்களைத் தயாரிப்பதைக் குறைக்க உதவும். உதாரணமாக ரூ.500 பெறுமதி கொண்ட

அட்டவணை II.2

வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட நாணயக் குத்திகளின் அளவும் பெறுமதியும் - 2000-2006

| ஆண்டு | நாணயக்குத்தியின் இனமும் அளவும் (குத்திகளின் எண்ணிக்கை ஆயிரத்தில்) | | | | | | | | | | மொத்த பெறுமதி | மொத்தப் பெறுமதி (ரூ.'000') |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.10 | ரூ.5 | ரூ.2 | ரூ.1 | சதம் 50 | சதம் 25 | சதம் 10 | சதம் 05 | சதம் 02 | சதம் 01 | | |
| 2000 | 10,693 | 15,413 | 16,186 | 4,876 | 6,936 | 4,320 | 1,955 | 1,287 | 75 | 430 | 62,171 | 226,057 |
| 2001 | 6,136 | 20,726 | 22,668 | 19,328 | 4,286 | 5,996 | 2,380 | 399 | 60 | 205 | 82,184 | 233,557 |
| 2002 | 10,965 | 16,820 | 19,968 | 11,991 | 8,466 | 5,752 | 1,770 | 396 | 185 | 425 | 76,738 | 251,553 |
| 2003 | 5,735 | 23,512 | 27,187 | 29,160 | 8,276 | 5,964 | 2,905 | 294 | 195 | 220 | 103,448 | 264,384 |
| 2004 | 5,670 | 24,677 | 25,218 | 34,093 | 9,220 | 9,184 | 2,785 | 549 | 105 | 80 | 111,581 | 271,829 |
| 2005 | 1,601 | 27,983 | 21,543 | 43,297 | 11,374 | 8,396 | 152 | 225 | 280 | 15 | 114,866 | 250,126 |
| 2006 | 215 | 44,917 | 49,129 | 69,354 | 15,762 | 6,560 | 248 | 147 | 220 | 5 | 186,557 | 403,907 |

நாணயத்தாள்களில் பதிவு செய்யப்பட்ட போலி நாணயத்தாள்களின் எண்ணிக்கை 2005இல் ஒரு மில்லியனுக்கு 66 தாள்கள் என்ற நிலையிலிருந்து 2006இல் சுற்றோட்டத்திலிருந்த ஒரு மில்லியன் நாணயத்தாள்களுக்கு 18 தாள்கள் எனக் குறைவடைந்தது.

### 4.3 புதிய ஞாபகார்த்த நாணயக் குத்திகள்

இலங்கை மத்திய வங்கி புத்த பெருமானின் 2550ஆம் ஆண்டு பிறப்பு நிறைவினைக் குறிக்கும் வகையில் ரூ.2000, ரூ.1500 மற்றும் ரூ.5 பெறுமதி கொண்ட நாணயக்குத்திகளை 2006 மே 15ஆம் நாளன்று வழங்கியது. ரூ.2000 மற்றும் ரூ.1500 நாணயக்குத்திகள் மாசுபடாத நிலையில் ஸ்டேர்லிங் வெள்ளியினால் வார்க்கப்பட்டிருந்த வேளையில் ரூ.5 நாணயக்குத்தி பித்தளை மூலாம் பூசப்பட்டு உருக்கினால் வார்க்கப்பட்டது. குறிப்பிட்ட சில பகுதிகளில் தங்க மூலாம் பூசப்பட்ட ரூ.2000 நாணயக்குத்தியில் போதிசத்துவ சித்தார்த்தர் ஏழு தாமரைப் பூக்களில் மலர்ந்து இருப்பது முக்கிய பண்பாகும். இம்முடி அளவிலான வெள்ளி குத்தி நாணயங்கள் வட்ட வடிவமாக 38.61 மி.மீ. விட்டத்தினைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு குத்தியும் 28.28 கிராம்கள் நிறையினை உடையவை. மேற்குறிப்பிட்ட சம்பவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட ரூ.5 சுற்றோட்ட நாணயத்தின் முன்புறத்தில் சிவனொளிபாத மலை "தர்ம சக்கரத்துடன்" பொறிக்கப்பட்டிருந்த வேளையில் நாணயத்தின் பெறுமதியும் 2006 ஆண்டும் பின்புறத்தில் காணப்படுகின்றன. இந்த ரூ.5 நாணயக்குத்தியின் அளவு வர்ணம் மற்றும் நிறை என்பன தற்பொழுது நடைமுறையில் சுற்றோட்டத்திலிருக்கும் ரூ.5 நாணயக்குத்திக்கு ஒத்ததாகவே இருக்கும்.

### 4.4 போலி நாணயத் தாள்களைக் கண்டு பிடித்தல்

போலி நாணயத் தாள்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை தயாரிக்கும் முயற்சிகளை மிகவும் குறைப்பதற்குமாக திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள்கள் பணியகத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. இந்த வழிமுறைகளும் மற்றும் புதிய பாதுகாப்புப் பண்புகளின் அறிமுகப்படுத்தலும் நடைமுறையிலுள்ள பாதுகாப்புப் பண்புகளை மேம்படுத்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன போலி நாணயம் தயாரிக்கும் முயற்சிகளை கண்டுபிடித்தலிலும், சார்பு ரீதியில் கூடிய நம்பகத்தன்மை வாய்ந்த நாணயத்தாள்களைக் கொண்ட சுற்றோட்டத்தினை பேணுவதற்கும் உதவி புரிந்தன. அந்த வகையில் நாணய விதிச் சட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு மத்திய வங்கியின் உறுதிப்படுத்தலுக்காக தொடர்பு கொள்ளப்பட்ட போலி நாணயங்களின் எண்ணிக்கையானது 2005இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 11.8 தாள்கள் என்ற அளவிலிருந்து 2006இல் சுற்றோட்டத்திலிருந்த ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் 2.23 தாள்கள் என்ற அளவுக்கும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

### 4.5 வங்கித்தாள் செய்முறைப்படுத்தல்

மீளாய்வின் கீழான ஆண்டில் சுத்தமான நாணயத்தாள் கொள்கையினைப் பேணுவதின் ஒரு பகுதியாக, சரி பார்த்தல், கணக்கெடுத்தல் மற்றம் தரம் பிரித்தல் பொறிகள் இரண்டும் 92.4 மில்லியன் பயன்படுத்தத்தக்க நாணயத்தாள்கள் செய்முறைப்படுத்தியதுடன் 39.8 மில்லியன் பயன்படுத்தத்தகாத நாணயத்தாள்களை அழித்தன.

### 4.6 ஞாபகார்த்த தாள்களினதும், நாணயக் குத்திகளினதும் விற்பனை

திணைக்களம் தொடர்ந்தும் ஞாபகார்த்த தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளை உலோக நாணய அறிவியலாளர்களுக்கும் சேகரிப்பாளருக்கும் பொதுமக்களுக்கும் விற்பனை செய்தது. மத்திய வங்கி வெப்தளமானது இந்நாணயங்கள் பற்றிய பூரணப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்கியது. மத்திய வங்கியில் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதான ஞாபகார்த்த நாணயங்களினதும், தாள்களினதும் விபரங்களும் அத்துடன் அவற்றினது விற்பனை விலைகளும் அட்டவணை II-3இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II.3
## விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணய குத்திகளும் தாள்களும்

| ஞாபகார்த்த நிகழ்வு | வழங்கப் பட்ட ஆண்டு | முகப்புப் பெறுமதி (ரூபா) | உலோகம்/ மூலப்பொருள் | விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|---|
| புத்த பெருமானின் 2550 ஆண்டு நிறைவு | 1957 | 5 | வெள்ளி | * |
| இலங்கை மத்திய வங்கி 40வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 1990 | 500 | வெள்ளி | * |
| கொழும்பில் இடம் பெற்ற 5வது தென்னாசிய விளையாட்டு விழா (உறை) | 1991 | 500 | 12 கரட் தங்கம் | * |
| சனாதிபதி ஆர் பிரேமதாசாவின் பதவியேற்று மூன்றாவது ஆண்டு நிறைவு (உறை) | 1992 | 1 | வெள்ளி | * |
| சனாதிபதி ஆர் பிரேமதாசாவின் பதவியேற்று மூன்றாவது ஆண்டு நிறைவு (உறை) | 1992 | 1 | செப்பு நிக்கல் (மாசுறாது) | 250 |
| 2300 அனு-புது மிகுந்து ஜயந்தி (பாதுகாப்புப் பெட்டி) | 1993 | 500 | வெள்ளி | * |
| 2300 அனு-புது மிகுந்து ஜயந்தி (உறை) | 1993 | 500 | வெள்ளி | * |
| ஐக்கிய நாடுகள் சபையின் 50வது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | 5 | நிக்கல் பித்தளை | 200 |
| இலங்கை சுதந்திரமடைந்து 50வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 1998 | 1,000 | வெள்ளி | * |
| இலங்கை சுதந்திரமடைந்து 50வது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | 200 | பொலிமர் | 400 |
| கிரிக்கட் உலகக் கிண்ணம் 1996 (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | 1,000 | வெள்ளி | * |
| இலங்கை இராணுவத்தின் 50வது அண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 1999 | 1 | (பாதுகாப்பிடப்பட்டது) | 400 |
| இலங்கை மத்திய வங்கியின் 50வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 2000 | 1,000 | வெள்ளி | * |
| இலங்கைக் கடற்படையின் 50வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 2000 | 1 | செப்பு-நிக்கல் (பாதுகாப்பிடப்பட்டது) | 500 |
| புத்தபெருமானின் 2550வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 2006 | 1,500 | வெள்ளி | 5,000 |
| புத்தபெருமானின் 2550வது ஆண்டு நிறைவு (அன்பளிப்புப் பெட்டி) | 2006 | 2,000 | தெரிவு செய்யப்பட்ட தங்க முலாம் பூசிய வெள்ளி | 7,000 |

* இத்தகைய நாணயக்குத்திகளின் விற்பனை விலைகள் தங்கம், வெள்ளி என்பனவற்றின் நாளாந்த சந்தை விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு அவை மத்திய வங்கி விற்பனை பீடங்களில் காட்சிக்கு வைக்கப்படும்.

### 4.7 பயிற்சியும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும்

நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்களை இனங் காணல் மற்றும் சுத்தமான நாணயத்தாள் கொள்கை, நாணயக் குத்திகளை மீள் சுற்றோட்டத்திற்கு விடுதல் என்பனவற்றை சிறப்பு அம்சங்களாக கொண்டு வங்கி அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு பொது விரிவுரைகள், ஆய்வரங்குகள், மின்னியல் அச்சு ஊடகங்களினூடாக வங்கித் தாள்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. செய்திப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் புதிய நாணயக் குத்தித் தொடர்கள் புதிய ரூ.2000 வங்கித்தாள் வெளியீடு, போலி நாணயத்தாள்களைத் தயாரிக்கக்கூடிய தன்மைகள் பற்றியும் கட்டுரைகள் எழுதப்பட்டன. புதிய ரூ.2000 மற்றும் ரூ.500 நாணயத்தாள்களின் பாதுகாப்புப் பண்புகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில் பல்வேறு சுவரொட்டிகளும், துண்டுப்பிரசுங்களும் வெளியிடப்பட்டன.

ஒரு மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் நாணயம் டீலாறுவின் ஆதரவுடன் 2006 ஒகத்தில் மத்திய வங்கி மற்றும் காவல்துறை அலுவலர்களுக்காக போலி நாணயத்தினைக் கண்டு பிடித்தல் தொடர்பாக நடாத்தப்பட்டது. இத்திணைக்களத்தினால், போலி நாணயங்களை அறிமுகப்படுத்துதல் தொடர்பில் 16 ஆய்வரங்குகளையும், ரூ.2000 புதிய நாணயத்தாள் வெளியீடு மற்றும் புத்தபெருமானின் 2550 ஆண்டு பிறப்பு நிறைவினைக் குறிக்கும் ஞாபகார்த்த நாணயக்குத்தி வெளியிடுதல் தொடர்பில் 8 தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களிடமிருந்து கிடைத்த அதிகரித்த எண்ணிக்கையிலான விசாரணைகள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுமக்களிடையே நாணயத்தாள்கள் மற்றும் அவற்றின் பண்புகள் தொடர்பாக தெரிந்து கொள்வதில் காணப்பட்ட மேம்பட்ட ஆர்வத்தினைச் சுட்டிக் காட்டியது.

இத்திணைக்களம், நாணயத்தினைக் கையாளுவதில் பொதுமக்களின் விழிப்புணர்வினை உயர்த்து முகமாக பின்வரும் கண்காட்சிகளிலும் பங்குபற்றியது.

அ. சப்பிரகமுவ பல்கலைக்கழகம் நிறுவி 10வது ஆண்டு நிறைவினை ஞாபகப்படுத்தும் கல்விக் கண்காட்சி 2006 சனவரி 30 முதல் பெப்புருவரி 2 வரை பெலிகல்ஓயாவில் இடம் பெற்றது.

ஆ. 2006 மாச்சு 9 முதல் 12 வரை அநுராதபுரம் மாவட்டம் வணிக கைத்தொழில் வேளாண்மை சம்மேளனம் மற்றும் மத்திய வங்கி பிரதேச அலுவலகம் என்பன இணைந்து அநுராதபுரத்தில் வியாபார அபிவிருத்திப் பணி வழங்குநர்களுக்காக ஒழுங்கு செய்துள்ள "அநுராதபுர உதானய" என்ற வருடாந்த கண்காட்சி.

இ. 2006 ஓகத்து 5 முதல் 9 வரை கம்பளை யசோதராதேவி பாலிகா மகா வித்தியாலத்தில் இடம் பெற்ற கல்விக் கண்காட்சி.

ஈ. 2006 ஒத்தோபர் 24 முதல் 29 வரை மினுவாங்கொடை நாலந்தக் கல்லூரியில் இடம் பெற்ற மகாபொல கல்விக் கண்காட்சி.

இந்த அனைத்து கண்காட்சிகளிலும் நிறுவப்பட்ட மத்திய வங்கியின் விற்பனைக் கூடத்திற்கு ஏராளமான பாடசாலை மாணவர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் பெருமளவு ஆதரவு கிடைத்தது.

## 5. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்


உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முக்கிய தொழிற்பாடுகளான வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது, வர்த்தக வங்கிகளுக்கும் அரசுக்கும் வங்கியாளராக தொழிற்படுவது மற்றும் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையை வசதிப்படுத்துவது என்பவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டது.

### 5.1 நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

#### (அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

திணைக்களமானது 2003இல் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கட்டமைப்பின் அடிப்படையில் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களால் அமைக்கப்பட்ட வட்டிவீத அமைப்பினுள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பலவித தொழிற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. (அ) ஒன்றில் மிகையான திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காக அல்லது திரவத்தன்மையில் பற்றாக்குறை காணப்படுமாயின் திரவத் தன்மையினை உட்புகுத்துவதற்கான நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகளுக்காக நாளாந்த அடிப்படையில் ஏலங்களை நடாத்துதல். (ஆ) துணைநில் வசதிகளின் கீழ் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளுக்கான ஏற்பாடுகள். (இ) நீண்டகால அடிப்படையில் திரவத்தன்மையை ஈர்ப்பதற்கான அல்லது அதிகரிப்பதற்கான மத்திய வங்கியின் தற்றுணிபின் படியான திறைசேரி உண்டியல்களின் கொள்வனவுகள் (முதலாந்தர மற்றும் இரண்டாம்தர சந்தையில்) மற்றும் திறைசேரி முறிகளின் (இரண்டாம்தர சந்தையில்) கொள்வனவு என்பவற்றினை நடாத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. 2006 யூன் மாதம் 19ஆம் நாள்வரை அனைத்து வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு தகுதி வாய்ந்த பங்குபற்றும் நிறுவனங்களாகக் காணப்பட்டன. அதன் பின்னர் மத்திய வங்கியானது அதன் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மாத்திரமே மேற்கொண்டது. மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களான மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பவற்றை நான்கு படிமுறைகளில் 125 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 8.75 சதவீதம் மற்றும் 10.25 சதவீதத்திலிருந்து 10.00 சதவீதத்திற்கும் 11.50 சதவீதத்திற்கும் அதிகரித்தது.

வரைபடம் II - 1




இவ்வாண்டில் முதல் அரைப் பகுதியில் மிகையாக விளங்கிய வங்கித்தொழில் முறைமையிலான திரவத்தன்மை படிப்படியாக வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதியளவில் பற்றாக்குறையாக மாறியது (வரைபடம் I). இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் காணப்பட்ட திரவத் தன்மை கூடியளவுக்கு அதிகரித்தமைக்கு முக்கியமாக அரசுக்கான தற்காலிக முற்பணங்களின் விடுப்பு மற்றும் வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய உட்பாய்ச்சல்கள் என்பன காரணங்களாக அமைந்தன. இவ்வாண்டின் பிற்பகுதியில் நிலவிய திரவத்தன்மைப் பற்றாக்குறை முக்கியமாக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் காணப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பருவகால கேள்வியால் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் ஏற்பட்டது.

#### (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்கள்


***மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்***

வங்கித்தொழிற் துறையில் காணப்பட்ட மிகைத் திரவத்தன்மையை நாளாந்த அடிப்படையில் தற்காலிகமாக ஈர்ப்பதற்காக திணைக்களமானது தொடர்ந்தும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏலங்களை நடாத்தியது. இவ்வாண்டின் அநேகமான நாட்களில் பதிவு செய்யப்பட்ட மிகைத் திரவத்தன்மையானது திறைசேரி உண்டியல்களை மீள்கொள்வனவு அடிப்படையில் நாளாந்த ஏலங்களில் விற்பனை செய்வதன் மூலம் ஈர்க்கப்பட்டது. சராசரியாக ரூ.7.4 பில்லியன் ஏலத்திற்காக வழங்கப்பட்டது. இது மதிப்பிடப்பட்ட மிகைத் திரவத்தன்மையில் 94 சதவீதமாகக் காணப்பட்டது. ஆண்டின் ஆரம்பத்தில் 9.29 சதவீதமாக, வட்டிவீத அமைப்பின் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட ஏலத்திலான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமானது கொள்கை வீதங்கள் மேல் நோக்கிச் சீரமைக்கப்பட்டதனையும், ஆண்டின் இறுதியில் வங்கித்தொழில் முறைமையில் நிலவிய திரவத்தன்மைப் பற்றாக்குறையினையும் தொடர்ந்து படிப்படியாக ஆண்டின் இறுதியில் வட்டிவீத அமைப்பின் உயர்ந்த மட்டத்தினை நோக்கி அதிகரித்தது. ஆண்டு இறுதியளவில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 11.00 சதவீதமாகக் காணப்பட்டது (வரைபடம் II)

***நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்***

வங்கித்தொழில் முறைமையின் திரவத்தன்மையானது ஒரு பற்றாக்குறை நிலைக்கு வீழ்ச்சியடையும் வேளையில் வட்டி திரவத்தன்மையை வழங்குவதற்காக 2006 யூன் வரையான காலப்பகுதியில் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான நாளாந்த ஏலங்கள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டன. யூன் 2006 இல் நாணயக் கூட்டுக்களின் தொடர்ச்சியான மிதமிஞ்சிய விரிவாக்கத்தினைக் கருத்திற் கொண்டு நேர்மாற்று மீள்கொள்வனவுக்கான ஏலங்களினை

வரைபடம் II - 2




நடாத்துவது இடைநிறுத்தப்பட்டதுடன் சந்தையானது வட்டிவீத அமைப்பின் உயர்ந்த மட்டத்திற்கு அண்மித்ததாக தொழிற்பட அனுமதிக்கப்பட்டது. எனினும், தேவையென்று கருதப்படும் வேளைகளில் மாத்திரம் இதை நடாத்துவதற்காக நேர்மாற்று மீள்கொள்வனவுகளுக்கான ஏலங்கள் 2006 செத்தெம்பரில் மீள அறிமுகப்படுத்தப்பட்டன. அக்காலப்பகுதியில் நிலவிய பெருமளவிலான திரவத்தன்மைப் பற்றாக்குறையின் காரணமாக நடாத்தப்பட்ட ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் வட்டிவீத அமைப்பின் மேல் மட்டத்தில் காணப்பட்டது.

### (ii) துணைநில் வசதிகள்

வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தைகளின் கொடுக்கல் வாங்கல்களின் ஊடாகவும் அல்லது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் நாளாந்த ஏலங்களிலும் தமது குறுங்கால திரவத்தன்மைக்கான தேவையினை முழுமையாக ஈடுசெய்து கொள்ள முடியாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் தொடர்ந்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தன. மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களில் இந்த வசதிகள் வழங்கப்பட்டன.

#### *மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்*

ஏலங்களில் தமது தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாத அல்லது தமது வங்கிகளுக்கிடையிலான செயற்பாடுகள் தொடர்பில் தாமாகவே விதித்த வரையறைகளின் காரணமாக மேலதிக நிதிகளினை பணச்சந்தையில் முழுமையாக கடன்வழங்க முடியாத பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதிகளை நாடியுள்ளன. எனினும், ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்து சென்ற மிதமிஞ்சிய நாணய விரிவாக்கத்தின் காரணமாக வங்கித்தொழில் முறையில் காணப்பட்ட மேலதிக திரவத்தன்மையின் ஏறக்குறைய முழுத்தொகையினையும் ஈர்த்துக் கொள்வதற்காக மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏலங்கள் நடாத்தப்பட்டமையினால் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான துணைநில் வசதிகளின் பயன்பாடு ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது.

#### *நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்*

வங்கித்தொழில் முறைமையில் திரவத்தனமை பற்றாக்குறை காணப்படுமிடத்து பங்கேற்கும் நிறுவனங்கள் நேர்மாற்று மீள்கொள்வனவுகளினூடாக மத்திய வங்கியிடமிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்வதுடன், இது இறுதியாக நாடப்பட வேண்டிய வழிமுறையாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், குறித்த சில வங்கிகள் ஒரு கிரமமான நிதியிடல் மூலமாக நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை நாடியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. மேலும், திரவத்தன்மையானது பரந்தளவில் சமநிலைத்தன்மையுடையதாகக் காணப்பட்ட போதும் அல்லது ஒப்பீட்டளவில் சிறியளவிலான மிகையுடன் சந்தை தொழிற்பட்ட போதும் பங்கேற்கும் நிறுவனங்கள் இந்த வசதியனைப் பயன்படுத்தியமையையும் அவதானிக்க முடிந்தது. ஆண்டு காலப்பகுதியிலான நாணயக்கூட்டுக்களின் மிதமிஞ்சிய விரிவாக்கம் மற்றும் 2006 யூனில் வங்கியிடமிருந்தான தொடர்ச்சியான மிதமிஞ்சிய கடன்பாடுகள் நாணயக்கொள்கை மீதான பாதகமான தாக்கம் போன்றவற்றினைக் கருத்திற் கொண்டு நேர்மாற்று மீள்கொள் வனவுக்கான ஏலங்களை நடாத்துவதில்லை எனவும் கிரமமான அடிப்படையில் துணைநில் வசதிகளின் கீழ் மத்திய வங்கியின் நிதிகளினைப் பயன்படுத்துவதனை தார்மீக ஒழுக்காற்று முறைகளூடாக ஊக்கமிழக்கச் செய்வதெனவும் 2006 யூன் மாதத்தில் வங்கி தீர்மானித்தது. இறுதிப் புகலிடமாக மாத்திரமே இதனை நாடுமாறும் தமது ஐந்தொகையில் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்வதனூடாக வளங்களின் கிடைப்பனவுகளிற்கேற்ப தமது செயற்பாடுகளினை மட்டுப்படுத்துமாறும் பங்கேற்கும் நிறுவனங் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

துணைநில் வசதிகளின் கிடைப்பனவு 2006 செத்தெம்பர் 26 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டதுடன் தேவையென கருதப்படும் போது மாத்திரம் வங்கித்தொழில் முறைக்கு திரவத்தன்மையை வழங்குவதற்காக நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான நாளாந்த ஏலங்களை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. எனினும் துணைநில் வசதி 2006 செத்தெம்பர் 28ஆம் நாளில் மீளத் தொடங்கப்பட்டது. மேலும், 2007 சனவரி 1ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மை மிகை காணப்படும் பொழுது துணைநில் வசதிகளின் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவினை இடை நிறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

### *(iii) உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்*

அளவுக்கதிகமான திரவத்தன்மையை நிரந்தர அடிப்படையில் ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கி தனது சொத்துப்பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களை உடனடியாக விற்பனை செய்வதற்கான ஏலங்களை நடத்துவதில் ஈடுபட்டது. ஆண்டு காலப்பகுதியில் வங்கியானது ரூ.34.9 பில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்ட திறைசேரி உண்டியல்களை ஏலங்களூடாக விற்பனை செய்தது. இத்திறைசேரி உண்டியல்கள் மிகக் குறுகிய காலத்துக்குரியனவாகவும், முதிர்ச்சிக்கு மிகுதியாகவுள்ள நாட்களின் எண்ணிக்கை 10 இலிருந்து 46 நாட்களிற்கிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன. இந்த விற்பனைகள் ஒவ்வொன்றும் முதன்மைச் சந்தையில் 91 நாட்களுக்கான திறைசேரி உண்டியல்களுக்கு நிலவும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைந்தளவான விளைவு வீதத்தில் காணப்பட்டன.

## (ஆ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

திணைக்களமானது நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியதுடன், இது இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களின் 10.00 சதவீதமாகக் காணப்பட்டது.

## (இ) வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் குறித்

துரைக்கப்பட்டதன் படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களின் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கி வீதம்) 15.00 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும் எந்தவொரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாததினால் இவ்வீதம் தொழிற்படாமலிருந்தது.

### 5.2 வர்த்தக வங்கிகளுக்கும், அரசிற்கும் வங்கித்தொழில் பணிகளைப் பேணல்

#### (அ) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில், வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தீர்ப்பனவு முறையானது வினைத்திறனுடன் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தும் வகையில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்குகின்றது. இக்கணக்குகள் வங்கியின் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைக்கமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்டன.

#### (ஆ) அரச கணக்குகளைப் பேணல்


திணைக்களமானது அரச திணைக்களங்கள், அரச முகவர் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவற்றிற்குத் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2006 இறுதியில் 38 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டில் 8 புதிய கணக்குகள் திறக்கப்பட்டதுடன் அரசின் கோரிக்கையினையடுத்து 3 கணக்குகள் மூடப்பட்டன. நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 89 இன் நியதிகளின்படி வங்கியானது அரசுக்கு தொடர்ந்தும் முற்பணங்களை வழங்கி வருகிறது. அத்தகைய முற்பணங்களின் மீதான வரையறை (மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையில் 10.00 சதவீதம்) 2006இல் ரூ.8.3 பில்லியனினால் ரூ.49.5 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இம்முற்பணங்களின் மீது வட்டி விதிக்கப்படுவதில்லை.

### 5.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு

உண்மை நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமானதும், வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்து வதற்காக திணைக்களம் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை தொடர்ந்தும் வழங்கியது. அரச திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் பிணைகளுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி தொடர்ந்தும் கட்டணமின்றி வழங்கப்படுகின்றது. அந்நாளில் விலைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்கும் போதுமான ''இலாப''மொன்றிற்கு ஏற்ப பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை வீதங்களில் மதிப்பிடப்படுகின்றன. இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ.543.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.538.6 பில்லியனாக விளங்கியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் நாளொன்றிற்கான சராசரி எடுப்பனவு ரூ.2.1 பில்லியனாக காணப்பட்டது (வரைபடம் II.3). வங்கி வீதத்திலான தண்ட வட்டி மற்றும் திரும்ப திரும்ப செலுத்தத் தவறுமிடத்து வசதியினை இடைநிறுத்தல் போன்ற வழிமுறைகள் நடைமுறைக்கிடப் பட்டமையின் காரணமாக லங்கா செட்டிலின் வியாபாரம் மூடப்படுவதற்கு முன் ஒரு

வரைபடம் II - 3

எடுக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி - 2006




நாளுக்குள்ளேயான திரவத்தன்மையினை மீளச் செலுத்துவது உறுதிப்படுத்தப்பட்டது.

## 6. பொருளாதார ஆராய்ச்சி

ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது மத்திய வங்கியின் 'பொருளாதார சிந்தனைகளின் கருவூலம்' என்ற வகையில் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இந்த வேலையானது இதனை பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்களை திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் என்பனவற்றுடன் நாணயச்சபை மற்றும் மத்திய வங்கியின் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுவதற்காக கொள்கை நோக்கிய பொருளாதார ஆராய்ச்சிகளினை நடாத்துவதனையும் தேவைப் படுத்தியது. இதன் ஆராய்ச்சி ஆய்வுகள் நாணயக் கொள்கையினை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் போன்றவற்றுக்கும் அரசாங்கத்திற்கான பொருளாதார ஆலோசகரான மத்திய வங்கியின் தொழிற்பாட்டினை செயற்படுத்துவதற்கும் அத்தியாவசியமான உள்ளீடாக அமைந்தன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் சமூகப் பொருளாதாரத் தரவுகளையும் தகவல்களையும் வங்கியின் நியதி அறிக்கைகளினூடாக கிரமமாக பொதுமக்களுக்கு வெளியிட்டுள்ளது. மேலும், உரிய நேரத்தில் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தரவுகளை வாராந்த மற்றும் மாதாந்த தெரிந்தெடுக்கப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகளின் வெளியீடுகளினூடாக சந்தைகளுக்கு வெளியிடப்பட்ட அதேவேளை இவை மத்திய வங்கியின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2006இல் தொடர்ந்தும் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் நாணயக்கொள்கை மீளாய்வு தொடர்பான கிரமமான மாதாந்த பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டது. மேலும், பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு முக்கிய பொருளாதாரப் பிரச்சனைகளை தெளிவுபடுத்துவதற்காக காலத்துக்குக் காலம் பல பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மீதும் ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைக்கான பொருத்தமான கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மீதும் முக்கிய கவனம் செலுத்தின. இதனைப் பொறுத்தவரை நாணயக்கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு வலியுறுத்தப்பட்டது. அனைத்தையு முள்ளடக்கிய பொருளாதார மற்றும் நாணயத் துறையின் அபிவிருத்திகளின் பகுப்பாய்வினை வழங்குவதன் மூலம் நாணயக்கொள்கை குழுவின் ஆழ்ந்த கருத்துக்களுக்கு வசதியளிப்பதில் திணைக்களம் இன்றியமையாத பங்கொன்றினை

வகித்தது.

இந்த வகையில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களமானது விலை உறுதிப்பாட்டின் பாதுகாவலனாக மாத்திரமின்றி அந்த இலக்கினை அடைவதற்கான பொருத்தமான நாணயக்கொள்கையினை உருவாக்குபவராகவும் தொழிற்பட்டுள்ளது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். இவற்றுள் சில பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட "உயர் அலுவலர் ஆய்வுகளில்" வெளியிடப்பட்டன.இவ்வாராய்ச்சி கட்டுரைகளாவன

(அ) மத்திய வங்கியின் தொடர்பூட்டல் கொள்கை: இலங்கை பற்றிய ஆய்வு - முனைவர் எச்.என். தேநுவர

(ஆ) தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்: அனுபவங்களின் ஆய்வு - முனைவர் டி.எஸ். விஜேசிங்க

(இ) இலங்கையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தினை மாதிரிப்படுத்துவது எதிர்வு கூறலும் - திருமதி ரூபா தீரசிங்க

(ஈ) இலங்கையில் நெற்செய்கையின் மீதான வளமாக்கி உதவுதொகையின் தாக்கம் - திருமதி. எச்.கே.ஜே. எக்கநாயக்க

எண்ணெய் விலைகளில் ஏற்படுகின்ற கூடியளவான ஏற்றத்தாழ்வுகளின் கடுமையான பேரண்டப் பொருளாதார சிக்கல்கள் பற்றி தீவிரமாக ஆய்வு செய்ததன் பின்னர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பன்னாட்டுச் சந்தைகளில் கொள்வனவு செய்யப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகள் தொடர்பாக காப்பீட்டு ஒழுங்குகளைச் செய்யுமாறு திணைக்களம் விதந்துரைத்தது. அமைச்சரவையில் ஆளுநரினால் விளக்கப்பட்ட "ஏற்றத்தாழ்வுகளுக்குட்படும் உலகளாவிய எண்ணெய் சந்தையில் உறுதிப்பாட்டினைப் பேணுதல்" என்ற விளக்க அறிக்கையினை பொருளாதார ஆய்வுத் திணைக்களம் தயாரித்தது. இம்முயற்சிகளின் விளைவாக, அமைச்சரவையின் ஒப்புதலுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2007 பெப்புருவரியிலிருந்து காப்பீட்டு ஒழுங்குகளின் கீழ் எண்ணெய் தேவைகளில் ஒரு பகுதியினைக் கொள்வனவு செய்வதனை தொடங்கக்கூடியதாக இருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பன்னாட்டு நிறுவனங்களான சியசென் என அழைக்கப்படும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் நிலையம் மற்றும் சார்க்நிதி என அழைக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென் ஆசிய அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து கூட்டு ஆராய்ச்சிகளை நடாத்துவதில் ஈடுபட்டிருந்தனர். பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் வங்கிக்குள்ளேயும் வெளியேயும் பல்வேறு முக்கிய குழுக்களில் பணியாற்றினர். ஆண்டு காலப்பகுதியில் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை தொடர்பாக இந்தியாவுடன் மூன்று கட்டப் பேரம் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் பல்வேறு முக்கிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளின் இயக்குனர்களாகவும் மற்றும் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மூலவள ஆட்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

வங்கியின் 2007-11 வரைக்கான உபாய திட்டத்தின் உருவாக்கத்தில், விசேடமாக மைய துறைகளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு போன்றவற்றில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தீவிரமாகப் பங்களிப்புச் செய்துள்ளது. பெயரளவுக் தாக்கமுள்ள கேள்விக் காரணிகளின் செல்வாக்குக்குட்பட்ட விலை நடத்தையினை அடையாளம் கண்டு கொள்வதற்காக மையப் பணவீக்க அளவீட்டினையும் இது உருவாக்கியுள்ளது. இந்த அளவீடானது விலைகளிலான பருவகால வேறுபாடுகளினை விலக்கி வங்கியினால் பொருத்தமான நாணயக்கொள்கையை மேற்கொள்வதற்கான குறிகாட்டியினை வழங்குகின்றது. மேலும், வங்கியின் முக்கிய நாணயக்கொள்கை உபாயமாக பணவீக்க இலக்கிடலினை கையாளுவதற்கான முன்னோடியாக பணவீக்க எதிர்வு கூறலை மேம்படுத்துவதற்காக காவி தன்னியக்க பிற்செலவு மாதிரி மற்றும் தன்னியக்க பிற்செலவு அசையும் சராசரி மாதிரி போன்றன உருவாக்கப்பட்டன.

நியதி அறிக்கைகள் மற்றும் வங்கியின் ஏனைய சிறப்பு அறிக்கைகளினை மூன்று மொழிகளிலும் தயாரிப்பது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஒரு முக்கியமான பொறுப்பாகும். திணைக்களம் 2005ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2006இன் முக்கிய பண்புகளும் 2007இற்கான வாய்ப்புக்களும், மற்றும் 2006இன் 12 மாதாந்த செய்தித்திரட்டுக்கள் என்பவற்றின் வெளியீடுகளை ஒருங்கிணைத்தது. இலங்கையில் கிடைக்கத்தக்க முதலீட்டு வாய்ப்புக்கள், பல்வேறு அரசதுறை முகவர்களாலும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகளும் ஊக்குவிப்புக்களும் மற்றும் நாட்டின் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் போன்றவை தொடர்பான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கச் செய்வதற்காக "இலங்கை - இதுவே சரியான தருணம்" என்ற கையேட்டினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தயாரித்தது. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், நாணயவிதிச்சட்டத்தின் கீழ் நிதியமைச்சருக்கு மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட பல்வேறு நியதி அறிக்கைகளையும் தயாரித்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தொடர்ந்தும் அறிவூட்டி வந்துள்ளது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வங்கி மற்றும் அரசின் சார்பில் தொடர்ந்தும் பன்னாட்டு பல்புடை நிதி நிறுவனங்களுடனான உறவுகளினை ஒருங்கிணைத்து வருகிறது. இதன்படி, பன்னாட்டு நாணய நிதியத்துடன் குறிப்பாக உறுப்புரை IV இன் ஆலோசனைகள், அரசுகளுக்கிடையான இருபத்து நான்கு குழுமம் (ஜீ-24), தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான நிலையம், தென்கிழக்காசியா, நியூசிலாந்து, அவுத்திரேலியா மத்திய வங்கிக்குழு மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களினதும் நிதிச் செயலாளர்களினதும் சார்க் நிதிக்குழு என்பனவற்றுடனான இலங்கையின் உறவுகளினை இது ஒருங்கிணைத்தது. 2006இல் உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை கொடையாளி நாடுகளுடனான வேலைகளை ஒருங்கிணைப்பதற்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நிதியமைச்சிற்கு உதவியது. 2006 சனவரியில் "எண்ணெய் விலை உயர்வு - சார்க் நாடுகளிற்கான தாக்கங்கள்" எனும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பு

நிதிக்குழுவின் கருத்தரங்கினை ஒழுங்கமைப்பதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் முக்கிய பொறுப்பினை வகித்தது. மேலும், 2006ஆம் ஆண்டில் 2006-2016 வரையான பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு கலந்துரையாடல் ஆவணத்தினை தயாரிப்பதில் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் துணை புரிந்தது. தேசிய பொருளாதார அபிவிருத்திச் சபையின் கீழ் தொழிற்படுகின்ற பல்வேறு கொத்தணிகளிலுமுள்ள பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் தீவிரமாகப் பங்கு பற்றியுள்ளதுடன் பல்வேறு முக்கிய பிரச்சனைகளில் தமது கருத்துக்களை பரிமாறியுமுள்ளனர்.

அரசுக்கான பொருளாதார ஆலோசகர் எனும் வகையில் பல்புடை மற்றும் இருபுடை கொடையாளிகள் மற்றும் வர்த்தக மூலங்களிலிருந்து அரசு பெற்றுக் கொண்ட எல்லாப் பன்னாட்டுக் கடன்களினதும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அவற்றின் நாணய ரீதியான தாக்கம் போன்றவற்றை தொடர்ந்தும் மதிப்பீடு செய்ததுடன் நாணய ரீதியான தாக்கங்கள் குறித்து நாணயச்சபைக்கு பல்வேறு நாணயச்சபைக்கான பத்திரங்களை சமர்ப்பித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களினால் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் எழுப்பப்பட்ட வினாக்களுக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பதில்களைத் தயாரித்துள்ளது.

2006 செத்தெம்பரில் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்துடன் இணைந்து அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய உத்தேச முதலீட்டாளர்களுக்கு இலங்கையானது முதலீட்டிற்கான ஒரு சிறந்த நாடு என்பதனை விளக்கும் நோக்கில் இலங்கையின் பொருளாதார மற்றும் முதலீட்டு மாநாட்டினை சிங்கப்பூரில் ஒழுங்குபடுத்தியது. பொருளாதார உறுதிப்பாட்டினை அடைவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் அண்மைக்கால கொள்கைகள் தொடர்பான விழிப்புணர்ச்சியினை அதிகரிப்பதற்காக வர்த்தக வங்கிகள், தனியார் துறை நிறுவனங்கள், வர்த்தக சம்மேளனம் மற்றும் சங்கங்கள் மற்றும் ஊடக ஆளணிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கான ஒரு கூட்டத்தினையும் 2006 நவெம்பரில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒழுங்குபடுத்தியிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுடன், அவர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக பல்வேறு கூட்டங்களை ஒழுங்கமைத்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வழிகாட்டல்கள்: 2007இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் கொள்கைகள் என்பதனை தயாரித்ததுடன் இது 2007 சனவரி 2ஆம் நாளில் பங்காளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இது பொருளாதாரத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகளையும் 2006இல் மேற்கொள்ளப்பட்ட நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கைகளையும் 2007இலும் அதற்கு அப்பாலும் நாணயக் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டில் எதிர்நோக்கப்படுகின்ற சவால்களையும் 2007இலும் அதற்கு அப்பாலும் நிதியியல்முறை உறுதிப்பாட்டிற்கான கொள்கைகளையும் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டிற்கான கொள்கைகளையும் குறிப்பிடுகிறது.

## 7. ஊழியர் சேமநிதியம்

ஊழியர் சேம நிதிய சட்டத்தின் நியதிகளின்படி நாணயச் சபையானது, உதவுதொகை, தண்டப்பணம் பெறுதல், முதலீடுகளிலிருந்தான வருமானம் என்பவற்றைப் பெறல், பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தினதும் கணக்குகளைப் பேணுதல், மேலதிக பணத்தினை பொருத்தமான முதலீடுகளில் முதலீடு செய்தல், நிதியத்தின் உறுப்பினருக்கு அத்தகைய நன்மைகளை வழங்குதல் என்பவற்றுக்கு பொறுப்பாக விளங்குகிறது. 2006இல் இந்த நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் சேம நிதியப் பிரிவின் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

### 7.1 உறுப்பினர் நிலுவைகளும், மீளவளித்தலும்

இவ்வாண்டில் மொத்த உறுப்பினர் நிலுவைகள் 2005இன் ரூ.418 பில்லியனிலிருந்து ரூ.477 பில்லியனுக்கு 14 சதவீதத்தினால் அதிகரித்தன. கிட்டத்தட்ட 8,099 புதிய தொழில்தருநர்கள் நிதியத்தில் இணைந்துள்ளதுடன் உதவுதொகை செலுத்தும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2006 இறுதியில் 64,023 இற்கு அதிகரித்தது. நிதியத்தின் முக்கிய வெளிப்பாய்ச்சலான உறுப்பினர்களுக்கான மீளநிதியளித்தல் இவ்வாண்டில் ரூ.17.6 பில்லியனுக்கு வகை கூறியது.

### 7.2 முதலீட்டு நடவடிக்கைகளும் வருமானங்களும்

இவ்வாண்டில் நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2005இன் ரூ.405 பில்லியனிலிருந்து ரூ.465 பில்லியனுக்கு 14.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது (அட்டவணை II-4). ஆண்டினிறுதியில் ஊழியர் சேம நிதியத்தின் மொத்த முதலீட்டுப்பட்டியலில் 96.8 சதவீதமானவை ஏற்றுக் கொள்ளத்தக்க இடர்நேர்வுடன் கிடைக்கத்தக்க மாற்று முதலீடுகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் நிறைகாப்பு அரச பிணையங்களில் காணப்பட்டன. எனினும் சந்தைவட்டி வீதங்கள் விரைவாக அதிகரித்துச் செல்லும் பணவீக்க வீதங்களுக்கேற்ப உரிய முறையில் சீராக்கப்படவில்லை. இதனால், நிதியத்தினால் உறுப்பினர் நிலுவைகளுக்கு அறிவிக்கப்படும் வட்டி வீதம் அரச பிணையங்களுக்கான வட்டி வீதங்களால் பெருமளவு தீர்மானிக்கப்படுகிறது.

நடுத்தரகால சந்தைப்படுத்தக் கூடிய முதலீட்டுக் கருவியான

**அட்டவணை II - 4**

**2006 இறுதியில் ஊழியர் சேம நிதிய முதலீட்டுச் சொத்துப்பட்டியலும் இலாபங்களும்**

| கருவி | செலவுப் பெறுமதி (ரூ. பில்.) | % |
|---|---|---|
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 393.8 | 84.78 |
| ரூபாக் கடன்கள் | 56.1 | 12.08 |
| கம்பனி தொகுதிக்கடன்கள் | 7.0 | 1.50 |
| மீள்கொள்வனவுகள் | 4.0 | 0.85 |
| பங்குகள் | 3.6 | 0.78 |
| **மொத்தம்** | **464.5** | **100.00** |

| வருமான மூலங்கள் | வருமானம் (ரூ. மில்.) | % |
|---|---|---|
| வட்டி வருமானம் | 44.164 | 95.0 |
| பங்கு இலாபம் | 120 | 0.3 |
| மூலதன இலாபம் | 1,017 | 2.2 |
| கடன்தீர்ப்பனவு இலாபம் | 1,073 | 2.3 |
| மேலதிகக் கட்டணங்கள் | 76 | 0.2 |
| **மொத்தம்** | **41,844** | **100.00** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II - 5

**ஊ.சே.நி. 2005 இலும் 2006 இலும் உள்ள காலப்பகுதியில் பட்டியலிடப்பட்ட பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்**

ரூ.மில்.

| விடயம் | 2005 | 2006 |
|---|---|---|
| சராசரி சொத்துப்பட்டியல் | 2,335 | 3,283 |
| மொத்த பங்கிலாப வருமானம் | 91 | 115 |
| பெறப்பட்ட மொத்த மூலதன இலாபம் | 817 | 320 |
| பெறப்படாத மொத்த மூலதன இலாபம் | 1.2 | 719 |
| **மொத்த பங்கிலாபங்களும் மூலதன இலாபங்களும்** | **909** | **1,154** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

திறைசேரி முறிகளிலான முதலீடுகள் முன்னைய ஆண்டின் 83 சதவீதத்திற்கு எதிராக 2006 இறுதியில் 85 சதவீதத்துக்கு அதிகரித்தது. சந்தையப்படுத்த முடியாத கருவியான அரச ரூபாப் பிணையங்களிலான முதலீடுகள் 2005இன் இறுதியிலான சொத்துப்பட்டியலின் 14 சதவீதத்திலிருந்து மேலும் 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

2006இல் மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் நியதிகளில் பங்கு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் ரூ.435 மில்லியனுக்கு வகைகூறி 13.25 சதவீத வருமானத்தைப் பதிவு செய்தவேளையில் பெறப்படாத மூலதன இலாபங்களை உள்ளடக்கிய மொத்த வருமானம் 35.15 சதவீதத்திற்கு வகை கூறியது (அட்டவணை 11-5). நீண்டகால இருப்புக்களில் சொத்துப்பட்டியலை வைத்திருப்பதற்கான உபாயமானது ஊழியர் சேம நிதியத்தை அத்தகைய இருப்புக்களை விற்காமல் வைத்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கின்றது. 1998 இலிருந்து 2006 வரையிலான ஒன்பது ஆண்டுகளைக் கொண்ட முழு முதலீட்டுக் காலப்பகுதியிலும் ஊழியர் சேமநிதியம், பங்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலிருந்து சராசரியாக 20 சதவீதமான வருமானத்தைப் பெற்றதுடன் இது 2006 இறுதியில் ஊழியர் சேம நிதியத்தின் மொத்த சொத்துப்பட்டியலில் 0.8 சதவீதத்தை மட்டுமே கொண்டிருந்தது.

2006இல் அரச பிணையங்களிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபங்கள் 2005ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தூண்டுதலற்ற சந்தை நிலவரங்களின் காரணமாக வீழ்ச்சியடைந்தது. அரச பிணையங்களின் விளைவுகள் இவ்வாண்டில் ஏற்பட்ட பல கொள்கை வீத அதிகரிப்புக்கள் மற்றும் பணவீக்கம் உயர்வடைந்தமையின் விளைவாக மேல் நோக்கி அசைந்தன. திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபங்கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்ததுடன், பங்குச் சொத்துப் பட்டியலிலிருந்து பெறப்பட்ட மூலதன நன்மைகள் 2005இல் பதிவு செய்யப்பட்ட ரூ.817 மில்லியனிலிருந்து 2006இல் ரூ.320 மில்லியனுக்கு 61 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் உயர்ந்த அளவான ரூ.719 மில்லியன் கொண்ட பெறப்படாத இலாபமானது, 2006இன் ரூ.1,008 மில்லியன் கொண்ட மொத்த மூலதன இலாபங்களுக்கு கணிசமானளவுக்கு பங்களிப்புச் செய்தது.

அட்டவணை II - 6

**2006 காலப்பகுதியில் ஊழியர் சேம நிதியத்தினாலான இரண்டாம்தரச் சந்தை நடவடிக்கைகள்**

ரூ.மில்.

| விடயம் | கொள்வனவு அளவு | | விற்பனை அளவு * | | மூலதன நன்மைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2005 | 2006 | 2005 | 2006 |
| திறைசேரி முறிகள் | 5,188 | 8,385 | 11,433 | 9,159 | 774 | 696 |
| திறைசேரி உண்டியல்கள் | 196 | - | 381 | 238 | 0.12 | 0.19 |
| சாதாரண பங்குகள் | 2,703 | 1,244 | 1,628 | 591 | 817 | 320 |
| **மொத்தம்** | **8,087** | **9,629** | **13,442** | **9,988** | **1,591** | **1,016** |

* செலவுப் பெறுமதியில் மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 7.3 மொத்த உறுப்பினர் நிலுவையும் 2006ஆம் ஆண்டிற்கான வட்டி வீதமும்

ஊழியர் சேம நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை வரவு செலவுத் திட்டத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட வட்டி வீதமான 10.1 சதவீதத்திற்கு கணக்கீடு செய்த பின்னர் 2006 இறுதியில் ரூ.477 பில்லியன் கொண்ட பெறுமதிக்கு 15 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. முழு நிலுவைக்கும் வட்டி வீதத்தினைப் பிரகடனப்படுத்தும் நிதியத்தின் சட்ட பூர்வமான தேவைப்பாட்டிற்கு அமைவாக, இவ்வாண்டில் பெறப்பட்ட உதவு தொகைகள் உட்பட, மதிப்பிடப்பட்ட வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 10.2 சதவீதமான பயன்தரு வீதமாக விளங்கியதுடன் இது வர்த்தக வங்கிகளினால் கொடுக்கப்படும் 6.80 சதவீதமான சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்தினை விட 3.5 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. ஊழியர் சேம நிதியம் வருடாந்தம் தமது உறுப்பினர்களுக்கு நேர்க்கணிய உண்மை பயன்தரு இலாப வீதத்தினைப் பிரகடனப்படுத்தப்பட முடியாத போதிலும் ஊழியர் சேம நிதியமானது திரட்சியான அடிப்படையில் நேர்க்கணிய உண்மை பயன்தரு வீத இலாபத்தினை தமது உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு முயற்சி செய்யும்.

### 7.4 உறுப்பினர் வெளிப்படுத்துகைகள்

2005இன் இரண்டாம் அரையாண்டுக்கான அரையாண்டு உறுப்பினர் கூற்றுக்கள் அவர்களின் தொழில்தருநர்களின் ஊடாக 2006 செத்தெம்பரில் வழங்கப்பட்டுள்ளன. 2006இன் முதல் அரையாண்டு காலத்திற்கான உறுப்பினர் கூற்றுக்களை அனுப்புதல் திசெம்பரில் தொடங்கப்பட்டது.

### 7.5 வீடமைப்புக் கடன் வசதிகள்

1988 முதல் ஊழியர் சேமநிதிய உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஊழியர் சேம நிதிய நிலுவைகளை பிணையாகக் கொண்டு வீடமைப்பு நோக்கங்களுக்காக வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கான வசதி கிடைக்கப் பெறுகிறது. இதற்கு மேலாக முதலாவது கடனை வெற்றிகரமாக தீர்ப்பனவு செய்தவர்களுக்கு இரண்டாவது கடனும் கிடைக்கத்தக்கதாகவிருக்கிறது.

2006ஆம் ஆண்டில் ஊழியர் சேம நிதியம் ரூ.3,049 மில்லியன் கொண்ட ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கொடுகடன் தொகைக்கான 15,136 உறுப்பினர் நிலுவை சான்றிதழ்களை வழங்கியது (அட்டவண II - 7). எனினும் கடன் தொகையினை திருப்பிச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு 36 சதவீதமான தண்ட வீதத்தினை விதித்த போதிலும் உறுப்பினர்கள் தொடர்ந்தும் இக்கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறி வருகின்றனர். செலுத்தத் தவறிய தொகையுடன் தண்ட வட்டியும் சேர்த்து குறிப்பிட்ட ஊழியர் சேம நிதிய உறுப்பினரின் உறுப்பினர் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு கடன் வழங்கும் நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுவதனால், அந்த உறுப்பினரைப் பொறுத்த வரையில் அவரின் ஓய்வு பெற்ற பின்னரான நன்மைகளில் கூடுதலான தேய்மானத்தை விளைவிக்கும்.

அட்டவணை II - 7

ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கான வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்

| ஆண்டு | உறுப்பினர் நிலுவை வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப் பட்ட கொடுகடன் தொகை (ரூ.மில்.) | செலுத்தத் தவறிய வீடமைப்பு கடன் (திரண்ட எண்ணிக்கை) | வீடமைப்புக் கடன் செலுத்தத் தவறியமைக்காக ஊ.சே. நிதியம் செலுத்திய தொகை (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 19,944 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 24,202 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 31,574 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 40,085 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 43,108 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 51,823 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 66,000* | 1,100* |

* மதிப்பிடப்பட்டது மூலம்: ஊழியர் சேம நிதியம்

அவ்வாறான கடனைச் செலுத்தத் தவறுபவர்கள் இரண்டாவது கடன் அல்லது சிராமோத வீட்டுக் கடன் திட்டத்தின் கீழான 4 சதவீத வட்டி வீதத்திலான கடன்களுக்கோ தகுதியற்றவர்களாவர்.

### 7.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

2006இல், இந்நிதியத்தின் நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு எட்டு ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன. இவற்றில் இலங்கை மத்திய வங்கி மாத்தளை பிரதேச அலுவலகத்தினால் ஆறு ஆய்வரங்குகளும் ஆறு வேறுபட்ட மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட வேளையில் மிகுதி இரண்டும் தனிப்பட்ட வேலைத் தலங்களில் ஒன்று சேர்ந்த வகையில் நடாத்தப்பட்டன.

### 7.7 முறைமையினை மேம்படுத்தல்

இந்நிதியத்தின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளிலுமான வினைத்திறன் மேம்பாடுகள் தொடர்ந்தும் உறுப்பினர்களுக்கு உயர்வான பணியினை வழங்கின. புதிய கணக்கீடு மற்றும் முதலீட்டுப் பொதியினை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவின் செயல்முறைகளில் ஏற்பட்ட கணிசமானளவு மேம்பாடுகள் இந்நிதியத்தின் முகாமைத்துவத்தில் வினைத்திறன் மற்றும் துல்லியமான தன்மையினை அதிகரித்தது.

ஊழியர் சேம நிதியமானது பூரணமான தொழில் முயற்சி மூலங்கள் திட்டமிடல் தீர்வான என்றழைக்கப்படும் மென்பொருள் முதலீட்டுப் பொதி ஒன்றை வெற்றிகரமாக அமுல்படுத்தியதன் மூலம் ஊழியர் சேம நிதியத்தின் வேறுபடுத்துவதற்கான உபாய நுண்ணறிவுத்திறன், இயலாற்றல் என்பவற்றை வழங்கி உற்பத்தித் திறனை அதிகரித்தது. இது ஒரு பணியை மையமாகக் கொண்ட வியாபாரத் தீர்வாக விளங்கி அமைப்பு ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான எல்லைகளை கடந்து மக்களையும், தகவல்களையும் மற்றும் வியாபாரச் செய்முறை என்பவற்றையும் இணைக்கின்றது.

ஊழியர் சேம நிதிய வெப்தளம் (www.epf.lk), பொதுமக்களுக்கு அதிகரித்த தகவல்கள் அனைத்தையும் மும்மொழிகளிலும் வழங்குவதற்காக மீளவடிவமைக்கப்பட்டு 2006 ஒத்தோபரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தரமுயர்த்தப்பட்ட வெப்தளமானது பங்கேற்பாளர்களுடன் சிறந்த செயல் நடவடிக்கைகளை வழங்கும் புதுப்பிக்கப்பட்ட பண்புகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வெப்தளம் தொழில்தருநர் உறுப்பினர்களுக்கு ஊ.சே.நி.தி தொடர்பிலான படிவங்களை பதிவிறக்கம் செய்யும் வசதிகளை வழங்கி வழக்கமாக கேட்கப்படும் வினாக்களுக்கான பிரிவினையும் உள்ளடக்கியிருந்தது. ஏனைய ஏதாவது விசாரணைகளை சமர்ப்பிப்பதற்காக இருக்கும் வசதியின் மூலம் தொடர்புபட்ட அலுவலர் கேட்கப்பட்ட தகவல்களுடன் மீண்டும் தொடர்பு கொள்ளலாம். ஊழியர் சேம நிதியத்தின் ஏனைய வழிமுறைகள் தொடர்பான பொதுவான தகவல்கள் வெப்தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேம நிதியமானது தொழில் திணைக்களத்தின் ஒருங்கிணைவுடன், இலத்திரனியல் ஊடகத்தினூடாக 150 மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட பெரிய தொழில்தருநரிடமிருந்து உதவி தொகையினைச் சேகரிப்பதற்கு ஏற்ற செயற்றிட்டத்தைத் தொடங்கியுள்ளதன் வாயிலாக உறுப்பினர் கணக்குகளை தன்னியக்கத்தினால் பூரணப்படுத்துவதனை வசதிப்படுத்தும். இந்த முறைமை நிதியச் செயல்முறையினையும், வீடமைப்புக் கடன்பத்திரங்கள் வழங்கலினையும் விரைவுபடுத்தும். இந்த நிதியம் 2007

அட்டவணை II - 8

ஊ.சே. நிதியத்தின் அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 2005 | 2006 * |
|---|---|---|
| உறுப்பினர்களின் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | 10,799,915 | 11,299,00 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் | 2,002,652 | 2,032,000 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் | 8,797,263 | 9,267,000 |
| உதவுதொகை செலுத்தும் தொழில்தருனர் | 55,924 | 64,023 |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 27,720 | 31,720 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 16,990 | 17,623 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 93,841 | 90,550 |
| மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல் (ரூ.பில்.) | 405 | 465 |
| மொத்த முதலீடுகளின் %மாக அரசபிணையங்களின் முதலீடுகள் (%) | 97.8 | 96.8 |
| மொத்த முதலீடுகளின் %மாக தனியார்துறை முதலீடுகள் (%) | 2.2 | 3.2 |
| சராசரிச் சொத்துப்பட்டியலின் மீதான பெறப்பட்ட வருமான வீதம் | 11.43 | 12.22 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்.) | 418 | 477 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 41,817 | 46,389 |
| வருமான வரி (ரூ.மில்.) | 3,201 | 2,762 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 411 | 425 |
| மொத்த வருமானத்தின் % ஆக நிருவாகச் செலவுகள் (%) | 0.98 | 0.92 |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு வட்டி வீதம் (%) | 9.00 | 10.1 |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது பிரகடனப் படுத்தப்பட்ட பயனுறு வட்டி வீதம் (%) | 9.13 | 10.2 |

* தற்காலிகமான தரவுகள் மூலம்: ஊழியர் சேம நிதியம்

காலப்பகுதியில் இம்முறைமையில் கூடிய தொழில்தருனரை பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக உறுப்பினர் உதவு தொகைகளைச் சேகரிக்கும் செயல்முறையினை முன்னேற்றுவதற்கு முதன்மை வழங்கப்பட்டுள்ளது. இதனால், இம்முறையில் 41 புதிய தொழில்தருநர்கள் இணைவதற்கு வழிவகுத்ததுடன் அத்தகைய தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை 254 இற்கு அதிகரித்தது.

ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீது தொழிற் திணைக்களம் மற்றும் ஊழியர் சேமநிதியம் இரண்டினாலும் இரு சுதந்திரமான தரவுத்தளங்கள் பேணப்படுவதன் காரணமாக ஏற்பட்ட பல்வேறுபட்ட பிரச்சனைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு, நிதியமானது அதன் உறுப்பினர்களது தகவல்களை சேகரிப்பதற்கும், ஊழியர் சேமநிதியத்தின் சுமூகமான தொழிற்பாட்டிற்கும் அதன் உறுப்பினர்களுக்கு வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான பணிகளை வழங்குவதற்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ள குளறுபடிகளில்லாத தெளிவான தரவுத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கும் மீள்செயற்பாடு மிக்க நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொள்ளும். நடைமுறை உதவுதொகை செலுத்தும் உறுப்பினர்களை மீளப் பதிவு செய்தலுக்கு முன்னராக ஒரு தனியான உறுப்பினர் அடையாள இலக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடிச் செயற்றிட்டம் ஒன்று அத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் இயலும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. முன்னோடிச் செயற்றிட்டமானது பெருந்தோட்டம், பணிகள் மற்றும் கைத்தொழில்கள் போன்ற மூன்று துறைகளிலும் உள்ள ஊழியர்களை உள்ளடக்கியதாகவிருந்தது.

ஊழியர் சேம நிதியத்தின் அடிப்படைப் பண்புகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை II-8இல் காட்டப்படுகிறன.

## 8. செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடானது, நாட்டிற்குள் வருகின்ற மற்றும் நாட்டிலிருந்து வெளியே செல்கின்ற வெளிநாட்டுச் செலாவணியை கண்காணிப்புச் செய்தலாகும். 2006ஆம் ஆண்டில் நடைமுறை பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகவும் சிலவகை மூலதனக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற அனைத்து வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளும் பெறுகைகளும், வெளிநாட்டுச் செலாவணியின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் வர்த்தக வங்கிகளினூடாக தொடர்ந்தும் எத்தகைய வரையறையுமின்றி மேற்கொள்ளப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல் வாங்கல்களுக்கான விபரங்கள் பற்றித் திருப்தியடைந்த பின்னர் தங்கள் நியாயம் மற்றும் தற்றுணிபுகளுக்கேற்ப நடக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் புறம்பாக நாணய மாற்றுநர்கள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் தீர்வைபற்ற கடைகள் என்பன இவ்வாண்டில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதன் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களுக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் தொடர்ந்தும் வழங்கி வந்தன. இத்திணைக்களம், தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகளைத் தொடர்ந்தும் நடாத்தி அவற்றின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை கண்காணித்து வந்ததுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் கம்பனி மற்றும் கம்பனியல்லாத நிறுவனங்களின் மீது அவசியமான இடத்தில் தண்டனைகளையும் விதித்தது. வதிவோரினால் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகளின் வடிவில் சில மூலதனக்கணக்குக் கொடுக்கல் வாங்கல்களையும், வெளிநாடுகளிலிருந்து வதியும் கம்பனிகளில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளையும் ஏனைய நாடுகளில் புலம் பெயர்ந்த இலங்கையர்களுக்கான நிதி மாற்றல்களையும் தொடர்ந்தும் அனுமதித்தது.

### 8.1 2006 இல் முக்கிய நிகழ்வுகள்

பிணையங்கள் மற்றும் இலங்கை செலாவணி ஆணைக்குழு இலங்கைக்கு வெளியில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் வெளிநாட்டு அரசுகளின் பிரசைகள் என்பவற்றினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் மற்றும் பரிமாற்றப்பட்ட நிதியங்கள் என்பவற்றின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாய் பெறுமதியிலான திறைசேரி முறிகள் மூலமான முதலீடுகளுக்கான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்ட குறித்த நேரத்தில் வெளிநின்ற திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5 சதவீதத்தினை விஞ்சாத வகையில் முதலீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்தும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் முதலீட்டாளரின் பெயரில் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு ஒன்றினைத் திறந்து செயற்பட அனுமதியளிக்கப்பட்டது. 2007 சனவரி 1ஆம் நாள் முதல் இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நோக்கமாக நாணய மாற்றுநர்கள் வெளிநாட்டு நாணயத் தாள்களுக்கு மேலதிகமாக பயணத்தர் காசோலைகளை மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

நாணயம் மாற்று அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கு தேவைப்படுவதாகக் கருதப்படும் ஆகக் குறைந்த புரள்வு தற்போதைய மட்டமான ஆண்டொன்றிற்கான ஐ.அ.டொலர் 120,000 இலிருந்து ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 600,000 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டில் 2007 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குபவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் உள்ளீடுகளின் நிரம்பல்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்ற இரண்டு தலைப்புக்களுடன் வெவ்வேறாக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடங்கப்பட்டன. முன்னையது தொழில்சார் பணிகளை வழங்குபவர்களை ஊக்கப்படுத்தி தமது பணிகளை இலங்கைக்கு வெளியே அல்லது உள்நாட்டுக் கம்பனிகளுக்கு அல்லது வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கின்ற கம்பனிகளுக்கும் தமது பணிகளை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் பின்னையது வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் உள்நாட்டுக் கம்பனிகளுக்கு ஏற்கனவே சாதனங்களின் உள்ளீடுகளை வழங்குவதில் ஈடுபடும் கம்பனிகளை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட நாணய மாற்றுநர், நாணயத்தை தூய்மையாக்குதலுக்கு எதிரான சட்டம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை கட்டுப்படுத்துவதன் மீதான

சட்டத்திற்கான சமவாயம் போன்றவற்றின் நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றிய பல்வேறு விடயங்கள் பற்றி தெரிந்து கொள்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

## 8.2 மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) முதலீடுகள்

இலங்கையில் வதிவோர் கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் நடைமுறையிலிருக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மாற்றமுறாதிருந்தன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் இலங்கையிலுள்ள கம்பனிகளால் வெளிநாடுகளில் முதலீடு செய்வதற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை அவற்றின் தராதரங்களின் அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டு 2006 செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பியதுடன், கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட 25 கம்பனிகளுக்கு வெளிநாட்டில் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கினார். 2006ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீடுகள் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 29.4 மில்லியனுக்கு வகை கூறியது. அத்தகைய முதலீடுகள் அனுமதிக்கப்பட்ட துறைகளாக, சுற்றுலா, கப்பற் சரக்கேற்றுவோர், வேளாண்மை பொருட்களைத் தயாரித்தல் மற்றும் தைக்கப்பட்ட ஆடைக் கைத்தொழில்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் வதிவற்றவர்களின் முதலீடுகள் தொடர்பிலான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குச் சட்டங்கள் 2006 இலும் மாற்ற முறாதிருந்தன. இலங்கையில், நேரடி வெளிநாட்டு முதலீடுகளை வசதிப்படுத்துநராகத் தொடர்ந்தும் முதலீட்டு ஊக்குவிப்புச் சபை விளங்கியது.

(ஆ) வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள்

முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் முதலீட்டுச்சபையினால் செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்தும் முழுமையாக விலக்குப் பெறுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த வதிவுள்ள கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக மத்திய வங்கியின் முன் அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும். மீளாய்வின் கீழான ஆண்டில் 10 கம்பனிகள், ஏறத்தாள ஐ.அ.டொலர் 91.6 மில்லியன் கொண்ட மொத்த தொகையினை வெளிநாட்டுக் கடன்களாகப் பெற செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அனுமதியளித்தது. இத்தொகை இந்த வகையில் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் துரித அதிகரிப்பினைப் பெற்றதுடன், இது முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 22.26 மில்லியனுடன் ஒப்பிடத்தக்கது.

## 8.3 கப்பற் சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தலும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட உரிமப் பத்திரங்களை வழங்குதலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கப்பற் சரக்கேற்றுவோரை பதிவு செய்தல், பயணிகள் காசோலைகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தினை பயண முகவர்களுக்கு வழங்குதல், வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக் கொள்வதற்காக நாணய மாற்றுநர்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் போன்ற ஏனைய நிறுவனங்களுக்கு உரிமங்களை வழங்குதல் என்பவற்றை தொடர்ந்தும் மேற்கொண்டது.

(அ) சரக்கேற்றுவோரைப் பதிவு செய்தல்

சரக்கேற்றுவோரை பதிவு செய்தலானது, 2005 யூலை 22ஆம் நாளிடப்பட்ட இல. 1402/19 கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உரிமம் பெற்ற கப்பற்படுத்தல் முகவர்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 10ஆம் பிரிவின் கீழ் மாண்புமிகு துறைமுகங்கள் விமானப் போக்குவரத்து அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதியானது குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் நியதியின்படி இலங்கையில் கப்பற்சரக்கேற்றும் வியாபாரத்தினை/ கப்பற்கலமல்லா பொதுவான பொருட்களைக் கொண்டு செல்லும் தொழிற்பாட்டினை மேற்கொள்கின்ற கம்பனிகள் வணிக கப்பற்படுத்தும் பணிப்பாளரினால் வழங்கப்படும் உரிமத்தினை பெற்றுக் கொள்ளவேண்டும். மீளாய்வின் கீழான ஆண்டில் 37 புதிய கம்பனிகள் கப்பற்சரக்கேற்றுவோராகப் பதிவு செய்யப்பட்டு, ஆண்டு முடிவில் கப்பற்சரக்கேற்றுபவர்களாக பதிவு செய்தவர்களின் மொத்த எண்ணிக்கையினை 210இற்கு கொண்டு வந்தது. இவ்வாண்டில் கப்பற்படுத்தல் மற்றும் வான் பயண முகவர்கள் அதேபோன்று கப்பற்சரக்கேற்றுவோரினால் அவர்களது வெளிநாட்டு முதல்வர்கள்/ முகவர்கள் சார்பில் பேணப்படும் ரூபாக் கணக்குகளுக்கு செய்யப்படும் வரவு மற்றும் பற்றினை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது.

(ஆ) நாணய மாற்றுநர்களுக்கு உரிமங்களை வழங்குதல்

2005இல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட பிரமாணங்களின் கீழ் நாணயமாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக 2006ஆம் ஆண்டில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளக்கு இரண்டு புதிய உரிமங்களை வழங்கியது. இதற்கு மேலாக நடைமுறையிலிருக்கும் நாணயம் மாற்றும் கம்பனிகளின் கிளை அலுவலகங்களுக்கு நான்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் நாணய மாற்றுநர்களினால் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் மொத்தச் சேகரிப்பு ஐ.அ.டொலர் 103.6 மில்லியன்களாக விளங்கியது.

## 8.4 கண்காணிப்பும் தொடர்ந்து கவனித்து வருதலும்

1994இல் செலாவணிக் கட்டுப்பாடுகள் தாராளமாக்கப்பட்டதன் பின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட பணமுகவர்களும் கோரிக்கைகளின் உண்மைத் தன்மை பற்றி அவர்கள் திருப்திப்பட்ட பின்னர் அவர்களது நியாயம் மற்றும் தற்றுணிபு என்பற்றைப் பயன்படுத்தி நடைமுறைக்கணக்கு கொடுக்கல் வாங்கல்களின் மீது எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளிநாட்டுச் செலாவணியை வழங்க அனுமதிக்கப்பட்டனர். அனைத்து அதிகாரம் பெற்ற வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட முகவர்களும் அவர்களது வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பற்றிய அறிக்கையினை நாளாந்த அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டனர். இந்த நோக்கத்திற்காக அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினதும் தலைமையகங்களுக்கும் பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய வலையமைப்பினூடாக இலத்திரனவியல் அடிப்படையில் மத்திய வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஆள் ஒருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5000இற்குக் கூடுதலாக இருக்குமிடத்து நாளாந்தம் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்ட வேளையில்

ஆளொருவருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை ஐ.அ.டொலர் 5000 இற்குக் குறைவாக இருக்குமிடத்து வாராந்த அடிப்படையில் அறிக்கையிடப்பட வேண்டும். இலத்திரனியல் நிதியமாற்றல் அட்டைகளூடாக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும் விடயத்தினைப் பொறுத்தவரையில் அட்டையினை வங்கிகள் ஆளொருவருக்கு மாதமொன்றிற்கான ஒன்று சேர்ந்த மொத்த வெளிநாட்டுச் செலாவணிச் செலவு ஐ.அ.டொலர் 5000 இனை விஞ்சியிருக்குமாயின் இலத்திரனவியல் நிதியமாற்றல் அட்டைகள் மீது விபரமான மாதாந்த அறிக்கையினை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. அதிகாரமளிக்கப்படாத மூலதன மாற்றல்கள் மற்றும் பயங்கரவாத நிதியிடலுடன் அல்லது சட்டத்திற்கு மாறான பணத்தினைச் சட்ட ரீதியான பணமாக மாற்றும் நடவடிக்கையுடன் தொடர்பானதா எனக் கண்டறியும் நோக்குடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் கண்காணிக்கப்பட்டதுடன் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் ஆற்றல் வாய்ந்த தீர்மானம் எடுப்பதை வசதிப்படுத்தும் தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள உதவும்.

2006ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் ஆற்றல் வாய்ந்த தீர்மானம் எடுக்கும் முறைமையினைப் பலப்படுத்தும் நோக்குடன் ஏற்றுமதிப் பெறுகைகளை வெளிநாட்டுக்கு அனுப்புதலை கண்காணிப்பதற்கு அஞ்சல் அளவீட்டினை தொடர்ந்தும் மேற்கொண்டது. ஏறக்குறைய 3000 முதலீட்டு ஊக்குவிப்புச்சபை மற்றும் முதலீட்டுச்சபை அல்லாத கம்பனிகளிலிருந்து காலாண்டு அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெரும்பான்மையான ஏற்றுமதியாளர்கள் 2005 தொடக்கம் இந்த அளவீட்டில் தொடர்ந்தும் பங்குபற்றி வருகின்றன.

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நாட்டிற்கு, அத்தகைய பொருட்களின் இறக்குமதிகளின் உள்வருகையை உறுதிப்படுத்தும் முகமாக, முற்பணத்தினைக் கொடுப்பனவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியைத் தொடர்ந்தும் கண்காணிப்புச் செய்தது.

### 8.5 புலனாய்வுகள்

தனிப்பட்டவர்களினதும், கம்பனிகளினதும் மேற்கொள்ளப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட ஏற்பாடுகளை மீறியதாக குற்றச்சாட்டுகள் பற்றிய புலனாய்வுகள் 2006இல் மேற்கொள்ளப்பட்டன. புலனாய்வுகள் முடிவடைந்த பின்னரே செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை தொடர்பான 38 வழக்குகள் தொடர்பாக ரூ. 2.4 மில்லியன் ரூபா தண்டம் சேகரிக்கப்பட்டு மத்திய வங்கியினால் பேணப்படும் செலாவணிக் கட்டுப்பாட்டு தண்டங்களின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது. இதற்கு மேலாக, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதிகாரமளிக்கப்படாத பெரும் அளவிலான நிதியங்களின் வெளிக்குச் செல்லும் மாற்றல்களில் குற்றம் சாட்டப்பட்ட நிதிநிறுவனங்களிலும் கம்பனிகளிலும் புலனாய்வுகளை மேற்கொண்டது.

## 9. தகவல் தொழில்நுட்பம்

ஆய்விற்குரிய இவ்வாண்டில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது பிரதானமாக அனர்த்தத்திலிருந்து மீள்வதற்கான வசதிகளை வலுப்படுத்தவதனையும் தொழில் தொடர் திட்டமிடலினை உச்சப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஆபத்தான தொழில் தொழிற்பாடுகளை சர்வதேச அங்கீகாரம் பெற்ற மீண்டெழும் காலத்தினுள் தொடர்ந்து செய்வதிலும் முக்கிய கவனம் செலுத்தியது. மேலும், திணைக்களமானது தன்னியக்க செய்முறையினூடாக வங்கியின் ஒட்டு மொத்த செயற்பாட்டின் விருத்திக்காக கணனி மென்பொருளினை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்தது. அத்துடன் திணைக்களமானது வங்கி ஊழியர்களுக்கிடையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் திறமையினை உயர்த்துவதற்கு தொடர்ந்து முயற்சித்தது.

பின்வரும் பிரதான செயற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த மீட்புத் தள வசதிகள், அனர்த்த மீட்புத் திட்டத்தின் முகாமை மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றை வலுப்படுத்துதல்.

(ஆ)பெறுமதி சேர்க்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தினை வழங்குவதுடன் அதனை மேலும் தன்னியக்கப்படுத்துதல்.

(இ) இந்த முறையின் அதிக பட்சமாக கிடைக்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை, பொதுப் பேரேட்டு முறைமை, திறைசேரி கையாளுகையின் அறை, முகாமைத்துவ முறை, ஊழியர் சேமலாப நிதிய முறைமை மற்றும் ஏனைய மிக முக்கியமான தொழில் பிரயோகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானம் என்பவற்றைப் பேணுதல்.

(ஈ) தகவல் முறைமையின் பாதுகாப்பு, உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறன் என்பவற்றை வலுப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை உயர்த்துதல்.

(உ) இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் திறமையினை உயர்த்துதல்.

### 9.1. அனர்த்த மீட்பு தள வசதிகள், அனர்த்த மீட்புத் திட்டத்தின் முகாமை மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றை வலுப்படுத்துதல்

அனர்த்த மீட்பு திட்டத்தினை பரிசோதிக்கும் ஒரு உபாயமாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, மத்திய வங்கியின் ஊழியர், நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு இணைக்கிணையாளர்களின் பங்கு பற்றல்களுடன் வேலை நாட்களில் அனர்த்த மீட்புத் தளத்திலிருந்தான மிக முக்கியமான தகவல் தொழில்நுட்ப தொழிற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்தியது.

### 9.2. அதிகரித்த தன்னியக்கப்படுத்தலும் பெறுமதி சேர்க்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணிகளை வழங்கலும்

செலவு, புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் நிறுவன ரீதியான தகவல் பாதுகாப்பு கொள்கை என்பவற்றுடன் ஒத்துச் செல்லல் என்பவற்றை கருத்தில் கொண்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது மின்னஞ்சல், ஆவண முகாமைத்துவம் மற்றும் வேலையை தடங்கலின்றி செய்யும் முறை மற்றும் நிறுவன பாவனையாளர்களுக்கு மேலதிக நன்மைகளை வழங்கும் ஏனைய அலுவலக தன்னியக்க இயல்புகளைக் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட கணனி மென்பொருளுடனான ஒரு மின்னஞ்சல் தீர்வு இணைப்பினைக் கொள்வனவு செய்ய முடிவு செய்தது. புதிய மின்னஞ்சல் முறைமையான லோட்டசு டொமினோசு 2007ஆம் ஆண்டு சனவரி மாதம் 2ஆம் கிழமையிலிருந்து செயற்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, கணனி மென்பொருள் பிரயோகங்களை இலகுவாக பரவச் செய்தல் மற்றும் தொழில்நுட்ப

முன்னேற்றங்களில் சமத்துவ தன்மையினைப் பேணுதல் போன்றவற்றிற்கான ஒரு தந்திரோபாய அணுகுமுறையாக இணையத்தள சூழலில் பிரயோகங்களை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்தது. இந்த அணுகுமுறையின் ஆரம்ப செயற்றிட்டமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்புரிமை வங்கிகளால் தேவையான நிதியியல் விபரத்திரட்டுக்களை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிப்பது 01.06.2006 அன்று செயற்படுத்தப்பட்டது. இது நிதிக் கம்பனிகளிலிருந்தான விபரத்திரட்டுக்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. மத்திய தகவல் தள எண்ணக்கருவை பராமரித்தல் மற்றும் படிவங்களை சமர்ப்பிப்பதில் இரட்டிப்புத் தகவல்களை தவிர்க்கும் பொருட்டு செயற்றிட்டமானது ஏனைய பல திணைக்களங்களின் தேவைப்பாடுகளை உள்ளடக்கும் விதத்தில் 2007ஆம் ஆண்டு காலப்பகுதியில் விரிவாக்கம் செய்யப்படும்.

அத்துடன் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது செயற்பாடுகளை தன்னியக்கப்படுத்துவதற்கு பல பிரயோகங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றது.

அ. தீவிர திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைமை அதிகரித்தமை

ஆ. லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டினால் 2006 மேயில் செயற்படுத்தப்பட்ட காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பினை வசதிப்படுத்தியமை.

இ. தலத்திற்கு வெளியேயான தகவல் அறிக்கையிடும் முறைமையினை செய்தமை.

ஈ. லினுக்ஸ் அடிப்படையிலான ஒத்துழைப்பு மின்னஞ்சல் முறைமையினை நடைமுறைப் படுத்தியமை.

உ. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பிரிவின் தொழிற்பாடுகள் தன்னியக்கம் செய்யப்பட்டமை.

ஊ. பொதுப்படுகடனை கையாள்வதில் உள்ள இடர்நேர்வு காரணிகளை கண்காணிப்பதற்கும் குறைப்பதற்கும் இடர்நேர்வு மாதிரி ஒன்றினை அபிவிருத்தி செய்தமை.

எ. முதனிலை வணிகர்களுக்கான வாராந்த தகவல் அறிக்கையிடும் முறைமை.

ஏ. இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகளின் வழங்கலை தன்னியக்கப்படுத்தியமை.

ஐ. சுவிப்ட் நியமங்கள் தரமுயர்த்தப்படுவதை உள்ளடக்குவதற்காக அதேநேர தீர்ப்பனவு முறை மென்பொருளுக்கான மாற்றங்கள்

மென்பொருள் அபிவிருத்தி வேலைகளை வெளியார் மென்பொருள் வழங்குனர்களுடன் இணைந்து செயற்படுத்துவதுடன், தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியினால் கையாளப்படும் பிரதான பிரயோகங்களில் ஒன்றான ஊழியர் சேமலாப நிதிய முறைமை உள்ளடங்கலாக அனைத்து உள்ளக தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களையும் தொடர்ந்து பராமரித்தது. ஊழியர் சேமலாப நிதியத்தின் இலத்திரனியல் தரவு சேகரிக்கும் முறைமையை பாதுகாக்கும் நோக்கில் அதிகாரமளிக்கப்படாத ஆட்கள் தகவல்களைப் பெறுவதிலிருந்து பாதுகாக்கும் பொறிமுறையுடன் கூடிய மென்பொருளானது அபிவிருத்தி செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டது. திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் மேற்கொள்ளும் செயற்பாடுகளையும் விபரிக்கும் நடைமுறைக் கையேடானது இவ்வாண்டு காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்டதுடன் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை தரப்படுத்தலுக்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. செலவினை கட்டுப்படுத்தும் ஒரு உபாயமாக, தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது அலுவலக தன்னியக்கப்படுத்தலுக்கு இலகுவில் இலவசமாகக் கிடைக்கும் மென்பொருள் மூலத்தினை பயன்படுத்துவதற்கான சாதகத் தன்மையினை பரிசோதித்தது.

### 9.3. முறைமையின் உச்ச கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக மிகமுக்கியமான தொழில் பிரயோகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டுமானம் என்பவற்றை பராமரித்தல்

இவ்வாண்டு கால மீளாய்வின் படி தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினைத் தொடர்ந்து செயற்படுத்தியதுடன் முறைமைகளின் கிடைப்பனவை சராசரியாக 99.55% ஆக பராமரிக்கக்கூடியதாக இருந்திருக்கையில் 9 மாத காலப்பகுதியில் 100% கிடைப்பனவை பேணியது. பொதுப்பேரேட்டு பராமரிப்பு சேமிப்பகங்களின் களஞ்சியம் தலைமை காரியாலயத் திலுள்ளதுடன் அனர்த்த மீட்பு முறைமையின் உச்ச கிடைப்பனவு மற்றும் செயற்றிறனையும் அடையக்கூடிய வகையில் விரிவாக்கப்பட்டது. 2007இல் சுவிப்ற் வலையமைப்பு கட்டம் II என்றழைக்கப்படும் அடுத்த சுவிப்ற் தரமுயர்த்தலுக்கு வசதியளிக்கும் செய்முறையினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சுவிப்ற் சேமிப்பகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

### 9.4. தகவல் முறைமையின் பாதுகாப்பு, உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை வலுப்படுத்தும் நோக்குடன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை உயர்த்துதல்

மத்தியில் பராமரிக்கப்படுவது, தேவைப்படும் போது பாவிக்கத்தக்க அனைத்து முக்கியமான தகவல்களின் பிரதிகளையும் இலகுவாக மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதிக எண்ணிக்கையான தரவுகளின் பிரதிகள் மற்றும் வலைப்பின்னலினுள் உருவங்களின் அசைவு என்பவற்றைக் குறைப்பதன் மூலம் வலைப்பின்னல் செயற்பாடுகளை உயர்த்தும் நோக்குடன் ஒரு சேமிப்பக வலைப்பின்னல் தரவு மையம் கொள்வனவு செய்யப்பட்டது. 2008ஆம் ஆண்டு, காலப்பகுதியில் முழுமையாக செயற்படுத்தப்பட இருக்கும் புதிய மின்னஞ்சல் முறை, ஆவண முகாமைத்துவம் மற்றும் ஒழுங்காக வேலை நடைபெறுவதற்கான முறை என்பவற்றுக்கு உதவியளிக்கும் விதத்தில் இணைந்த மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. பழுதுகள் ஏதும் நிகழ்வதற்கு முன்னர் சரி செய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனை இயலச் செய்யும் விதத்தில் தவறுகளை நேரகாலத்துடன் கண்டு பிடிப்பதற்காக கணனி பரிமாற்றிகளின் தகு நிலையினையும் வலையமைப்பினையும் கண்காணிப்பதற்காக இலகுவில் இலவசமாக கிடைக்கும் தீர்வொன்று நிறுவப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, வங்கியின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான தேவைகள், மற்றும் சேவைகளுடன் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தேசிய நலத் திட்டங்கள் என்பவற்றிற்கு தொடர்ச்சியாக தொழில்நுட்ப ஆதரவினை வழங்கியது. விரைவாக பரவும் கணனி வைரசிலிருந்து வங்கியின் வலையமைப்புக்களை பாதுகாத்தல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு வங்கியினால் பாவிக்கப்பட்ட வைரசு எதிர்ப்பு

மென்பொருளானது, மிக நம்பிக்கை எனப்படும் ஈ-றஸ்ற்ட்டின் அதிகரித்த பாதுகாப்புடன் தரமுயர்த்தப்பட்டது. வைரஸ் பாதுகாப்பிற்கு மேலதிகமாக அச்சுறுத்தல் முகாமைத்துவம் 8.0 கணனிப் பேழை மற்றும் ஒற்றுக்கலம் என்பனவற்றிலிருந்தான பாதுகாப்பினையும் உள்ளடக்கியிருந்தது.

### 9.5 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் திறமையினை உயர்த்துதல்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களுக்கிடையிலும் மற்றும் நிதி நிறுவனங்களுக்கிடையிலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் திறமையினை உயர்த்துவதற்கு, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்கு வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்திற்கு வள ஆளணியினரை வழங்கியது. வங்கி ஊழியர்களிற்கு, தகவல் தொழில்நுட்பத்தின் பிந்திய அபிவிருத்திகளை கற்பிப்பதற்கும் இறுக்கமான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நாகரிகத்தினை பரப்புவதற்கும் திணைக்களங்களின் தகவல் தொழில்நுட்ப அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை காலாண்டு ரீதியில் மேற்கொண்டது. அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பாதுகாப்புடன் தொடர்பான விடயங்கள் என்பவற்றை ஏனைய வங்கி ஊழியர்களுக்கு தெரியப்படுத்தும் ஊடகமாக செயற்படுகின்றார்கள்.

தகவல் தொழில்நுட்ப திணைக்களமானது, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான செயற்பாடுகளை வங்கியில் விரிவாக்கம் செய்வதனை கருத்தில் கொண்டும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பினை பராமரிப்பதன் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது இணையத்தள பரிமாற்று வழங்கல் சாதனத்தின் பயன்படுத்துநர் வாசகத்தினை தயாரித்ததுடன் வங்கி அலுவலரின் வசதி கருதி சிங்களத்திலும் மொழி பெயர்த்தது. பிந்திய தகவல்களை உள்ளடக்கும் விதத்தில் இணையத்தள பரிமாற்று வழங்கலும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலும் தொடர்பான ஆவணங்கள் மேலும் திருத்தியமைக்கப்பட்டதுடன் இவை 2007இல் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

## 10. பன்னாட்டு தொழிற்பாடுகள்

### 10.1 வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

இலங்கை ரூபாயின் வெளிநாட்டு உறுதிச் சமனிலையை பராமரித்தல் மற்றும் நாடுகளின் பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதை வசதிப்படுத்துவதற்காக நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளை முகாமை செய்யும் பொறுப்பு பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காக மத்திய வங்கியானது, போதுமானளவு பன்னாட்டு ஒதுக்குகளை திரவ நாணயங்களிலும் முக்கியமான ஒதுக்குகளை தங்கத்திலும் பேண வேண்டுமென நாணயவிதிச் சட்டத்தில் தேவைப்படுத்தப்படுகின்றது.

2006இல் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் பிரதானமாக ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோக்கள், ஸ்ரேலிங் பவுண்கள், அவுஸ்திரேலியன் டொலர்கள் மற்றும் தங்கத்தில் வைத்திருக்கப்பட்டன. சொத்துக்களின் நியதிகளில், ஒதுக்குகள் இரண்டு பிரதான சொத்து வகுப்புக்களில் முதலிடப்பட்டன. அவையாவன, பணச்சந்தைக் கருவிகள் மற்றும் நிலையான வருமானத்தைக் கொண்ட பிணையங்களான உயர் தரமிடப்பட்ட அரச பிணையங்கள், அரச உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், மற்றும் அரச முகவர்களின் பிணையங்கள் மற்றும் உயர் தேசிய நிறுவனங்கள் என்பவற்றில் முதலீடு செய்யப்பட்டன. திரவத்தன்மை தேவைகளானவை இரண்டு சொத்து வகுப்புக்களிலுமுள்ள உயர் திரவத்தன்மை வாய்ந்த குறுங்கால கருவிகளில் போதுமான அளவு ஒதுக்குகளை பேணுவதனூடாக பூர்த்தி செய்யப்படுகின்றன. முதலீடுகள் மீதான இக் கொடுக்கல் வாங்கல்கள் உயர் தரமிடப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கிணையாளர்களினூடாக, முகாமைத்துவத்தினால் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் குறிப்பிட்ட சொத்துக்களின் மீதான வருமானம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு, ஒப்புதலளிக்கப்பட்ட, வரையறைக் கட்டமைப்புக்கிடையில் செயற்படுத்தப்பட்டது.

வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளின் முதலீடுகள் நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வழிகாட்டலுக்கு இசைவாக செயற்படுத்தப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவக் குழுவானது ஒட்டு மொத்த வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தினை மிக நெருக்கமாக கண்காணித்ததுடன் இவ்வாண்டு காலப்பகுதியில் தேவையான வழிகாட்டல்களை பொருத்தமாக வழங்கியது. இதற்கு மேலதிகமாக, இது ஒதுக்கு முகாமைத்துவ திட்ட வரம்பிற்கான செயற்றிறன் மிக்க தொடர்பாடலினை வழங்குவதற்கும், வங்கியின் இடர்நேர்வு தவிர்ப்பு மற்றும் அதன் குறித்த கால செயற்பாட்டினை அளவிடுவதற்கான அளவுகோலினை வழங்குவதற்குமாக அடித்தள அளவுக்குறியினை நிர்ணயித்தது.

2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதுவரைக்கும் இல்லாத உயர் எண்ணெய் விலைகள் பீப்பா ஒன்று ஐ.அ.டொலர் 78க்கும் மேலான விலையை அடைந்த நிகழ்வுகள் (மேற்கு டெக்சாஸ் இடைநிலை வகைக்கான அடித்தள அளவுக்குறியீட்டு) நிதிச் சந்தைகளில் செல்வாக்குச் செலுத்தியது. பூகோள முதன்மைப் பணவீக்கமானது உயர் எண்ணெய் விலையின் விளைவாக அதிகரித்ததுடன் பெரும்பாலும் அனைத்து பொருளாதாரங்களிலும் வட்டி வீதங்களின் அதிகரிப்பு அனுபவிக்கப்பட்டது. இது ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கு விசேடமாக நடைமுறையிலுள்ள முதலீடுகளின் மதிப்பீட்டு மாற்றங்களுடன் தொடர்ச்சியான சவால் விடும் சூழலினை உருவாக்கியது. இந்த சவால்களை எதிர் கொள்வதற்கு பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது தெரிவு செய்யப்பட்ட நாணயங்கள்/ நாடுகளின் சந்தை/ பொருளாதார அடிப்படைகளில் காலத்துக்குக் காலம் பணம் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளின் சொத்து திரட்டுக்கள் என்பவற்றில் மாற்றங்களை செய்தது. பன்னாட்டு ஒதுக்குகளின் சொத்துப்பட்டியல் உள்ளமைப்பினை தீர்மானிப்பதில் வங்கிகளின் அண்மைய எதிர்காலத்திலான வெளிநாட்டு செலாவணி கடப்பாடுகள் மற்றும் வருமானம் உருவாக்கும் இயலுமைகள் என்பன பிரதான பங்கு வகிக்கின்றன.

ஒட்டு மொத்த ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகள் 2006ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 100.5 மில்லியன் அல்லது ரூபா 10,453.4 மில்லியன் தேறிய வெளிநாட்டு செலாவணி வருமானத்தினை உருவாக்கியதுடன் இது பாதிடப்பட்ட வருமானம் ஐ.அ.டொலர் 86.6 மில்லியன் மற்றும் கடந்த வருட வருமான அளவான ஐ.அ.டொலர் 77 மில்லியனையும் தாண்டியது. இக் காலப்பகுதியில் நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு ஐ.அ.டொலர் 2,257.0 மில்லியனில் இருந்து ஐ.அ.டொலர் 2,323.0 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 66

மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலை வெளிப்படுத்தியது. வருமானத்திலான அதிகரிப்பு, ஒதுக்கு மட்டம் மற்றும் வட்டி வீதங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் இணைந்த வெளிப்பாடாக இருந்தது.

### 10.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் மற்றும் அவர்களின் முதலீடுகள், பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் நடு அலுவலகத்தினால் கண்காணிக்கப்படுகின்றது. வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் மற்றும் அவற்றின் முதலீடுகள் வேறுபட்ட வகைகளான இடர்நேர்வுகளினால் பாதிக்கப்படுகின்றன. இந்த இடர்நேர்வு வகைகளில், வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பிரதான கூறுகளாக கருத்தில் கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு அல்லது செலாவணி வீதங்களின் தளம்பல்களின் விளைவால் ஏற்படும் மூலதன இழப்பின் இடர்நேர்வானது பிரதானமாக முதலீட்டு நாணயங்களை பல்வகைப்படுத்துவதினூடாக முகாமை செய்யப்படுகின்றது. வட்டிவீத இடர்நேர்வு அல்லது வட்டி வீதத்தின் அசைவுகளிற்கான வங்கியின் ஒதுக்குப்பட்டியல் பாதிப்புள்ளாக்கும் தன்மை சொத்துப்பட்டியலின் காலப்பகுதியின் பொருத்தமான சீராக்கங்களினூடாக முகாமை செய்யப்பட்டது. இணைக்கிணையாளர் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையானது கொடுகடன் இடர்நேர்வினை குறைப்பதற்காக பன்னாட்:டு தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டது. கட்டாயமான திரவத்தன்மையாக்கல் நிகழ்வால் வங்கிக்கு மூலதன இழப்பினை உண்டுபண்ணும் இடர்நேர்வான திரவத்தன்மை இடர்நேர்வானது, திரவத்தன்மை தேவைகளின் உருவாக்கத்தினால் முகாமை செய்யப்படுகிறது. தொழிற்பாட்டு இடர்நேர்வானது, மனித தவறுகள், குறைபாடுள்ள முறைமைகள் மற்றும் பற்றாக்குறையான நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளால் ஏற்படுவதுடன் இது பல்வகை அளவீடுகளாக முகாமைப் படுத்தப்பட்டது.

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது வங்கிகளின் இடர்நேர்வு சூழ்நிலை தொடர்பாக சிறந்த தொடர்பாடலிற்கான சீர் செய்யப்பட்டு வழக்கமான அடித்தள அளவுக்குறியினை அபிவிருத்தி செய்யும் செயற்பாடு மற்றும் முதலீட்டு குறிக்கோள்களுடன் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளின் செயற்பாட்டு மதிப்பீட்டு அணுகுமுறையினையும் உச்சப்படுத்துகின்றது.

### 10.3 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டினை ஊக்கப்படுத்தும் நோக்குடனும், இலங்கையின் வெளிநாட்டு செலாவணி வீதத்தினை ஒழுங்கான முறையில் சீராக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமானது உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு செலாவணிச்சந்தை, வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலைமைகள் என்பவற்றை மிக நெருக்கமாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணித்து வருகின்றது.

2005இன் திசெம்பர் இறுதியில் ரூ.102.12 ஆக விளங்கிய ஐ.அ.டொலர்/ ரூபாய் வீதமானது 2006இல் ரூ.107.71 இற்கு பெறுமானத் தேய்வடைந்து, 2005ஆம் ஆண்டின் 2.44 சதவீத பெறுமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காலப்பகுதியில் 5.19 சதவீத பெறுமானத் தேய்வை பதிவு செய்தது. பன்னாட்டு சந்தையின் ஏனைய பிரதான நாணயங்களின் தொடர்பான பலமடைவைக் கவனத்திற் கொள்கையில் ரூபாயானது யப்பானிய யென் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதான நாணயங் களுக்கெதிராகவும் வீழ்ச்சி கண்டது.

இவ்வாண்டு காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் அளவானது 2005இன் ஐ.அ.டொலர் 7,245 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 10,792 மில்லியனுக்கு அதிகரித்து 33 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2006இல் தளம்பலடையும் நாணயமாற்று வீதங்கள் மற்றும் உயர் எண்ணெய் விலையினால் ஏற்படுத்தப்பட்ட உயர் பணவீக்க அழுத்த, எதிர்பார்க்கை மற்றும் இதன் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த இறக்குமதிச் செலவு என்பவற்றின் விளைவாக ஒரு பாதகமான சூழலில் இலங்கை தொழிற்பட்டது. இது சந்தையின் இரண்டு பக்கத்திலுமிருந்து, இலங்கையின் அதிகரித்த தளம்பலுடைய நாணயமாற்று வீதத்தினை மிதமாக்குவதற்கு மத்திய வங்கியை தேவைப்படுத்தியது. இவ்வாண்டு காலப்பகுதியில் வங்கியானது உள்நாட்டு செலாவணி சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 307 மில்லியன் அளவான வெளிநாட்டு செலாவணியினை உள்வாங்கிக் கொண்ட அதேவேளை ஐ.அ.டொலர் 791 மில்லியன் அளவான வெளிநாட்டு செலாவணியினை சந்தைக்குள் செலுத்தியது.

இலங்கை வெளிநாட்டு செலாவணி சங்கமானது இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகளின் விளைவாக சந்தையானது, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏசிஐ (அசோசியேசன் கம்பிஸ்ர் இன்ரனைசனலே) என்ற மாதிரி குறியிடலினை பின்பற்றியது.

### 10.4 2006இல் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகள்

இவ்வாண்டு காலப்பகுதியில் உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தைக்கு இலங்கை ரூபாயின் விருப்பத்தேர்வின் மீது ஒரு புதிய பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டலின் கீழ் அனுமதி பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று முகவர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக இலங்கை ரூபாயினை குறுக்கு நாணய விருப்பத்தேர்வின் அடிப்படையில் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த பணிப்புரைகள் உள்ளூர் நிதி சந்தையினை பல் வகைப்படுத்தும் அதேவேளை இதனை விசாலமாக்குவதுடன் ஆழமாகவும் ஆக்குகின்றது.

## 11. சட்டம்

2006இல் மத்திய வங்கியின் சட்டத்திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்குதல், நீதிமன்றங்களிலும் மற்றைய சட்டம் மற்றும் சட்டத் தோற்றப்பாடு உள்ள மன்றங்களிலும் வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தல் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளின் சட்ட மறுசீரமைப்பிற்கான பங்களிப்பு போன்ற அதன் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

இத்திணைக்களம் மத்திய வங்கியிலுள்ள ஏனைய தொடர்பிலான திணைக்களங்களுடன் நடைமுறையிலிருக்கும் சட்டவாக்கங் களுக்கான திருத்தங்களை தயாரித்து சட்ட விதிகள், ஒழுங்கு

விதிகள், பணிப்புரைகள், ஒப்பந்தங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பிலான ஏனைய சட்ட ஆவணங்கள் என்பவற்றை வரைவு செய்தல் போன்றவற்றில் நெருக்கமாக பணியாற்றியது.

இவ்வாண்டில் இத்திணைக்களமானது நடைமுறையிலுள்ள சட்ட கட்டமைப்பினை மீளாய்வு செய்யும் முயற்சியினைத் தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் நிதியியல் முறைமையின் அபிவிருத்தியையும் சுமூகமான தொழிற்பாட்டையும் வசதிப்படுத்தும் புதிய சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்தியது. 1988இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் திருத்தச் சட்டத்திலுள்ள சில குறைபாடுகளை நீக்கும் பொருட்டு முறையே 2006 மாச்சிலும், நவெம்பரிலும் 2006இன் 15ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம், மற்றும் 2006இன் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் என்பவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

2006இன் 15ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் பங்கு மூலதனத்தின் நியதியில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் புதிய தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இந்தக் கம்பனிகள் ஒவ்வொன்றிலும் விடயத்திற்கேற்ப தனியாள் ஒருவருக்கு அல்லது கம்பனி ஒன்றிற்கு நேரடியாகவாயினும் சரி மறைமுகமாகவாயினும் சரி அவ்வாறு பயனுள்ள வகையிலாயினும் சரி கணிசமான அக்கறை அல்லது முக்கியமான முகாமைத்துவ அக்கறை ஒன்று உள்ளதோ அந்தக் கம்பனிகளினால் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒன்றின் பங்கு மூலதனத்தின் ஆகக் கூடிய சதவீதத்தினை தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகளுக்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இந்தத் திருத்தங்கள் இலங்கைக்குள் நிதி முறைமையின் உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கான முக்கிய பங்கினை வகிக்கும் என நம்பப்படுகின்றது. 2006இன் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று அரச வங்கிக்கு உரித்தாக்குதல் தொடர்பான ஏற்பாடுகளையும் அந்த உரித்து சம்பந்தமான தேவைப்பாடுகளையும் அறிமுகம் செய்தது.

2006 மாச்சு மாதத்தில் நிறைவேற்றப்பட்ட 2006இன் 9ஆம் இலக்க நாணயச் சட்டம் (திருத்தம்) நாணயச் சபையினால் சில குறிப்பிடத்தக்க துறைகளுக்கு கடன் வழங்கல் தொடர்பான ஒழுங்கு விதிகளை இயலச் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்ததன் மூலம் பாதிக்கப்படக்கூடிய துறைகளுக்கான கொடுகடன் வழங்குதலை வசதிப்படுத்துகிறது.

2006 மாச்சில் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலங்களான 2006இன் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத்தடுக்கும் மற்றும் 2006இன் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்ட விதிகளின் மூலம் இலங்கைச் சட்டத்திற்கு முரணான பணத்தினை சட்ட பூர்வமாக மாற்றும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் ஏனைய உலக நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறது. சட்டத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியில் பல்வேறு திணைக்களங்களுடனும் ஏனைய அரச முகவர்களுடனும் இணைந்து 2006இல் மேற்குறிப்பிடப்பட்ட சட்டவாக்கத்தினையும் தொடர்பான ஒழுங்கு விதிகளையும் தயாரிப்பதில் நெருக்கமாகச் செயற்பட்டது.

## 12. முகாமைத்துவ கணக்காய்வு

வங்கியின் தொழிற்பாடுகளையும் கட்டுப்பாட்டு முறைமைகளையும் முன்னேற்றுவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்வதன் மூலமாக அதனது உபாயம் உள்ள குறிக்கோள்களை எய்துவதில் வங்கியை வசதிப்படுத்துவதற்கு முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் 2006இல் அதனது உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவப் பணியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றியது. உள்ளகக் கணக்காய்வை, உள்ளகக் கணக்காய்வின் இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறைக்கு மாற்றுவதற்கு கவனம் செலுத்தப்பட்டது. இது 2006இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் திணைக்களமானது நாணயச் சபையினது கணக்காய்வுக் குழுவின் செயலகமாகப் பணியாற்றியது.

2006 கணக்காய்வுத் திட்டத்தின் படி உள்ளார்ந்த இடர்நேர்வுகளிலிருந்து மத்திய வங்கியை பாதுகாப்பதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமாந்தன்மையை மீளாய்வு செய்வதற்கு பல கணக்காய்வு ஒப்படைகள் நடாத்தப்பட்டன. முன்னைய ஆண்டுகளைப் போல கணக்காய்வு விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து கணக்காய்வு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னைய ஆண்டுகளைப் போன்றே கணக்காள்வு விதந்துரைப்புக்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனைக் கண்டறிவதற்காகபின் கவனிப்பு மேற் கொள்ளப்பட்டது.

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களமானது வங்கியின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான செயல் முறைப்படுத்துதல் தொடர்பான குறிப்பிடத்தக்க பிரச்சனைகளை அறிவித்ததுடன் கணக்காய்வுத் திட்டத்தின் தகுதி மற்றும் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களை முகாமைக்கும், கணக்காய்வுக் குழுவிற்கும் காலாந்தரமாக வழங்கியது.

இத்திணைக்களமானது 2006 ஆண்டுக் காலத்தில் கணக்காய்வுத் திட்டத்திற்குப் புறம்பாக வங்கியின் தொழிற்பாடுகளின் ஆற்றல், சிக்கனத்தன்மை, செயல் விளைவுத்தன்மை என்பவற்றை மேம்படுத்தும் குறிக்கோளுடன் பல முகாமைத்துவ மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டது. முக்கிய முகாமைத்துவ மதிப்பீட்டு ஆய்வுகளாவன: மத்திய வங்கியிலுள்ள தனிப்பட்ட செயலாளர், தனிப்பட்ட உதவியாளர்கள், சுருக்கெழுத்தாளர் போன்ற வகைகளில் ஊழியர்களை உற்பத்தித்திறன் பெறுவிதத்தில் நியமித்தல் மீதான அளவீடு; நாணயத்தாள்களை அழித்தல் தொடர்பாக கிடைக்கத்தக்க மாற்று நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு; மற்றும் நிதியியல் புலனாய்வுப் பிரிவு மீதான தொடக்க நடைமுறை சார்ந்த கணக்காய்வு மற்றும் நலன்புரித் திணைக்களத்தினுள் உணவுச்சாலை செயற்பாடுகளுக்காக களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரைத் தெரிவு செய்தல் பற்றிய ஆய்வுகள் என்பனவாகும்.

இவற்றிற்கு மேலாக, நாணயத்திணைக்களத்தினால் வங்கி பணிமனைக்கு வெளியேயான நாணய இருப்பை வைத்திருப்பதற்கான நடைமுறையின் மீளாய்வு, நாணய நிலவறைகளிலுள்ள இருப்புக்களின் பௌதீக ரீதியான சரிபார்ப்பு, பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாதக் கோவைகளை மூடுதல். பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கோரல்களுக்குப் பின்னரான அறவீட்டு நடவடிக்கை, குவைத் தினார் வைப்பாளர்களுக்கான இறுதிச்சுற்று இழப்பீட்டுக் கொடுப்பனவு பற்றிய பௌதீக ரீதியான சரிபார்த்தல், மத்திய வங்கி வங்கித்தொழில் ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மீதான பகுப்பாய்வு, பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகளின் மீளாய்வு, வங்கிப் பணிமனையில் உள்நுழையும் அட்டை முறைமையின் பயன்மிக்க பயன்பாடு, டீசல் எண்ணெயின் கொள்வனவு மற்றும் நுகர்வுகள் மீதான பகுப்பாய்வு, இலங்கை மத்திய வங்கியின் மின்பிறப்பாக்கிகளினதும், மின் தூக்கிகளினதும் பேணல், மத்திய

பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினால் இலங்கை மத்திய வங்கி சார்பாக கொள்வனவு செய்யப்பட்ட ஊர்திகளின் உரித்துடைமையை உறுதிப்படுத்தல், பணிமனைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகள் பற்றிய மீளாய்வு, சுத்தப்படுத்தல் பணிகள், மின்கட்டணங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட தளபாடங்களின் கொள்வனவுக்கான கொடுப்பனவுகளின் மீளாய்வு, நீர்க்கட்டணங்களின் கொடுப்பனவு முறைமையின் கணக்காய்வு என்பனவும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கணக்காய்வுகளை உள்ளடக்குகின்றன.

2006 காலப்பகுதியில் இத்திணைக்களம் வங்கி முழுவதுக்குமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையினைத் தொடர்ந்தும் முன்னேற்றியது. இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் ஆரம்ப நடவடிக்கையாக இந்த செயல்முறையினை நடைமுறைப்படுத்துவதில் உறுதிப்படுத்தும் முகமாக அனைத்து திணைக்களங்களும் பின்வருவன பற்றிய அறிக்கையை சமர்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்பட்டன.

(அ) திணைக்கள மட்டத்தில் இடர்நேர்வு நடவடிக்கைகள் கலந்துரையாடல்களை கிரமமான இடைவெளிகளில் நடத்தப்படுகின்றனவா?

(ஆ) அப்படியாயின், இக்குழுவானது ஏதாவது புதிய இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை அல்லது இழப்பீடு ஏற்படும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு பதிவு செய்துள்ளதா?

(இ) இக்குழுவானது ஏதாவது உள்ளார்ந்த இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டத்தினை அபிவிருத்தி செய்திருந்ததா?

மேற்குறிப்பிட்ட மாற்றங்கள்/ சேர்க்கைகள் என்பனவற்றை இடர்நேர்வு தரவுத்தளத்திற்கு திணைக்களங்கள் ஒன்றிணைக்கும் பொருட்டு 2006இன் இறுதிக்காலப் பகுதியில் இடர்நேர்வு மென்கலத்தில் சில மேம்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு திணைக்களத்தினாலும் ஏதாவது புதிய இடர்நேர்வு நிகழ்வுகள் இனங் காணப்பட்டு இடர்நேர்வு மட்டுப்படுத்தல் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இம் மேம்பாடுகள் அவற்றை தனியாக இனங் காண்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தை வசதிப்படுத்தியது.

வங்கியானது அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் உள்ளகக் கணக்காய்வு நிறுவனத்திற்கு இலங்கையில் தமது பரீட்சைகளை நடாத்துவதற்கு குறிப்பாக உள்ளக மற்றும் முகாமைத்துவ கணக்காய்வில் தொழில்சார் நிபுணத்துவத்துவத்தைப் பேணுவதற்கான ஒழுங்குகளைத் தொடர்ந்தும் செய்து வந்தது. திணைக்களம் அதன் கற்கை நெறிகளை முன்னேற்றுவதற்கு உள்ளக கணக்காய்வு நிறுவனத்தின் இலங்கையின் அத்தியாயம் பிரிவு II அ உடன் தீவிரமாக ஒத்துழைத்தது. இதன்படி மத்திய வங்கி அதன் ஆளுநர் சபையுடனும் கல்விசார் சபையுடனும் இரண்டாவது வெற்றிகரமான ஆண்டாகவும், பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.

## 13. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

தேசிய கொடுப்பனவு முறைமையில் இலங்கை மத்திய வங்கியினுடைய பொறுப்புக்களாக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு, கொள்கை உருவாக்கம் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாக இலங்கையினுடைய கொடுக்கல் வாங்கல்களை கையாளல் என்பவற்றை உள்ளடக்கியதோடு மேற்பார்வை தொடர்ந்தும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது. மேலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம், மத்திய வங்கி தனது சுய கொடுக்கல் வாங்கல்களை இடர்நேர்வற்ற முறையில் வினைத்திறனுடன் தீர்ப்பனவு செய்வதற்கு இயலச்செய்யும் வகையில் 3 வகையான செயற்பாடுகளை செய்முறைப்படுத்துகிறது. முதலாவது இதனுடைய திறந்த சந்தைச் செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று ஒதுக்கீட்டு முகாமைத்துவம் என்பன தொடர்பானவற்றை செய்முறைப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை அமுல்படுத்துவதற்கும் பின்தள காரியாலய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தலும் ஆகும். இரண்டாவது, சுவிப்ற் கொடுக்கல் வாங்கல்களை கையாளலும் முகாமை செய்தலும் ஆகும். மூன்றாவது லங்கா கொடுப்பனவு முறைமையில் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு வழிமுறையை செயற்படுத்தல். 2006 ஆண்டு காலப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தால் சாதாரண செயற்பாடுகளில் மற்றும் நீடித்தும் பரந்து விரிந்தும் செல்லக்கூடிய இடையூறுகள் சாதாரண செயற்பாட்டுக்கு ஏற்படக்கூடிய வேளைகளில் சேவைகளுடைய கிடைப்பனவுத்தன்மை மற்றும் நெகிழ்ச்சி தன்மையில் அதியுயர் தரத்தினை பேணும்வகையில் முறைசார் முக்கியத்துவமுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக செயற்பாட்டு இடர்நேர் முகாமைத்துவத்திற்கு அதியுயர் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. மே 2006இல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சட்டத்தால் இலங்கை மத்திய வங்கிக்கு அளிக்கப்பட்ட பொறுப்பின் கீழ், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களமானது அனைத்து அக்கறையுடைய தரப்பினரதும் ஒத்துழைப்புடன் கொடுப்பனவு முறைமை கொள்கை தொடர்பில் ஓர் வரைபு அறிக்கையினை தயாரித்ததுடன் கொடுப்பனவு முறைமையின் உறுதித்தன்மையினை பேணும் வகையில் பாதுகாப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட முறைமையினை உறுதிப்படுத்தும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கு அடுத்த 4 ஆண்டு காலப்பகுதிக்கான (2007-2010) ஒரு செயற்பாட்டு திட்டத்தினையும் தயாரித்தது.

### 13.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாட்டு பிரிவு தொடர்ந்தும் இம்முறையினை செயற்பாட்டு நம்பகத்தன்மையுடைய ஓர் உயர்தரத்துடனும், ஒருங்கிணைப்பு மற்றும் பாதுகாப்புடனும் தொழில்படுத்துகிறது. எதிர்பார்க்கக்கூடிய செயற்பாட்டு இடர்நேர்வுகளை மேலும் குறைப்பதற்கும் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் அழுத்தம் தரப்பட்டது. மே 2006இல் காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் கீழ் தேறிய தீர்ப்பனவு கோவைகளை உள்வாங்கிக் கொள்வதற்கு வசதியாக, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் நாளாந்த செயற்பாட்டுகளின் அட்டவணைப்படுத்தல் திருத்தியமைக்கப்பட்டதுடன் வியாபாரத்தை முடிவுறுத்துவதற்கான நேரம் பி.ப. 4.00 மணியிலிருந்து பி.ப. 4.30 வரை நீடிக்கப்பட்டது. 2006இல் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கொடுக்கல் வாங்கல்களுடைய மொத்த எண்ணிக்கை 17% ஆல் அதிகரித்தது. அதேநேரம் கொடுக்கல் வாங்கல்களுடைய மொத்தப் பெறுமதி 3% ஆல் அதிகரித்தது. பங்குபற்றுனர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை

வசதிகளினுடைய மொத்தப் பெறுமதியானது 2006ஆம் ஆண்டில் மிகக் குறைந்தளவில் ரூ.2.2 பில்லியனுக்கு குறைவடைந்தது. சனவரி 2006இல் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறைமை மற்றும் வரையறுக்கப்பட்ட ஐசிஐசிஐ வங்கி என்பன லங்கா தீர்ப்பனவு முறைமையில் இணைந்து கொண்டன. இதன் பிரகாரம் 2006 முடிவில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் 34 பங்குபற்றுனர்கள் காணப்பட்டனர்.

### 13.2 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துத்தின் கீழான வியாபாரங்களின் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் வெளிநாட்டு நாணயமாற்று, தங்கம் மற்றும் வெளிநாட்டு பிணையங்கள் தீர்ப்பனவு பிரிவு, பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கான பின்தள காரியாலய செயற்பாடுகளில் சான்றாக திறைசேரி வியாபார அறை முகாமைத்துவ முறைமைத் தொழிற்பாட்டை தொடர்ந்தும் செயற்படுத்துகிறது.

2006 ஆண்டு காலப்பகுதியில் இப்பிரிவானது திறைசேரியின் வணிக அறை முகாமைத்துவ முறைமையின் பின்தள காரியாலய பிரிவை மேம்படுத்துவதில் ஈடுபட்டது. திணைக்களமானது 6,286 தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை அமுல்படுத்தியது. தீர்ப்பனவு பிரச்சனைகளை தீர்த்தது. வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் நோஸ்ரோ மீதிகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இணைக்கிணையாளர் வைத்திருக்கும் பிணையங்களின் பாதுகாப்பு பேணுகைக்கான மீதிகளையும் கண்காணித்தது.

### 13.3 திறந்த சந்தை செயற்பாடுகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினுடைய திறந்த சந்தை செயற்பாட்டு தீர்ப்பனவு பிரிவானது தொடர்ந்தும் திறந்த சந்தை செயற்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியுடன் தொடர்புடைய பின்தள காரியாலய செயற்பாடுகளை செயற்படுத்தி வருகிறது. 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரிவானது ரூ.1,013.592 பில்லியன் பெறுமதி வாய்ந்த 3,372 மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ரூ.514.665 பில்லியன் பெறுமதி வாய்ந்த 872 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களையும் செயற்படுத்தியது. மேலும், ரூ.34.875 பில்லியன் பெறுமதி வாய்ந்த 188 பிணையங்களுடைய உடனடி விற்பனைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

**அட்டவணை II.9**

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையினுடைய வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ கொடுக்கல் வாங்கல்கள்**

(ரூ. பில்லியன்)

| | 2005 | 2006 |
|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 166.8 | 267.9 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 70.6 | 67.9 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 250.0 | 321.2 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 320.6 | 389.1 |
| தேசிய ஆ.தீ. ஒன்றிய தீர்ப்பனவுகள் | 138.4 | 235.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 13.4 சுவிப்ற் தொடர்பூட்டல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினுடைய சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவானது மத்திய வங்கியிலிருந்து வெளிச் செல்லும் மற்றும் உள்வரும் சுவிப்ற் தகவல்களை கையாளல் மற்றும் முகாமை செய்தலில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. 2006இல் மத்திய வங்கியால் 445,290 சுவிப்ற் தகவல்கள் பெறப்பட்டது. அவற்றுள் 120,005 மத்திய வங்கியினுடைய சொந்த கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடையது. மிகுதி கொடுக்கல் வாங்கல்கள் லங்கா தீர்ப்பனவு முறைமையுடன் தொடர்புடையதாகும். மத்திய வங்கியால் வெளி அனுப்பப்பட்ட தகவல்களின் மொத்த எண்ணிக்கை 671,224 காணப்பட்டது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தகவல் மற்றும் தொழில்நுட்பத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் சுவிப்ற் முறையினை நவீனப்படுத்துவதில் பின்வரும் மாற்றியமைத்தல்களை மேற்கொண்டது.

* 2006 நிதியியல் தகவல் செய்தி நியமங்களுக்காக சுவிப்ற் அணிசார் வழிகள்/ சுவிப்ற் நுழைவு பரிமாற்றிகளை தரமுயர்த்துதல்
* செய்தி சொற்றொடர் அட்டவணையினையும் சுவிப்ற் அணிசார் வழிகள்/ சுவிப்ற் நுழைவு தொகுதியின் வாசகம் 5.5.60 இனை நிறுவுதல்;
* இருபுடைய முதன்மை செலாவணி சான்றிதழினை தரமுயர்த்துதல்; அத்துடன்
* சுவிப்ற் வலையமைப்பு கட்டம் 2இன் வெளிச் செல்லலுக்கு ஆயத்தமாக இருக்கும் விதத்தில் உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துதல்

### 13.5 ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்கள்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கை கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 2005இன் ரூ.167 பில்லியனிலிருந்து 2006இல் ரூ.268 பில்லியனுக்கு 60% ஆல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இது பிரதானமாக இந்தியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளிலிருந்தான அதிகரித்த எண்ணெய் இறக்குமதிகளால் ஏற்பட்டதாகும்.

2006 காலப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் மொத்த ரூபாப் பெறுமதி 70% சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2006இல் ரூ.236 பில்லியனாகக் காணப்பட்டது.

ஆ.தீ. ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 35வது கூட்டம் 2006 மேயில் நேபாளத்தின் காத்மெண்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்; பலவீனமான, வினைத்திறனற்ற, வாடிக்கையாளர்/ பயன்பாட்டளர்களை ஏமாற்றமுறச் செய்கின்ற நெகிழ்ச்சித்தன்மையற்ற விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பான விடயப்பரப்புக்களை இனங்காண்பதற்கும்; ஆ.தீ.ஒ. நடைமுறைகளுடைய இணங்கி நடக்காத தன்மை, வினைத்திறன் வாய்ந்த கண்காணிப்பு பொறிமுறையினுடைய இல்லாமை காரணத்தினாலா அல்லது ஆ.தீ.ஒ. பொறிமுறையினுடைய இயலாமை காரணத்தினாலா என பரிசோதனை செய்வதற்கும்; குறுகிய காலத்தில் சீர் செய்யப்படக்கூடிய விடயங்களை இனங் காண்பதற்கும்; ஒன்று அல்லது பல்வேறு அங்கத்துவ நாடுகள்

உள்ளடங்கக்கூடிய அவசரகால நிலைமையில் வியாபாரத்தினை நடாத்தி செல்லக்கூடிய வழிகள் மற்றும் தெளிவான விதிகள் மற்றும் நடைமுறைகளை குறித்துரைக்கின்ற ஒரு தடங்கலற்ற வியாபார திட்டத்தினை தயாரிப்பதற்கும் அனைத்து அங்கத்துவ நாடுகளிலுள்ள பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொழில்நுட்ப குழுவொன்றினை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் தொழில்நுட்பக் குழுவின் கூட்டம் டாக்காவில் உள்ள பங்களாதேச வங்கியில் 18-19 யூலை, 2006 காலப்பகுதியில் நடைபெற்றது.

அடுத்த ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் பரிசீலனைக்காக தொழில்நுட்பக்குழுவினால் கண்டறியப்பட்டவையும் விதந்துரைப்புக்களும் பின்வருமாறு:

(அ) ஆ.தீ.ஒ. பொறிமுறையின் பிரகாரம் ஆ.தீ.ஒ. கொடுக்கல் வாங்கல்களை கையாள்வதற்கும் பன்னாட்டு நியமங்களின் சிறந்த நடைமுறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக சம்மேளனத்தின் விதிகளை கடுமையாக பின்பற்றும் பொருட்டும் அங்கத்துவ நாடுகளிலுள்ள எல்லா அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கிடையில் அறிவுறுத்தல்களை விநியோகிப்பதனூடாக விழிப்புணர்வை அதிகரித்தல். இந்த அறிவுறுத்தல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(i) அவற்றின் பணிகளை மேம்படுத்தல் மற்றும் ஆ.தீ.ஒ. நாடுகளிலுள்ள ஏனைய இணைக்கிணையாளர்களால் எழுப்பப்படும் எந்தவொரு வினாவிற்கும் தாமதமின்றி செயற்படுதல்.

(ii) ஒரு கொடுக்கல் வாங்கல் நிகழும் போது மாதாந்த அடிப்படையில் ஆ.தீ.ஒ. டொலர் கணக்கு கூற்றுக்களை வழங்குதல்.

(ஆ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் டொலர் கணக்கு மீதிகள் மீது ஆகக் குறைந்தபட்ச வட்டி வீதமாக 2.00 சதவீதத்தினைச் செலுத்தும்படி வணிக வங்கிகளை அங்கத்துவ மத்திய வங்கிகள் அறிவுறுத்தலாம்.

(இ) மத்திய வங்கிகளின் ஒவ்வொரு அங்கத்தவராலும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துக்காக தொடர்பு கொள்ளக்கூடிய அர்ப்பணிப்புடைய நபர் ஒருவர் இனங்காணப்படலாம். அத்துடன், அவர்களுடைய தொடர்புகொள்ளக் கூடிய விபரங்கள் ஆ.தி.ஒ. செயலகத்தினுடைய வெப்தளத்தில் பிரசுரிக்க முடியும். மூன்று வேலை நாட்களுக்குள் விடயங்கள் தீர்க்கப்பட முடியாது போயின், அங்கத்துவ மத்திய வங்கியால் ஆகக் குறைந்தது இடைக்கால பதிலாவது கொடுக்கப்பட வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நாணயங்களை பயன்படுத்த விருப்பம் தெரிவிக்கின்ற விடத்து எதிர்காலத்தில் தடையற்ற முறையில் பயன்படுத்தக் கூடிய நாணயமாக யூரோவின் பயன்பாட்டுக்கு திட்டமிடப்பட முடியும்.

(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்துடனான ஆலோசனையின் பிரகாரம் ஆ.தி.ஒ. இன் தற்போதைய தலைவரான நேபாள ரஷ்ட் வங்கியானது முன்னாள் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் நாடுகளிடையே ஏற்கனவே அணுகாதவிடத்து எதிர்பாக்கக்கூடிய ஆ.தீ.ஒ. அங்கத்தவர்களை இனங் காணலாம். அத்துடன் அவர்களை ஆ.தீ.ஒ. கூட்டங்களில் அவதானிப்பாளர்களாக சமூகமளிக்குமாறு அழைத்து அங்கத்தவராக இருந்தால் தற்போது கிடைக்கக்கூடிய பயன்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தியின் சாத்தியங்கள் பற்றி விபரித்து அவர்களை ஆ.தீ.ஒ. இல் இணையுமாறு கேட்கலாம்.

(ஊ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய செயலகமானது அவற்றின் அங்கத்துவத்தை ஆசிய பசுபிக்கிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (ESCAP) பிராந்தியத்துக்கும் அப்பால் அதிகரிக்கக்கூடிய சாத்தியத்தன்மை பற்றிய அவற்றின் கருத்துக்கள்/ உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதற்கு இவ் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பலாம்.

(எ) ஒன்று அல்லது பல்வேறு அங்கத்துவ நாடுகளை பாதிக்கும் அவசரகால நிலைமையில் வியாபாரத்தினை நடாத்தி செல்லக்கூடிய தெளிவான விதிகள் மற்றும் நடைமுறைகளை ஏற்படுத்துவதற்கான தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது ஆ.தி.ஒ. செயலகத்தினால் தயாரிக்கப்படலாம். ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபையானது பாதுகாக்கப்பட்ட அச்சு தரவுகளை சேமித்துக் கொள்வதற்கு ஈரான் தவிர்ந்த ஏதேனும் அங்கத்துவ நாடொன்றில் உள்ள இடமொன்றைத் தீர்மானிக்கலாம்.

(ஏ) மத்திய தீர்ப்பனவு பணிமனை மூலம் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவுகளை மேற்கொள்வதற்கான சாத்தியத்தன்மை, ஆ.தீ.ஒ. நோக்கங்கள் மற்றும் ஆ.தீ.ஒ. தீர்ப்பனவு பொறிமுறைகளுடன் இணைவாக உள்ளதா என சோதிப்பதற்கு மேலதிக பரீட்சிப்பு தேவைப்படுகிறது. இம் மத்திய தீர்ப்பனவு பணிமனை சுயேச்சையான அமைப்பாகவோ அல்லது ஒரு அங்கத்துவ மத்திய வங்கியினுடைய பிரிவாகவோ இருக்க முடியும்.

(ஐ) எல்லா நாடுகளும் அவற்றுக்கென சொந்தமான அதேநேர மொத்தக் கொடுப்பனவு முறைமை ஒன்றை வைத்திருக்கும் எதிர்பார்ப்பு நடுத்தரகால அல்லது நீண்டகால பெருமுயற்சியாகத் தெரிகிறது. ஒரு அண்மைக்கால அளவீடாக சுவிப்ற் ஆல் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தளத்துடன் ஆ.தீ.ஒ. கொடுப்பனவு முறையினுடைய தலையீட்டின் மூலம் ஆராயப்பட முடியும்.

### 13.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

2006 மே 11இல் அமுலுக்கு வந்த 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டமானது கொடுப்பனவு முறைமைக் கொள்கை உருவாக்கத்திலிருந்து அத்தகைய கொள்கையை அமுல்படுத்தல் வரையான பரந்தளவிலான நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு பொறுப்புக்கள் மற்றும் சட்ட ரீதியான அதிகாரங்களை மத்திய வங்கிக்கு வழங்கியுள்ளது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களமானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையினுடைய அனைத்து அக்கறையுடைய தரப்பினரதும் பிரதிநிதிகளைக் கொண்டமைந்த அதி உயர் தீர்மானம் எடுக்கும் அமைப்பான தேசிய கொடுப்பனவு சபையுடன் இணைந்து கொள்கை உருவாக்கச் செயற்பாட்டின் அச்சாணியாக செயற்படுகிறது. இதன்பிரகாரம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் எதிர்பார்ப்புக்கள், கொள்கை மற்றும் எதிர்வரும் 4 ஆண்டு காலப்பகுதிக்கான (2007-2010) செயற்பாட்டுத்திட்டம் என்பவற்றின் வரைபினை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் பாதுகாப்பு மற்றும்

வினைத்திறனைப் பேணும் பொருட்டு கொடுப்பனவு முறைமையின் மேற்பார்வையை அதிக வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சட்டமானது தேவையான சட்ட ரீதியான பொறுப்புக்களையும், அதிகாரங்கள் மற்றும் சூழலையும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்துக்கு வழங்குகிறது. கொடுப்பனவு முறைமையின் கொள்கை மற்றும் 4 ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் என்பவற்றை வெளியிடுவது மற்றும் அத்தகைய கொள்கை கட்டமைப்பை பின்பற்றுவது என்பன தொடர்பான மத்திய வங்கியின் நகர்வுகள் முன்னோக்கி திட்டமிடுவதற்கும் கொடுப்பனவுத்துறையில் நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கும் சந்தையில் பங்கேற்பவர்களுக்கான எதிர்வு கூறக்கூடிய சூழ்நிலையை வழங்கும்.

வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (தனியார்) நிறுவனத்துக்கும் காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்டக் குறைப்பும் முறைமையின் பங்குபற்றுனர்களுக்கும் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பொதுவான அறிவுறுத்தலை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தயாரித்ததுடன், காசோலை பிரதிமைப்படுத்தலும் சுற்றோட்டக் குறைப்பும் முறைமையினுடைய இலத்திரனியல் காசோலை சமர்ப்பிப்பு மற்றும் செயற்பாடுகளிற்கு சட்ட பூர்வ அந்தஸ்த்தை வழங்குகிறது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களமானது லங்கா தீர்ப்பனவு முறைமையினை மேம்படுத்தல், அனர்த்த மீள் உருவாக்குகை தயார் தன்மையை சோதித்தல், தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தை முன்னேற்றுதல் மற்றும் மாற்றமுறும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு லங்கா தீர்ப்பனவு முறைமையின் வசதிகளை சீராக்குதல் என்பன தொடர்பில் ஓர் தீவிர பங்கினை வகிக்கிறது. 99.54% சதவீதத்தைப் பதிவு செய்த லங்கா தீர்ப்பனவு முறைமையின் கிடைப்பனவு, 2006இல் லங்கா தீர்ப்பனவு நம்பகத்தன்மையுடன் தொழிற்பட்டதைக் காட்டியது.

பங்குபற்றுனர்களின் வேண்டு கோளிற்கமைய 2006ஆம் ஆண்டில் லங்கா தீர்ப்பனவு பங்கு பற்றுனர்களுக்கு லங்கா தீர்ப்பனவு முறைமையில் உள்ளக பங்குபற்றுனரின் கொடுக்கல் வாங்கல்களுடைய தீர்ப்பனவில் தரம் மற்றும் நியமங்களை கொண்டிருக்குமாறு வேண்டி ஓர் சுற்றறிக்கை வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யும் பங்குபற்றுனர் முறைமையில் உள்ள எல்லா எதிர்கால பெறுதித் திகதியிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடைய தீர்ப்பனவு மு.ப. 10.00 மணிக்கு நிறைவேற்றப்படுதலை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், பெறுமதி திகதி மற்றும் அமுலாக்கல் என்பன அதே நாளில் நாணய சந்தை மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று கொடுக்கல் வாங்கல்கள் (ரூபா மாதம்) பெறுமதி கொடுக்கல் வாங்கல்களுக்கு அத்தகைய கொடுக்கல் வாங்கல் இடம் பெற்று இரண்டு மணித்தியாலங்களுக்கிடையில் தீர்ப்பனவு செய்தல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2005இல் 'செலுத்தத்தவறியமைக்கான விதிப்பு' என்பதன் அறிமுகத்துடன் தேறிய தீர்ப்பனவு மீதிகளினுடைய இசைவான தீர்ப்பனவை உறுதிப்படுத்தும் பொருட்டு அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமையின் பங்குபற்றுனர்கள்களுடைய திரவத்தன்மை முகாமைத்துவம் முன்னேற்றமடைந்தது. பங்கு பற்றுனர்கள் தங்களுடைய அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தீர்ப்பனவு கணக்கில் போதுமான அளவு நிதிகளை பேணத்தவறிய நிகழ்வுகளின் எண்ணிக்கை 2005இன் 10இலிருந்து 2006இல் 4 இற்கு குறைவடைந்தது. 2006 மாச்சில் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட தடங்கலற்ற வியாபாரத்திட்ட அறிவுறுத்தல்களின் ஒரு தொகுதியை தீர்ப்பனவு மற்றும் கொடுப்பனவு திணைக்களம் அபிவிருத்தி செய்தது. லங்கா தீர்ப்பனவு முறைமையின் பங்குபற்றுனர்களுடைய தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தின் மதிப்பீடுகள் 2006 செத்தெம்பரில் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதில், அநேகமான பங்குபற்றுனர்கள் தங்களுடைய தடங்கலற்ற வியாபாரத்திட்டங்களை முன்னேற்றுவதற்கு முயற்சித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பங்குபற்றுனர்களுடைய அனர்த்த மீளமைப்பு தலத்தில் சுவிப்ற் தொடர்பாடல் கிடைக்கப்பெறாமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். ஆகவே பங்குபற்றுனர்களுடைய அனர்த்த மீளமைப்பு தலத்தில் சுவிப்ற் தொடர்பாடலின் வைத்திருத்தலின் முக்கியத்துவத்தை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் வலியுறுத்தியது. இதற்கு பதிலளிக்கும் வகையில் சுவிப்ற் பயன்பாட்டாளர் குழு, சுவிப்ற் தலத்துடன் பயன்பாட்டாளர்கள் தொடர்பை ஏற்படுத்துவதற்காக பொதுவான தொடர்புகளை வழங்கும் பொருட்டு உள்ளூர் சுவிப்ற் சேவை பணியகத்தை நிறுவுயுள்ளது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது ஏனைய கொடுப்பனவு முறைமை செயற்பாட்டாளர்கள் மற்றும் கூட்டுச் சூழலிலுள்ள பங்குபற்றுனர்களுடன் அதன் கலந்துரையாடல்களை தொடர்ந்து மேற்கொள்வதுடன் "கொடுப்பனவுகளின் காலாண்டு செய்தித்திரட்டை" பிரசுரிப்பதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக அவர்களிடமிருந்து காலத்துக்குக் காலம் தகவலைச் சேகரித்தது.

## 14. பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து, தொடர்பூட்டல் போன்ற துணைப்பணிகளை வழங்குவதற்கு மேலதிகமாக 2006இல் பணிமனைத் திணைக்களம் வங்கிப் பணிமனையினைப் பேணுவதனையும், சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது.

வினைத்திறன் மிக்க பணிகளை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பேணல் வேளைகளில் பெரும்பகுதியும் போக்குவரத்துப் பணிகளில் ஒரு பகுதியும் வெளி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

2006 இறுதியில் பணிமனைத் திணைக்களமானது அந்தப் பகுதியினை மகிழ்ச்சிகரமானதாகவும் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டும் வண்ணமாகவும் செய்வதற்காக மலர்ச்சியுடனும் போதியளவு பசுமையுடனும் அழகுபடுத்தும் முகமாக தொடங்கப்பட்ட மத்திய வங்கித் தலைமை அலுவலகக் கட்டடத்தின் முகப்புப் பகுதியின் இயற்கை வனப்பூட்டும் செயற்திட்டத்தினைப் பூர்த்தி செய்துள்ளது.

2006 ஒகத்தில், இராஜகிரியவில் உள்ள வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் விடுதிக் கட்டடத்தில் திருத்த வேலைகளுக்கும் புதுப்பித்தலுக்கும் என விலைக்கோரலை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியதன் மூலம் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்திற்கு பல்வேறு நிதியியல் நிறுவனங்களிலுமிருந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்கேற்பாளர்களும் தங்கியிருந்து பயிற்சி பெறும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு இயலச் செய்தது. இந்த வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதுடன் 2007 செத்தெம்பரில் இந்தச் செயற்றிட்டம் பூர்த்தியாக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திணைக்களம் வங்கித் தலைமையகத்திற்கு அருகாமையில்

உள்ள வரலாற்றுப் பெறுமதி மிக்க வெளிச்ச வீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## 15. பொதுப்படுகடன்

உள்நாட்டுப்படுகடனை வழங்கி முகாமைப்படுத்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுப்படுகடன்கள் இரண்டிற்குமான வட்டிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வினைத்திறனானதும் திரவத்தன்மை கொண்டதுமான அரச பிணையங்களுக்கான சந்தையினை உருவாக்குதல் போன்றன பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாகும். இதற்கமைய, இடர்நேர்வுகளின் முன்மதியுடைய அளவுகளுடன் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையில் சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளையும் அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளையும் உரிய நேரத்தில் எதிர்கொள்வதனை பொதுப்படுகடன் திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். இவ்வாண்டில், அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை பன்முகப்படுத்தல் மற்றும் பரந்துபட்டதாக்குதல், முதனிலை வணிகர் முறைமையினை வலுப்படுத்துதல் மற்றும் படுகடன் சந்தையின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல் போன்றவற்றுக்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2006 நவெம்பர் 1ஆம் நாள் முதல் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் சந்தையானது பன்னாட்டு முதலீட்டாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டமையானது முதலீட்டாளர் தளத்தினை பரந்துபட்டதாக்கியதுடன் முறிகள் சந்தையின் போட்டித்தன்மையினையும் அதிகரித்துள்ளது. நாட்டுப்பற்றுள்ள இலங்கைப் பிரசைகள் அபிவிருத்தி செய்முறையில் பங்கேற்பதற்கானதொரு சந்தர்ப்பத்தினை வழங்குவதற்காகவும் படுகடன் கருவிகளினை பன்முகப்படுத்துவதற்காகவும் ஒரு சில்லறை வகை புதிய அரச படுகடன் கருவியான இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகள் 2006 பெப்புருவரியில் அறிமுகப் படுத்தப்பட்டது. முதனிலை வணிகர் முறைமையினை வலுப்படுத்துவதற்காகவும் அதிகரிக்கும் சந்தை இடர்நேர்வுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்காகவும் 2006 யூலை முதலாம் நாளிலிருந்து முதனிலை வணிகர்களுக்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.250 மில்லியனிலிருந்து ரூ. 300 மில்லியனாக மேலும் அதிகரிக்கப்பட்டது. பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாசல் இடர்நேர்வு மூலதனக் கட்டமைப்பிற்கமைய முதனிலை வணிகர்களுக்கானதொரு இடர்நேர்வு நிறையிடப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்கப் பிணையங்களது இரண்டாந்தரச் சந்தையில் வினைத்திறனான விலை வெளியிடுகையினூடாக வர்த்தகம் செய்வதின் வினைத்திறனை உயர்த்துவதற்காக 2006 மே மாதத்தில் புளூம்பேர்க் இலத்திரனியல் வர்த்தக பீடமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோன்று அரச பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கு மேலும் வசதியளிக்கும் வகையில் 2006 சனவரியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கு நேரடிப் பங்கேற்பாளர் எனும் தகுதி வழங்கப்பட்டது.

### 15.1 2006 இன் அபிவிருத்திகள்

#### கடன்பாட்டு இலக்குகளும் உபாயமும்

2006ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2005ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி மொத்த கடன்பாட்டு எல்லை ரூ. 548 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்டது. இதில் உள்நாட்டு மூலங்களூடாகத் திரட்டப்பட வேண்டிய நிதி ரூ.378 பில்லியனாக காணப்பட்ட வேளையில் மீதி ரூ.170 பில்லியன் பன்னாட்டு மூலங்களிலிருந்து திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2006ஆம் ஆண்டில் அரசாங்க பிணையங்கள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான ரூ.338 பில்லியனுக்கெதிராக ரூ.348 பில்லியன் தொகையொன்று பொதுப்படுகடன் திணைக்களத்தினால் திரட்டப்பட்டது. ஆரம்ப பன்னாட்டு வர்த்தக கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது எதிர்பார்க்கப்பட்டதனைப் போன்று இவ்வாண்டில் நிறைவேற்றப்படாமையினால் பன்னாட்டு வர்த்தக கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி உள்நாட்டு கடன்பாட்டு நிகழ்ச்சிக்கு மாற்றப்பட்டு அதன் விளைவாக அரசாங்கப் பிணையங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளினைவிட சிறிதளவில் அதிகரித்தது. இவ்வாண்டில் திறைசேரி உண்டியலின் ஒப்புதலளிக்கப்பட்ட எல்லை மாற்றமின்றி ரூ.300 பில்லியனாகக் காணப்பட்டது.

2006இல் பின்பற்றப்பட்ட உள்நாட்டு படுகடன் முகாமைத்துவ உபாயமானது சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட முறிகள் உள்ளடங்கலான திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் போன்ற வர்த்தகப்படுத்தத்தக்க கருவிகளூடாக நிதியினைத் திரட்டுவதனை இலக்காகக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு வளத்திரட்சியில் வர்த்தகப்படுத்தத்தக்க கருவிகளான திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் போன்றவை 77 சதவீதத்திற்கு வகை கூறின. வர்த்தகப்படுத்த முடியாத ரூபாக்கடன்களின் தொடர்பில் ரூ.19 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவு காணப்பட்டு வெளிநின்ற ரூபாக்கடன் இருப்பு 2005இன் 11 சதவீதத்திலிருந்து 2006இல் 8 சதவீதமாக குறைவடைந்தது. படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் ஒரு பகுதியாக மூலதனக் கணக்கினை பகுதியளவில் சுதந்திர மயப்படுத்தியமை மற்றும் திறைசேரி முறிகள் சந்தையானது வெளிநின்ற திறைசேரி முறிகளின் 5 சதவீதம் எனும் வரையறைக்கமைய பன்னாட்டு முதலீட்டாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டமை போன்றவற்றின் மூலமாக படுகடன் சந்தையின் முதலீட்டாளர் தளமானது மேலும் விரிவுபடுத்தப்பட்டது. ஆகக் குறைந்தது ஒரு வருட பிடித்து வைத்திருக்கும் காலம், முதிர்வு காலம் மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் முறிகளைப் பயன்படுத்துவது தொடர்பான கட்டுப்பாடுகள் போன்ற பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கான நுழைவுத்தடைகள் அதிக முதலீட்டாளர்களைக் கவருவதற்காக 2007இன் ஆரம்ப காலப்பகுதியில் நீக்கப்பட்டன. இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் முறிகளென அழைக்கப்படும் புதிய படுகடன் கருவியானது முக்கியமாக வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கைச் சமூகத்தினை இலக்காகக் கொண்டு 2006இன் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறுகிய முதிர்ச்சியைக் கொண்ட தோற்றமொன்றின் மீது குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்களவு படுகடன்களை மீள் கொடுப்பனவு செய்யும் தன்மை அவதானிக்கப்பட்டிருக்கின்றது. தற்போதுள்ள படுகடன் இருப்பில் 24 சதவீதமானவை ஓராண்டு காலப்பகுதியில் முதிர்வடையும் அதேவேளை 86 சதவீதமானவை 3 ஆண்டு காலப்பகுதியில் முதிர்வடையுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களில் உள்நாட்டு படுகடனின் சராசரி முதிர்ச்சிக் காலம் (கருவிசார் ரூபாப் படுகடன்) மற்றும் அத்தகைய படுகடன்களின் காலப்பகுதி இவை இரண்டும் குறைவடைந்துள்ளதனை பகுப்பாய்வு எடுத்துக் காட்டுகின்றது. குறுகிய காலமொன்றில் பெருமளவு படுகடன்களை மீளச்செலுத்துவது தொடர்பாக உருவாகி வருகின்ற பிரச்சனைகளையும் மீண்டும் மீண்டும் உருவாகி வரும் இடர்நேர்வுகளையும் கட்டுப்படுத்த வேண்டிய அவசிய

தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில் பெரும்பாலான அபிவிருத்தியடைந்த சந்தைகளில் பயன்படுத்தப்படுவது போன்று பொதுப்படுகடன் திணைக்களம் மீண்டும் வாங்கும் தொழிற்பாடுகளினூடாக பொருத்தமான படுகடன் திரட்சிப்படுத்தும் திட்டமொன்றினை விருத்தி செய்வதற்கான திட்டத்தினை தொடங்கியுள்ளது. இதனை 2007இல் நடைமுறைக்கிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 15.2 வழங்கல்

2006இல் பொதுப்படுகடன் திணைக்களம் 52 திறைசேரி உண்டியல்கள் ஏலங்களை நடாத்தியதுடன் மொத்த நியதிகளில் ரூ.628 பில்லியனையும் தேறிய நியதிகளில் ரூ.24 பில்லியன் புதிய வழங்கல்களையும் வழங்கல் செய்துள்ளது. குறுகிய கால உண்டியல்கள் மீதான சந்தையின் வலுவான விருப்பத்தேர்வினைப் பிரதிபலித்து மொத்த வழங்கல்களில் 91 நாள் அல்லது அதற்குக் குறைந்த முதிர்வினைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் 64 சதவீதத்திற்கு வகை கூறின. பொதுப்படுகடன் திணைக்களமானது திறைசேரி முறி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 70 ஏலங்களினை நடாத்தியதனூடாகவும் நேரடி முதலீடுகளூடாகவும் ரூ.310 பில்லியனினைத் திரட்ட முடிந்துள்ளது. திறைசேரி முறிகளின் மொத்த வழங்கல்களில் 3 வருடங்களுக்கு மேலான முதிர்ச்சினைக் கொண்ட ஐம்பத்தி நான்கு சதவீதமாக வகை கூறியமையானது படுகடன் இருப்பின் காலத்தினை விரிவடையச் செய்யத் துணை புரிந்துள்ளது. பாரம்பரிய ரீதியான திறைசேரி முறிகளுக்கு மேலதிகமாக ரூ. 6 பில்லியன் பெறுமதியான சுட்டெண்ணுடன் இணைக்கப்பட்ட முறிகள் 2006 யூன் மாதத்தில் வழங்கப்பட்டன. முறிகள் சந்தையில் காணப்படும் உயர்ந்த பின்னப்படுத்தலினைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளினை பொதுப்படுகடன் திணைக்களம் 2006இல் மேற்கொண்டது. இது ஏற்கனவேயுள்ள திறைசேரி முறிகளின் தொடர்களினை மீளத்திறந்து வைத்தல் எனும் கொள்கையினை தொடர்ந்தமையானது திறைசேரி உண்டியல்களின் தொடர்களின் மொத்த எண்ணிக்கையை 2005 இறுதியில் 56 இலிருந்து 2006 இறுதியில் 53 ஆகக் குறைப்பதற்கு துணை புரிந்துள்ளது.

இலங்கை அபிவிருத்தி முறிகள் மூன்று தொடர்ச்சியான ஏலங்கள் மூலம் 2006 யூனிலும் ஒகத்திலும் மற்றும் செத்தெம்பரிலும் வழங்கப்பட்டன. மூன்று ஏலங்களும் கூடுதலாக உதவப்பட்டதுடன் 2 வருட (ஐ.அ.டொலர் 320 மில்லியன்) மற்றும் 3 வருட (ஐ.அ.டொ. 260 மில்லியன்) முதிர்ச்சிகளைக் கொண்டதாக மொத்தமாக ஐ.அ.டொலர் 580 மில்லியன்கள் திரட்டப்பட்டன. இந்த முறி வழங்கல்களுக்கான வட்டிச் செலவினமானது 6

**அட்டவணை II.10**

**2006இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்**

ரூ. மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள்கொடுப்பனவுகள் | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | 91 நாட்கள் | 299,505 | 308,296 | (8,791) |
| | 182 நாட்கள் | 72,462 | 69,132 | 3,330 |
| | 364 நாட்கள் | 74,454 | 100,099 | (25,645) |
| | ஏனையவை | 181,445 | 126,781 | 54,664 |
| | மொத்தம் | 627,866 | 604,308 | 23,558 |
| திறைசேரி முறிகள் | 1 ஆண்டு | - | 11,250 | (11,250) |
| | 2 ஆண்டுகள் | 24,023 | 107,224 | (83,201) |
| | 3 ஆண்டுகள் | 119,972 | 23,550 | 96,422 |
| | 4 ஆண்டுகள் | 69,505 | 19,221 | 50,284 |
| | 5 ஆண்டுகள் | 79,803 | - | 79,803 |
| | 6 ஆண்டுகள் | 8,980 | 14,500 | (5,520) |
| | 8 ஆண்டுகள் | 7,865 | - | 7,865 |
| | மொத்தம் | 310,148 | 175,745 | 134,403 |
| ரூபாக் கடன்கள் | 4/6 வருடங்கள் | 23 | - | 23 |
| | 1/10 வருடங்கள் | - | 19,393 | (19,393) |
| | 10 வருடங்கள் | - | 4,480 | (4,480) |
| | மொத்தம் | 23 | 23,873 | (23,850) |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 2 வருடங்கள் | 51,343 | 25,924 | 25,419 |
| | 3 வருடங்கள் | 8,782 | - | 8,782 |
| | மொத்தம் | 60,125 | 25,924 | 34,201 |
| வெ.நா.வ.தொ பிரிவுகளிலிருந்தான கடன்கள் | 1 வருடம் | 19,674 | 24,887 | (5,213) |
| | 1.5 வருடங்கள் | 1,623 | 3,180 | (1,557) |
| | மொத்தம் | 21,297 | 28,067 | (6,770) |
| **மொத்தம்** | | **1,019,459** | **857,917** | **152,760** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 132 அடிப்படைப் புள்ளிகள் சேர்த்ததாக 2 வருட காலத்திற்கும் 6 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 141 அடிப்படைப் புள்ளிகளினைச் சேர்த்ததாக 3 வருட காலத்திற்கும் காணப்பட்டது.

இதே வேளையில், உள்நாட்டு படுகடன் பிணையங்கள் சந்தையிலான அழுத்தத்தினைக் குறைப்பதற்காகவும் வட்டி வீதக் கட்டமைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் 100 மில்லியன் ஐ.அ. டொலர் பெறுமதியுடைய 3 வருட காலத்தினைக் கொண்டதுமான தொரு கூட்டுக்கடனானது 6 மாத இலண்டன் வங்கிகளுக் கிடையிலான வழங்கல் வீதம் + 75 அடிப்படைப்புள்ளிகளெனும் வட்டி வீதத்தில் ஒரு பன்னாட்டு வர்த்தக கடன்பாடு பெறப்பட்டது. சிற்றி வங்கியானது இந்த முறி வழங்கலுக்கான முதன்மை முகாமையாளராக தொழிற்பட்டது.

அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்தினால் தூண்டப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்கள் மற்றும் ஆரம்ப பன்னாட்டு வர்த்தக கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி உள்நாட்டு கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாற்றப்பட்டது போன்றவை 2006இல் முழுமொத்த உள்நாட்டு கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு பாரிய அழுத்தத்தினை உருவாக்கின. குறிப்பாக, ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் சமாதான பேச்சு வார்த்தை முறிவடைந்தமை மற்றும் அதிகரித்துச் செல்லும் பணவீக்கம் போன்றவற்றின் காரணமாக சந்தையில் நிலவிய நிச்சயமற்ற தன்மையுடன் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில் விளைவு வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. ஏலங்களில் வட்டி வீதங்களிலான அதிகளவான அழுத்தங்களினைக் குறைப்பதற்காக அரசானது நிறுவன ரீதியான முதலீட்டாளர் களிடமிருந்து நிதியினைத் திரட்டியதன் மூலம் ஏலங்களற்ற முறையிலான கடன்பாட்டில் அதிகளவு தங்கியிருந்தது.

வட்டி வீதங்களின் அதிகரித்துச் செல்லும் போக்கானது முதலீட்டாளர்களது ஆர்வத்தினை சந்தையின் குறுங்கால எல்லைக்கு நகர்த்தியது. இது முதலாந்தர ஏலங்களின் ஏற்றுக் கொள்ளலின் வகையின் மாறுதலுக்கு இட்டுச் சென்றது. ஆண்டின் இறுதிப்பகுதியில் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் அளவில் 91 நாள் உண்டியல்கள் 69 சதவீதத்திற்கு வகை கூறின. இது வாராந்த ஏலங்களின் அளவிலானதொரு அதிகரிப்பிற்கும் அதிகரித்த மீண்டும் மீண்டும் வரும் இடர்நேர்வுக்கும் வழிகோலியது. இது பொதுப்படுகடன் சொத்துப்பட்டியலின் காலத்தினை 2005இல் 1.87 வருடத்திலிருந்து 2006இல் (செத்தெம்பர் வரை) 1.83 வருடங்களாக குறைத்தது. மேலும், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளின் வட்டி வீதங்களிலான பரந்ததானதொரு வேறுபாடானது இரண்டாந்தர சந்தை செயற்பாடுகள் குறைவடைவதற்கு வழிகோலியதுடன் இது பதிலுக்கு முதலாந்தரச் சந்தைக்கான சாதாரண வளப்பாய்ச்சலினை குறைவடையச் செய்தது. இது முதலாந்தர ஏலங்களிலான மேலதிக அழுத்தத்திற்கு காரணமாகியது.

### 15.3 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களமானது ரூ.445 பில்லியன் பெறுமதியான வெளிநாட்டுப்படுகடன் மற்றும் உள்நாட்டுப்படுகடன்களை தீர்ப்பனவு செய்தது. உள்நாட்டு படுகடன்களுக்கான மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ.385 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டினை விட ரூ.35 பில்லியனினால் அதிகரித்து ரூ.60 பில்லியனினைப் பதிவு செய்துள்ளது. இந்த அதிகரிப்பானது 2005 சுனாமி தொடர்பில் கிடைக்கப்பட்ட படுகடன் நிவாரணத்தின் காரணமாக 2005இன் தாழ்ந்த படுகடன் பணிக்கொடுப்பனவுகளினதும் 2006இல் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகளின்படியான வழமையான வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவின் ஆரம்பம் போன்றவற்றினால் ஏற்பட்டதாகும். 2006இல் வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகளது அதிகரிப்பிற்கான மற்றுமொரு காரணமாக வெளிநாட்டு நாணயங்களுக்கெதிரான ரூபாவின் பெறுமதி தேய்வு சுட்டிக் காட்டப்படுகின்றது.

### 15.4 விளைவு வீதங்களும் இரண்டாந்தர சந்தையின் செயலாற்றமும்

2006இன் முதல் அரைக்காலப்பகுதியில் உறுதியாகக் காணப்பட்ட அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் ஆண்டின் இறுதிப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. அதிகரித்த பணவீக்க வீதம், சந்தையில் காணப்பட்ட உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புகள், இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களிலான மேல்நோக்கிய திருத்தம் (125 அடிப்படைப்புள்ளிகளினால்) மற்றும் ஆரம்ப வெளிநாட்டு கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதி உள்நாட்டு கடன்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாக அரச பிணையங்கள் சந்தையில் தோற்றம் பெற்ற மேலதிகமான கடன்பாட்டு அழுத்தம் போன்றன வட்டி வீதங்களிலான இத்தகைய மிகக் கூடுதலான அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்களாகும். 2005 திசெம்பரிற்கும் 2006 திசெம்பரிற்குமிடையே 91, 182 மற்றும் 364 நாள் முதிர்வுகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் முறையே 266, 244 மற்றும் 261 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரித்த அதேவேளை அதேகாலப்பகுதியில் 2-3 ஆண்டு முதிர்வு காலத்தினைக் கொண்ட திறைசேரி முறிகளது விளைவுகள் 150-175 அடிப்படைப்புள்ளிகள் வீச்சில் அதிகரித்தது. 2006 காலப்பகுதியில் அரசாங்க பிணையங்களுக்கான இரண்டாந்தர சந்தைச் செயற்பாடுகள் மேலும் 5.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு சந்தை தொடர்பான செயற்பாடுகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் முதலீட்டாளர்களது விளைவு வளைகோட்டின் குறுகிய கால எல்லையில் வணிகம் செய்வதற்கான விருப்பத் தேர்வினை தெளிவாகப் பிரதிபலிக்கும் உடனடி விற்பனை மற்றும் கொள்வனவுகளிலான மிகக்கூடிய வீழ்ச்சியும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

### 15.5 முதனிலை வணிகர்களது மேற்பார்வை

பொதுப்படுகடன் திணைக்களமானது முதனிலை வணிகர்களது செயற்பாடுகளை தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலப்பரீட்சிப்புக்கள் ஊடாக தொடர்ந்தும் மேற்பார்வை செய்துவந்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் ஆறு கிரமமான தலப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதியியல் அறிக்கைகளை மீளாய்வு செய்வதனூடாகவும் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளில் முதனிலை வணிகர்களது செயற்றிறனை கண்காணிப்பதனூடாகவும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

2006 யூலை 1ஆம் நாள்முதல் முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இடர்நேர்வு

நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்பானது வர்த்தகச் சொத்துப்பட்டியலின் சந்தை இடர்நேர்வு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளுக்கு வேண்டப்படும் மூலதனத்தை உள்ளடக்கியுள்ளதுடன் முதனிலை வணிகர்களின் சொத்துப்பட்டியலின் நீண்டகால மற்றும் குறுங்கால நிலைப்பாடுகள் மற்றும் இணைத்தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வினைப் பொறுத்து மேலதிக மூலதனத் தேவைப்பாட்டினையும் உள்ளடக்குகின்றது. வேண்டப்படுகின்ற இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்பானது ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடான ரூ.300 மில்லியன் அல்லது முதனிலை வணிகர்களது இடர்நேர்வு நிலைப்பாட்டின் அடிப்படையில் வேண்டப்படுகின்ற இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் இவையிரண்டில் எது உயர்வானதோ அது வேண்டப்படும். இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மைக் கட்டமைப்பின் கீழ் வேண்டப்படுகின்ற மூலதனப் போதுமாந்தன்மை விகிதமானது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் 8 சதவீதமாக வேண்டப்படுகின்றது. திணைக்களமானது முதனிலை வணிகர்களுக்கு இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை கட்டமைப்புத் தொடர்பில் அறிவூட்டுவதற்காக ஒரு தொடரான ஆய்வரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தியதுடன் இம்முறைமையானது 2006 யூலை 1ஆம் நாளன்று நடைமுறைப் படுத்தப்பட்டது.

பொதுப்படுகடன் திணைக்களமானது முதனிலை வணிகர்கள் தம்மைத் தரமுயர்த்திக் கொள்வதனை ஊக்குவிப்பதனை குறிக்கோளாகக் கொண்டு முதனிலை வணிகர்களை அவர்களது செயற்றிறனுடன் இணைக்கப்பட்டதான ஒரு பிரமாண அடிப்படையில் அளவிட்டுக் கொள்வதற்கான பொறிமுறையினை அறிமுகப்படுத்தியது. அந்த அளவீடானது ஏலங்களில் பங்குபற்றும் மட்டங்கள், சந்தையினை உருவாக்கும் தகுதி, இடர்நேர்வு மட்டங்கள், நிதியியல் செயற்றிறன், அறிக்கையிடல் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் போன்ற தர ரீதியான மற்றும் கணிய ரீதியான காரணிகளினை அடிப்படையாகக் கொண்டது.

எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினையும் மத்திய வைப்பக முறைமையில் பதிவு செய்தல் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான முதலீடுகளின் பாதுகாப்பினை அதிகரித்தல் போன்றவற்றினைக் குறிக்கோளாகக் கொண்டு சந்தைப் பங்குபற்றுனர்கள் ஓரிரவு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களினை மீள்நிலைப்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் வகையில் மத்திய வங்கியின் பரந்த வலையமைப்பின் உள்ளடக்கமானது விரிவாக்கப்படுவதற்கான செயல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த திட்டமானது 2007இன் ஆரம்பத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

### 15.6. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும் மத்திய வைப்பக முறைமையும் - லங்கா செகுயர்

பொதுப்படுகடன் திணைக்களமானது 23 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லாத முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம், மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமைகள் (தனியார்) லிமிடெட் என்பவற்றை உள்ளடக்கிய அதன் பங்குபற்றுனர்களுடன் லங்கா செகுயரின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. 2006இல் பத்திரங்களலல்லாத பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாக ரூ. 11,425,496.3 மில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்ட 184,476 மொத்த எண்ணிக்கையுடைய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. மத்திய வைப்பக முறைமையில் பேணப்பட்ட பதிவு செய்யப்பட்ட முதலீட்டாளர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 26,936 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டில், பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்களது வழங்கல்களின் பெறுமதி ரூ.627,864.3 மில்லியன் (முகப்பெறுமதி) ஆகவும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகளின் வழங்கல்களின் பெறுமதி ரூ.310,148 மில்லியனாகவும் (முகப்பெறுமதி) காணப்பட்டன. மொத்தத்தில், பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட முதிர்வுக் கொடுப்பனவுகள் ரூ.764,116 மில்லியனாகக் காணப்பட்ட போது பத்திரங்களற்ற திறைசேரி முறிகளிற்கான நறுக்கு கொடுப்பனவுகள் ரூ.81,111.2 மில்லியனாகக் காணப்பட்டது.

## 16. பிரதேச அபிவிருத்தி

மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அரசாலும் கொடையாளிகளினாலும் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களின் உச்சமுகவராக செயற்படுதல், கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொழிற்படுத்தல், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களை நிருவகித்தல் மற்றும் அரச மற்றும் ஏனைய முகவர்களுக்கு பிரதேச மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான கொள்கை ஆலோசனைகளை வழங்குதல் உள்ளடங்கலாக அதன் முக்கிய தொழிற்பாடுகளினை 2006இல் தொடர்ந்து நிறைவேற்றியது.

### 16.1 கடன் திட்டங்களின் தொழிற்பாடு

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 2006ஆம் ஆண்டு காலப்பகுதியின் கீழ் குறிப்பிட்ட கடன் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான உச்சமுகவராக தொடர்ந்தும் செயற்பட்டு வந்தது.

### 16.2 வேளாண்மைத் துறை

இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் சுழலும் நிதியக் கடன் திட்டம்

தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் சூழல் நிதியக் கடன் திட்டம்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

### 16.3 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை

மாத்தளைப் பிரதேச பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சப்பிரகமுவ பிரதேச இணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்

சுசகன கடன் திட்டம்

தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

### 16.4 நுண்பாக நிதியியல்துறை

சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம்

ஜீவன சக்தி நிகழ்ச்சித்திட்டம் (மீள்நிதியிடல் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் இரண்டாம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்ட கடன் திட்டங்கள் 2005இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தேயிலை அபிவிருத்தி சூழலும் நிதியச் செயற்றிட்டம் மற்றும் இரண்டாம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச்

## அட்டவணை 11.11

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புகள்

| | செயற்றிட்டமும் நிறைவேற்றுக் காலமும் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | ஆதரவின் தன்மை | நிதி ஒதுக்கீடு | தற்போதைய நிலைப்பாடு * |
|---|---|---|---|---|---|---|
| 1. | **வேளாண்மைத் துறை** | | | | | |
| 1.1 | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 2006-2014 | இலங்கை அரசாங்கம் | நிரந்தரப்பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், பண்ணை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல் மற்றும் செயல்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 1 பில்லியன் | 2006 திசெம்பரில் ரூ.800 மில்லியன் கொடுகடனாக கிடைக்கத்தக்கதாக இருந்தது. கடன்பெறுநருக்கான வட்டி வீதம் 9% |
| 1.2 | தேயிலை அபிவிருத்திச் செற்றிட்டம் (சுழலும் நிதியம்) 2006-2018 | இலங்கை அரசாங்கம் | தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல். இதன் தொடர்பில் தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான அடிப்படை உதவிகள் கிடைக்கக்கூடிய தாகவுள்ளது. | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 1.1 பில்லியன் | 2006 திசெம்பரில் ரூ.900 மில்லியன் கொடுகடனாக கிடைக்கத்தக்கதாக இருந்தது. கடன்பெறுநருக்கான வட்டி வீதம் 9% |
| 1.3 | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்) | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி மானியமும் | சிறிய வேளாண்மையாளருக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குதல்.<br>- குறுகிய கால உற்பத்திக் கடன்<br>- நாற்றுக்கள் மற்றும் பயிர் மூலப்பொருட்களின் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களை கொள்வனவு செய்தல் | ஆண்டுக்கு 6% பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கான அரசாங்கத்தின் வட்டி மானியமும் பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் நட்டங்களில் 60% வரையான கொடுகடன் உத்தரவாதமும் | பங்கேற்கும் நிறுவனங்களினால் தமது சொந்த நிதி மூலம் வழங்கப்பட்ட கடன்கள் | செயற்றிட்டமானது தொழிற் பாட்டிலுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 8% மீள்பெறுகை வீதம் 88% |

| 2. | சிறிய நடுத்தர தொழில்முயற்சித்துறை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.1 | மாத்தளை பிரதேச பொருளாதார செயற்றிட்டம் (2000-2007) | வே.அ.ப.நி. | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இல.ரூ.197.04 மில் (சிறப்பு எடுப்பனவு உரிமை 2 மில்லியன்) | 2006 இறுதியளவில் மீள் நிதியிடலுக்கு கிடைக்கத்தக்கதான மீதி மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது. சுழலும் நிதியத் திட்டமொன்றை நிறை வேற்றுவது கவனத்தில் கொள்ளப்படுகின்றது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 12% |
| 2.2 | சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2000-2007) | இலங்கை அரசாங்கம் | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்துதல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 147 மில்லியன் | செயற்றிட்ட நடவடிக்கைகள் 2007 பெப்புருவரியில் பூர்த்தியடையும். சுழலும் நிதியம் 2007 மாச்சு முதல் நிறைவேற்றப்படவுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 10% மீள்பெறுகை வீதம் 92% |
| 2.3 | சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (2005 - 2007) | ப.ஒ. யப்பானிய வங்கி | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரவளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூ.2.6 பில்லியன் (ஜப்பான் யென் 3 பில்லியின்) | மொத்த ஒதுக்கு பூர்த்தியடைந்துள்ளது. சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்ட சுழலும் நிதியக் கொடுகடன் திட்டமானது செயற்றிட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்துள்ள விணணப்பத்தாரருக்கு தொழிற்படுத்தப்படும். கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 6% மீள்பெறுகை வீதம் 91% |
| 2.4 | சுசகன கடன் திட்டம் (2005-2007) | இலங்கை மத்திய வங்கி | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரவளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. ரூ.2.5 மில்லியன் அதியுச்சத் தொகைக்கு மட்டுப்பட்டதாக 50% வரையான கொடுகடன் உத்தரவாதம் | இலங்கை ரூபா 3 பில்லியன் | மொத்த ஒதுக்கு பூர்த்தியடைந்துள்ளது. சுசகன சுழலும் நிதியக் கொடுகடன் திட்டமானது செயற்றிட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்துள்ள விண்ணப்பத்தாரருக்கு தொழிற்படுத்தப்படும். கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 6% மீள்பெறுகை வீதம் 90% |
| 2.5 | சுனாமிக்குப் பின்னரான கொடுகடன் தொடர் ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் ஆ கடன் திட்டம் (2006 - 2014) | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நடுத்தர மற்றும் பாரியளவு தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் | பங்கேற்கும் நிதிநிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இல.ரூ.1.46 பில் (யூரோ 20 மில்லியன்) | 2006 திசெம்பரில் பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 9% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.6 | கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | ஏஜன்ஸ் பிரான்சைஸ் டெவலப்மன்ட் | கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடல் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இல.ரூ.1.46 பில் (யூரோ 10 மில்லியன்) | செயற்றிட்டமானது 2007இல் நிறைவேற்றப்பட அட்டவணையிடப்பட்டுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 10% |
| 3. | **நுண்பாக நிதியியல்துறை** | | | | | |
| 3.1 | உலர்வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் | வே.அ.ப.நி. | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர் களுக்கிடையிலான வறுமை ஒழிப்பும் வருமான உருவாக்கமும் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 200 மில்லியன் | பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் செயற்றிட்ட பிரதேசங்களில் நன்மை பெறுநர்களை அடையாளம் காண வேண்டியுள்ளது. |
| 3.2 | சிறு உடமையாளர் வெளிப்பயிர்ச் செய்கையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | வே.அ.ப.நி. | அரசுக்குச் சொந்தமான மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் வாழ்கின்ற வெளிப்பயிர்ச் செய்கையாளர்களிடையே வறுமை ஒழித்தல். | பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 400 மில்லியன் | செயற்றிட்டமானது 2007இல் நிறைவேற்றப்படவுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 9% |
| 3.3 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | வே.அ.ப.நி., க.ப.அ.க. மற்றும் இலங்கை அரசு | கிராமிய வறிய மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழக்கமான கொடுகடனை ஏற்படுத்துவதற்கான, வலுவான கொடுகடன் வழங்குதல் நுட்பத்தை அமைத்தலும் நன்மை பெறுவோரின் பொதுநலன்புரி வேலைகளும் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது. | இலங்கை ரூபா 512.7 மில்லியன் | சுழலும் நிதியமானது தொழிற்பாட்டிலுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 16-20%. மீள்பெறுகை வீதம் 96% |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | ப.ஒ. யப்பானிய வங்கி | கிராமிய வறிய மக்களுக்கு வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழக்கமான கொடுகடனை ஏற்படுத்துவதற்கான, வலுவான கொடுகடன் வழங்குதல் நுட்பத்தை அமைத்தலும் நன்மை பெறுவோரின் பொதுநலன்புரி வேலைகளும்<br><br>இனங்காணப்பட்ட கடன் பெறுநர்களிடையே வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அவர்களது வறுமையை போக்குதல்<br><br>தாழ் வருமான குழுக்களினை முறைசார் வங்கியியல் முறையில் இணைப்பதனை ஒழுங்கமைத்தல் | பங்கேற்கும் நிதி நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி மீள் நிதியிடுகின்றது | இல.ரூ. 967.2 மில் (யப்பான யென் 1368 மில்லியன) | சுழலும் நிதியக் கடன் திட்டமானது 2007 ஏப்பிரல் முதல் நிறைவேற்றப்பட அட்டவணையிடப்பட்டுள்ளது. கடன் பெறுநருக்கான வட்டி வீதம் 17%. மீள்பெறுகை வீதம் 93% |

* மீள்பெறுகை வீதங்கள் தற்காலிகமானவை

செயற்றிட்டத்தின் சுழலும் நிதியம் என்பன 2006இல் நடைமுறைக்கு வந்தன. இதற்கு மேலதிகமாக, புதிய கொடுகடன் வரிசைகளான ஐரோப்பிய முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்ட சுனாமிக்குப் பின்னரான கொடுகடன் தொடர் (ஒப்பந்தம் ஆ), பிரான்சு அரசின் சார்பாக ஏஜன்ஸ் பிரான்சைஸ் டெவலப்மன்ட் எனும் முகவரினால் நிதியிடப்பட்ட கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட உலர்வலய ஜீவனோபாய உதவி பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றிற்கான பூர்வாங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளானவை கொடையாளி முகவர்களுடன் பேரம் பேசுதல், அரசுடனான நிர்வாக உடன்படிக்கைகள் மற்றும் பங்கேற்கும் நிதி நிறுவனங்களுடன் கடன் வழங்கல் உடன்படிக்கைகளை வரைதல் போன்றவையாகும். சிறு உடமையாளர் வெளிப்பயிர்ச் செய்கையாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பூர்வாங்க வேலையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், ஜீவன சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் (சுனாமியினால் பாதிக்கப்பட்ட நுண்பாக முயற்சியாண்மையாளரது ஜீவனோபாயத்தை புனரமைப்பதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் நிதியிடப்பட்டதொரு நுண்பாக நிதியியல் துறை கொடுகடன் நிகழ்ச்சித் திட்டம்) மீள் நிதியினை வழங்குவதும் இவ்வாண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ள திட்டங்களது விபரங்கள் அட்டவணை II.11இல் தரப்பட்டுள்ளன.

### வேளாண்மைத்துறை

ஏற்கனவே, குறிப்பிட்டதனைப் போன்று தேயிலை மற்றும் நிரந்தரப் பயிர்கள் துறைகளுக்கு ஆதரவு வழங்குவதனை தொடர்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேயிலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இரண்டாம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்றவற்றின் மீளப்பெறுகைகளினைக் கொண்டு தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் சுழலும் நிதியம் மற்றும் இரண்டாம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் சுழலும் நிதியம் போன்றன 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்படத் தொடங்கின. தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் இரண்டாம் நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் போன்றவற்றின் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்காத பல்வேறு பங்கேற்கும் நிதி நிறுவனங்களும் இத்தகைய முக்கியமான துறைகளுக்கான நிதிப்பாய்ச்சலினை ஊக்கப்படுத்துவதற்காக சுழலும் நிதியத்திட்டங்களில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தமது கடன் வழங்கலில் 10 சதவீதத்தினை வேளாண்மை செய்முறை உட்பட வேளாண்மைக்கு ஒதுக்குவதனைக் கட்டாயமாக்குவதற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணைக்கான செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, இத்தகைய இலக்குகளினை அடைய முடியாத வங்கிகள் கட்டாயத் தொகையினை பங்களிப்புச் செய்து அதன் மூலம் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கான வேளாண்மை நிதியமொன்றை தாபிப்பதற்கான சாத்தியங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது கண்டறியவிருக்கின்றது.

### முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறைமை

அறுவடைப் பருவ காலப்பகுதியில் விலைகளின் மந்த நிலையினால் ஏற்படும் நட்டங்களிலிருந்து வேளாண்மையாளர்களை பாதுகாப்பதற்காக முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் 1999இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை தெரிவு செய்யப்பட்ட வேளாண்மை உற்பத்திகளை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலைகளில் வியாபாரம் செய்வதற்காக வாங்குனர்கள் மற்றும் வேளாண்மையாளர் களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளாகும். புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்திகளை முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யும் வாங்குனர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது பிரதேச அலுவலகங்களுடன் இணைந்து பங்கேற்கும் நிதிநிறுவனங்கள், வாங்குனர்கள், வேளாண்மையாளர்கள் மற்றும் வேளாண்மையாளர் சங்கங்கள் உட்பட பங்குடமையாளர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை 2006இலும் தொடர்ந்தும் மேம்படுத்தி வந்துள்ளது. 2005 / 06 பெரும்போகத்தில் ரூ.1.3 பில்லியன் மொத்தப் பெறுமதியைக் கொண்ட மொத்தமாக 392 கடன்கள் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் உற்பத்திகளினைக் கொள்வனவு செய்வதற்காக வாங்குனர்களுக்கு வழங்கப்பட்ட அதேவேளை 2006 சிறுபோகத்தில் ரூ.1.3 பில்லியன் மொத்தப் பெறுமதியுடைய 301 கடன்கள் இந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டன. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட முக்கிய பயிர்களாக சோளம், சோயா அவரை, குரக்கன், உழுந்து மற்றும் இஞ்சி போன்றவை காணப்படுகின்றன. அநுராதபுர மாவட்டத்தில் மொத்தமாக 27,000 ஏக்கரில் சோளம் பயிரிடப்பட்டதுடன் உற்பத்தி செய்யப்பட்ட 54,000 மெட்ரிக் தொன் சோளமும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்டு ரூ.900 மில்லியன் வருமானத்தை வேளாண்மையாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்தது. பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினாலும் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களாலும் இவ்வாண்டில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் தொடர்பான பல்வேறு விழிப்புணர்ச்சி பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன.

### சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறை

சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய, நடுத்தர மற்றும் நுண்பாகத் தொழில் முயற்சிகளினை புனர்நிர்மாணம் செய்வதற்காக 2005 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சுசகன மற்றும் சிறிய வியாபார மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் போன்ற கடன் திட்டங்களுக்கு மீள் நிதி வழங்குவது மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில் பூர்த்தியாக்கப்பட்டது. எனினும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை புனர் நிர்மாணம் செய்வதற்கான கடன்களுக்கான கேள்வி தற்பொழுதும் காணப்படுவதுடன் சுனாமிக்குப் பின்னரான கொடுகடன் தொடரின் ஒப்பந்தம் ``ஆ'' ஆனது நடுத்தரளவு தொழில் முயற்சிகளின் தேவைகள் சிலவற்றை பூர்த்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்தான ஏதாவது மேலதிக கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்காக சுசகன கடனின் மீள்பெறுகைகளிலிருந்து ஒரு சுழலும் நிதியத்தினை ஸ்தாபிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் கட்டடவாக்கக் கம்பனிகளுக்கு நிதியினை வழங்கும் நோக்கில் பிரான்சு அரசாங்கத்திடமிருந்து (கட்டடவாக்கத்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்) பெறப்படவுள்ள புதிய கொடுகடன் தொடர் தொடர்பான பூர்வாங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**நுண்பாக நிதியியல் துறை**

ஏற்கனவே, குறிப்பிடப்பட்டதனைப் போன்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதியிடப்பட்ட ஜீவன சக்தி கடன் திட்டத்திற்கு மீள்நிதி வழங்கும் தொழிற்பாடுகள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கண்டி, புத்தளம், காலி மற்றும் மாத்தறை போன்ற மாவட்டங்களில் தொழிற்படுத்தப்பட்டதொரு மாதிரி நுண்பாக நிதித்திட்டமான சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமானது நன்மை பெறுகின்ற சமூகத்தினரை தொகுதியாக்குவதன் மூலம் உருவாக்கப்பட்ட கம்பனிகளான செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கான மக்கள் கம்பனிகளிடம் முக்கிய நிர்வாகத் தொழிற்பாடுகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் வெற்றிகரமாக முன்னேற்றமடைந்தது. 2005இல் நடாத்தப்பட்ட சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் தாக்கத்தினை மதிப்பிடும் அளவீட்டின் அறிக்கையானது இவ்வாண்டில் வெளியிடப்பட்டது. மாதிரிக்குட்படுத்தப்பட்ட நன்மை பெறும் வீட்டுடமையாளர்களில் (மாதிரியானது சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தில் 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் உள்ள நன்மை பெறும் வீட்டுடமையாளர்களை உள்ளடக்குகின்றது) 63 சதவீதமானோர் 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியில் வறுமைக்கோட்டு எல்லையினை தாண்டியுள்ளமையினை இந்த அளவீட்டின் பெறுபேறுகள் குறித்து நிற்கின்றன. இது தொடர்பான சிறந்த

**அட்டவணை II.12**
**ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்**

| | நடவடிக்கை | மாத்தறை | மாத்தளை | அநுராதபுரம் |
|---|---|---|---|---|
| 1. | முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தினை மேம்படுத்துதல் | x | x | x |
| 2. | சோள பயிர்ச் செய்கையாளர் மற்றும் வேளாண்மை செய்முறைப்படுத்தும் கம்பனிகளுக்கிடையே முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்திற்கு வசதி செய்து கொடுத்தல் | | | x |
| 3. | இஞ்சி உற்பத்தியாளர்களுக்கும் வேளாண்மை செய்முறைப்படுத்தும் கம்பனிகளுக்குமிடையே முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை மேம்படுத்துதல் | | x | |
| 4. | நெல் வேளாண்மையாளர்களை சிறுபோக பருவ காலத்தில் ஏனைய பயிர்களான சோளம் மற்றும் உழுந்து போன்றவற்றிற்கு பன்முகப்படுத்துவதனை ஊக்குவித்தல் | | | x |
| 5. | அறுவடையின் பின்னரான நட்டங்களினைக் குறைப்பதற்கான தொழிநுட்ப அறிவினை வழங்குதல் | | x | |
| 6. | நெல்சார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி தொடர்பான செயலமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | | | x |
| 7. | சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் | | | x |
| 8. | தெங்கு நிலப்பரப்பில் கீழ்ப்பயிர்ச்செய்கை, பழங்களைப் பயிரிடல் மற்றும் வீட்டுத் தோட்ட நடவடிக்கைகள் தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல் | x | | |
| 9. | முருதுவளை நீர்ப்பாசனத் திட்டத்தில் காசுப் பயிர்ச்செய்கையினை நடாத்துதல் | x | | |
| 10. | சுசகன மற்றும் ஜீவன சக்தி கடன் திட்டங்களின் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதலும் சுசகன கடன் திட்டத்தின் கீழ் நிதிப்பயன்பாட்டினைக் கண்காணிப்புச் செய்தலும் | x | | x |
| 11. | கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலுள்ள வங்கி அலுவலர்களுக்கு ஜீவன சக்தி கடன் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் | | | x |
| 12. | உத்தேசிக்கப்பட்ட உள்வலய ஜீவனோபாய உதவி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்களில் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்தல் | | | x |
| 13. | வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட மாத்தளை பிரதேச பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைத்தல் | | x | |
| 14. | அரச பிணையங்களில் முதலீடு செய்தல் மற்றும் போலி நாணயங்களை அடையாளம் காணுதல் தொடர்பான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | x | x | x |
| 15. | பாடசாலை மாணவர்களுக்கு பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பாக கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | x | x | x |

பெறுபேறுகள் புத்தளம் மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இம் மாவட்டங்களில் மாதிரியிலுள்ள 75 சதவீதத்திற்கு மேற்பட்ட நன்மை பெறும் வீட்டுடமையாளர் வறுமையிலிருந்து மீண்டுள்ளனர். எல்லா நான்கு மாவட்டங்களிலும் வீடமைப்பின் தரம், வசதிகளினைப் பெற்றுக் கொள்ளல், நீண்ட கால நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் உடமை போன்றவை தொடர்பிலான வாழ்க்கைத் தரத்திலான மேம்பாடு அவதானிக்கப்பட்டது. வரவேற்கத்தக்க எண்ணிக்கையிலான நன்மை பெறும் வீட்டுடமையாளர்களின் கொடுகடன் தேவைகள் நுண்பாக கொடுகடனின் உச்ச எல்லையான ரூ.50,000 இனை விஞ்சியுள்ளமையின் காரணமாக அவர்களது தற்போதைய தேவைப்பாடானது வர்த்தக நியமங்கள் மீதான கொடுகடனாக காணப்படுவதனையும் அளவீடு வெளிப்படுத்தியுள்ளது. இதேவேளை, மத்திய வங்கியினால் குருணாகலை, களுத்துறை, நுவரேலியா, பதுளை, மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தொழிற்படுத்தப்பட்டதொரு மாதிரி வறுமை ஒழிப்பு செயற்றிட்டமான வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் 754 நன்மை பெறுநர்களை மாதிரியாகக் கொண்டு முக்கிய குறிகாட்டிகளாக சொத்துடமை, நீண்டகால நுகர்வுப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் உடமை, வீடமைப்பின் நிலைமைகள், கடன்படுநிலை மற்றும் சேமிப்பு போன்றவற்றை உள்ளடக்கியதொரு அளவீடு 2006 திசெம்பரில் மேற்கொள்ளப்பட்டது. இந்த அளவீட்டின் பூர்வாங்கத் தகவலானது மாதிரியிலுள்ள நன்மை பெறும் வீட்டுடமையாளரில் 55 சதவீதமானோர் வறுமையிலிருந்து மீண்டுள்ளதனைக் குறித்து நிற்கின்றது. மாதிரிக்குட்படுத்தப்பட்ட வீட்டுடமையாளர்களில் 88 சதவீதமானவர்கள் 2004இன் பின்னரே வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தில் இணைந்தமையினால் இதுவொரு வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகக் காணப்படுகின்றது. நன்மை பெறுநரிடையிலான கடுமையான வறுமை மற்றும் தற்காலிகமான வறுமையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு வழி செய்யும் திரட்டப்பட்ட தரவினை கட்டியமைப்பதற்காக அதே நன்மை பெறுநரது மாதிரியைக் கொண்டு இந்த அளவீட்டினை ஆண்டு தோறும் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டத்தின் பரப்பானது 12,968 வீட்டுடமையாளர்களினால் விஸ்தரிக்கப்பட்டது. சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செற்றிட்டத்தின் மீது நடாத்தப்பட்ட அளவீட்டுடன் ஒத்த விதத்தில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் மீது கூடியளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கிய பெறுபேறுகளை மதிப்பிடும் அளவீட்டினை 2007இல் நடத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### கொடுகடன் உத்தரவாதங்கள்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இலங்கை அரசின் முகவராக அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் முன்னுரிமை வாய்ந்த துறைகளுக்கான நிதிப்பாய்ச்சலை மேம்படுத்துவதற்காக விசேட கடன் திட்டங்களின் கீழ் வங்கியியல் நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்களுக்கு உத்தரவாதமளிக்கின்றது. இத்தகைய சில கொடுகடன் உத்தரவாத திட்டங்கள் மத்திய வங்கியிலிருந்து கிடைக்கும் ஆரம்ப நிதியினால் தொழிற்படுத்தப்படுகின்ற அதே வேளை ஏனைய ஆரம்ப நிதிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. பிரதேச அபிவிருத்தி திணைக்களமானது உத்தரவாதப்படுத்தும் பத்திரங்களை வழங்குதல், கட்டணங்களை திரட்டுதல் மற்றும் கொடுகடன் உத்தரவாத விண்ணப்பங்களை செய்முறைப்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய அதன் கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளினை 2006 இலும் தொடர்ந்து மேற்கொண்டது. தற்பொழுது தொழிற்பாட்டிலுள்ள கொடுகடன் திட்டங்கள் தொடர்பிலான கொடுகடன் உத்தரவாதத்திட்டங்களின் விபரங்கள் அட்டவணை II.11இல் வழங்கப்பட்டுள்ளது. எனினும், தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள பல்வேறு கொடுகடன் திட்டங்கள் தொடர்பிலான கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் செய்முறைப்படுத்துதலும் 2006இல் மேற்கொள்ளப்பட்டது.

### மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அநுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறையிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினை 2006இலும் தொடர்ந்தும் மேற்பார்வை செய்தது. பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு பாரம்பரிய மத்திய வங்கித்தொழில் நடவடிக்கைகளான நாணய வெளியீடு, பிரதேச காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள் போன்றன இவ்வாண்டில் நிறுத்தப்பட்டு பிரதேச அலுவலகங்கள் முற்று முழுதாக பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்கு வழிவகுக்கப்பட்டது. நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகளானவை வேளாண்மை அபிவிருத்தி, விழிப்புணர்வினை உருவாக்குதல், விசேட கடன் வசதிகளை மேற்பார்வை மற்றும் கண்காணிப்புச் செய்தல், தொழில் முயற்சியாண்மையின் அபிவிருத்தி, பிரதேச தரவு சேகரிப்பு, தரவினைப் பரப்புதல், மத்திய வங்கியின் நாடாளவிய தரவு சேகரிப்பு முறைமைக்கான சாதனங்களை வழங்குதல், பிரதேச ரீதியான கூட்டங்களில் மத்திய வங்கியினைப் பிரதி நிதித்துவப்படுத்துதல் போன்றவற்றை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளென பரந்த அடிப்படையில் வகைப்படுத்தப்பட முடியும். ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகள் அட்டவணை II.12 கொடுக்கப்பட்டுள்ளன.

## 17. செயலகம்

2006இல் செயலகத்திணைக்களம் வங்கிக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, வங்கி அலுவலர்களுக்கான வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பயணங்கள், பொது நிர்வாகம், உபசரணைத் தொழிற்பாடுகள், விடுப்புக் கொள்கை விடயங்கள் மற்றும் உபயோகத்தில்லாத பொருட்களை அகற்றுதல் போன்ற ஏனைய பல வகைப்பட்ட நிருவாகத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. திணைக்களம் பயணம், பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, முற்பணங்களின் தீர்ப்பனவு என்பவற்றினையும் மேற்கொண்டது. வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அஞ்சல் அறைத் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் அதே ஏற்பாடுகளுடன் பெறப்பட்டன.

நிதித் திணைக்களத்தின் மையத் தொழிற்பாடுகளின் மீள ஒழுங்கமைத்தலுக்கு இசைவாக செயலகத் திணைக்களம் 01.09.2006 முதலாக நிதித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த மத்திய வங்கி ஓய்வூதியத்திட்டம், விதவைகளினதும் அநாதைகளினதும் ஓய்வூதிய நிதியம் மற்றும் விதுராரினதும் அநாதைகளினதும் ஓய்வூதிய நிதியம் போன்ற அனைத்து நிருவாகத் தொழிற்பாடுகளையும் மேற்கொண்டது.

## 18. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோளாக கடமையில் இருக்கும் மத்திய வங்கி ஊழியர்கள் அங்கு வருகை தருவோர், கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றைப் பாதுகாப்பதுடன், நாணயங்களை எடுத்துச் செல்லும் வேளையில் அவற்றிற்கு பாதுகாப்பு வழங்குவதுமாகும். இக் குறிக்கோளை

அடைவதற்கு மத்திய வங்கியின் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் 2006ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

(அ) மத்திய வங்கியின் மிக இன்றியமையாத தொழிற்பாடுகளுக்காக தொடர்ச்சியான வியாபாரத்திட்டத்தினை தயாரிப்பதில் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் தீவிரமாகப் பங்கேற்றது.

(ஆ) எதிர்பாராது ஏற்படும் எந்த ஒரு எதிர்பாரா நிகழ்வினையும் எதிர் கொள்ளத்தக்க விதத்தில் திணைக்களங்களுக்கென எதிர்பாரா திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. எதிர்பாரா திட்டத்தின் கீழ் அச்சுறுத்தல் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல், செயற்படுதல், காயப்பட்ட வர்களுக்கு முதலுதவி அளித்தல் மற்றும் ஊழியர்களினைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தல் என்பவற்றுக்கு உதவுவதற்காக எமது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வங்கியின் வெவ்வேறு திணைக்களங்களிலிருந்தான அலுவலர்களைக் கொண்ட சிறப்புக்குழுவுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

(இ) தலைமையாக ஊழியர்களுக்குப் புறம்பாக ராஜகிரியவிலுள்ள மத்திய வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் ஊழியர்களுக்கும் இவ்வாண்டில் தீக்கு எதிராக போராடும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயல்முறைப் பயிற்சி வழங்கப்பட்டது.

(ஈ) 2006 நவெம்பர் 20இலும் 2006 திசெம்பர் 3ஆம், 4ஆம் நாட்களிலும் ஆயுதப் பயிற்சியும், சுடுகலன்கள் பயிற்சியும் நடாத்தப்பட்டது.

(உ) சிறந்த பயிற்சியின் மூலமும் அலுவலர்களுடனான நடைமுறை கலந்துரையாடல்களூடாகவும் பாதுகாப்பு அலுவலர்களின் ஆற்றலினை உயர்த்துவதற்கு சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது. 2006 ஓகத்தில் வங்கியின் பாதுகாப்பு பணிக்கென ஆட்சேர்க்கப்பட்ட 46 பாதுகாப்பு அலுவலர்கள் கொண்ட தொகுதியினருக்கு மனித வளங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் சிறப்பு வதிவிடப் பயிற்சி வழங்கப்பட்டது.

(ஊ) மத்திய வங்கித் தலைமையக பாதுகாப்பு அரச பாதுகாப்புப்படை மற்றும் பொலசாரின் உதவியுடன் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

(எ) மத்திய வங்கி தலைமையகம், அதன் பிரதேச அலுவலர்கள் மற்றும் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் போன்றவற்றின் பரிசோதனை வழிமுறைகளை உயர்த்துவதற்கென பின்வரும் பாதுகாப்புக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) வெடி பொருட்களை கண்டுபிடிக்கும் கருவிகள்

(ii) உலோகமற்ற நுணுக்கக் கருவிகள் ஊடாக நடத்தல்

(iii) கைகளால் கையாளப்படும் உலோக நுணுக்கக் கருவிகள்

(ஐ) மத்திய வங்கி ஊழியர்களுக்கு அவசரகால நிலையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி அறிவுறுத்துவதற்காகவும் அனைத்து பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் அவர்களின் ஒத்துழைப்பினைப் பெறவும் பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 19. புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2006இலும் தேசிய கணக்குகள், விலைகள் மற்றும் கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை மற்றும் ஏனைய சமூக பொருளாதாரத் துறைகளின் மீதான தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு என்பவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இத்திணைக்களமானது ஏற்கனவேயுள்ள முறைமைகளை முன்னேற்றுதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கத்தின் குறுங்கால மற்றும் நடுத்தரகால எறிவுகள் உட்பட புதிய தகவல் முறைமைகளினை விருத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டது. இவ்வாண்டில் திணைக்களத்தின் முக்கிய சாதனைகளுள் ஒன்றாக அதன் செயற்பாடுகளை புதிய துறைகளான காணி விலை அளவீடு, வியாபார நம்பிக்கை அளவீடு மற்றும் பணவீக்க எதிர்பார்ப்பு அளவீடு போன்றவற்றை நடாத்துவது தொடர்பாக விரிவாக்கியமை விளங்குகின்றது. இதற்கு மேலாக, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்கான மூலவள ஆட்களுக்கானதொரு மூலமாக விளங்குவதன் மூலம் திணைக்களமானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியின் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் தீவிரமாக பங்கேற்றுள்ளது. இவ்வாண்டில் உயர்பதவி அலுவலர் மற்றும் உயர்பதவியல்லாத அலுவலர்கள் இரண்டு தரங்களிலுமுள்ள அநேகமான அலுவலர்கள் தமது வேலைகளது தரத்தினை மேம்படுத்துவதற்கு பயன்படுகின்ற தமது அறிவு மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டிலுமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் ஆய்வரங்குகளில் பங்கேற்றுள்ளனர்.

#### புள்ளிவிபரவியல் அளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களமானது நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக் குழுவின் தேவைப்பாடுகள் மற்றும் வங்கியின் தரவு உள்ளடக்கத்தின் விரிவாக்கம் இரண்டிற்குமாக சொத்துக்களது விலைகளை சேகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. ஆரம்பப் படி முறையாக கொழும்பு மாவட்டத்தினுள் இரண்டு கட்டங்களில் காணி விலை அளவீடு நடாத்தப்பட்டது. முதலாவது கட்டமானது காணி விலைகளை தீர்மானிக்கும் காரணிகளினை கண்டறிவதற்கான தொரு அடிப்படை அளவீடாக 2003 இடம் பெற்ற காணிக் கொடுக்கல் வாங்கல்களில் கவனம் செலுத்தியது. அளவீட்டின் இரண்டாவது கட்டமானது காணி விலைகளிலான போக்குகளை பெறுவதற்காக 2004 மற்றும் 2005இல் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் கவனம் செலுத்தியது. அளவீடுகளில் கண்டறியப்பட்டவைகள் நாணயச்சபைக்கும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக் குழுவிற்கும் அறிக்கையிடப்பட்டன. திணைக்களமானது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரிடையே இலத்திரனியல் அஞ்சல் மூலமான வியாபார நம்பிக்கை அளவீடொன்றையும் நடாத்தியது. இந்த அளவீடானது ஆரம்ப அளவீட்டின் அனுபவத்தின் அடிப்படையில் மேலும் மேம்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்ட பரப்பெல்லையுடன் அடிக்கடி நடாத்தப்படும். அளவீட்டில் கண்டறியப்பட்டவைகள் நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் வியாபார நம்பிக்கை அளவீட்டின் மாதிரி கட்டமைப்பினை ஒத்த இலங்கை பொருளாதார கழகம் மற்றும் கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளியலாளர்களது

மாதிரிக்காக 2006இல் ஆரம்பிக்கப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்பு அளவீட்டின் அறிமுகத்துடன் நாணயக்கொள்கைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை**

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழான தரவு சேகரிப்பானது களப் பரீட்சகர்களாகத் தொழிற்படுகின்ற பாடசாலை ஆசிரியர்களது நாடளாவிய வலைப்பின்னலூடாக நிறை வேற்றப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள நிலையங்களிலிருந்தான தரவு சேகரிப்பு தொடங்கப்பட்டதன் மூலமாக முறைமையில் அறிமுகப்படுத்தப்பட்ட மேம்பாடுகளினைத் தொடர்ந்து நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையானது 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் 107 நிலையங்களிலிருந்து தரவினைச் சேகரித்தது. தரவு சேகரிப்பினைப் பூரணப்படுத்துவதற்கான புதிய படிவத்தினை அறிமுகப்படுத்தியமையின் காரணமாக ஆண்டின் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட வருடாந்த நேர அட்டவணைக்கிணங்க தரமான தகவல்கள் உரிய நேரத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் களப்பரீட்சகர்களின் மேற்பார்வையும் வலுப்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுவப்பட்ட நிலையங்கள் தொடர்பான மேற்பார்வையானது, இப்பிரதேசங்களில் நிலவிய பாதுகாப்பு நிலைப்பாடுகள் கள மேற்பார்வைக்கு இடமளிக்காமையினால் தலத்திற்கு வெளியே நடாத்தப்பட்டன. முன்னரைப் போலவே தமது தரவு சேகரிப்பில் துல்லியம், தரம் வினைத்திறன் மற்றும் சரியான நேரம் போன்றவற்றை மேம்படுத்தும் முகமாக பரீட்சகர்களுக்கு புதிய பயிற்சித்தலுக்காகவும் பொருளாதாரத்தில் காணப்படும் சமகால நிகழ்வுகள் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுதலின் மூலம் அந்த அறிவாற்றல் பாடசாலை மாணவர்களுக்கும் சமூகத்திலுள்ள ஏனைய அங்கத்தவர்களுக்கும் சென்றடைவதற்காகவும் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் கண்டி போன்ற இடங்களில் நடாத்தப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்றிறனானது ஆசிரிய பரீட்சகர்களிடையே காணப்பட்ட மேம்பட்ட அறிவாற்றலிலும் ஆர்வத்திலும் பிரதிபலிக்கப்பட்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் கீழ் தரவு சேகரிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்காக 2005இல் தொடங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தரவு சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை 2007 சனவரி தொடக்கம் 100 ஆகக் குறைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புறக்கோட்டை சந்தையிலிருந்தான தரவு சேகரிப்பானது தரவின் தரத்தினையும் கிடைப்பனவினையும் விட்டுக் கொடுக்காத வகையில் மேலும் செலவுச் சிக்கனத்தை ஏற்படுத்தும் வகையில் சீர்திருத்தப்பட்டது.

**தேசிய பிராந்திய பிரதேச வருமானக் கணக்குகள்**

திணைக்களம் இலங்கையின் தேசிய கணக்குகளின் வருடாந்த, காலாண்டு மதிப்பீடுகளைத் திரட்டுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இவை நாட்டின் முழுமொத்த உற்பத்தி, நுகர்வு மற்றும் சேமிப்பும் முதலீடும் தொடர்பான முக்கிய அளவீடுகள் மற்றும் முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளது சேகரிப்பு மற்றும் மதிப்பீட்டினை உள்ளடக்குகின்றது. தனியார் நுகர்வுச் செலவினம் பற்றிய மதிப்பீடுகள் நுகர்வோர் நிதிய மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 2003/ 04 இலிருந்து கிடைத்த அண்மிய தகவல்களினால் மேம்படுத்தப்பட்டது. தேசிய வருமான மதிப்பீடுகளினை மேலும் வலுப்படுத்துவதற்காக ஊழியர் சேம நிதிய தரவுத் தளத்திலிருந்து தகவல்களை பெறுவதற்கான ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தகவல்களை வழங்குவதானது பன்னாட்டு நியம கைத்தொழில் பகுப்பாய்விற்கு இணையான அடிப்படையில் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளின் வருடாந்த மற்றும் காலாண்டு மீள்பகுப்பாய்வினூடாக மேம்படுத்தப்பட்டன. மதிப்பீடுகளானவை அச்சு ஊடகங்களூடாகவும் இலத்திரனியல் ஊடகங்களூடாகவும் 2006ஆம் ஆண்டிலும் பொதுமக்களுக்குப் பரப்பப்பட்டன. காலாண்டு மதிப்பீடுகள் ஏற்கனவே வெளியிடப்பட்ட நாளேட்டிற்கமைய 3 ஊடகக் கலந்துரையாடல்களினூடாக பரப்பப்பட்டன. 2003இல் தொடங்கப்பட்ட செலவின முறையின் மூலம் காலாண்டு தேசிய கணக்குகளின் மீது ஒரு தரவுத் தொடரினை உருவாக்கும் வேலைகள் 2006 இலும் தொடர்ந்தன.

கடந்த அண்மிய ஆண்டுகளைப் போன்று திணைக்களமானது 2005 இற்கான மாகாண வாரியாக பகுக்கப்பட்ட வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திகளை ஓராண்டு தாமதத்துடன் திரட்டி வெளியிட்டது. 2003ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்களின் தொடர்கள் 2006இலும் பராமரிப்புச் செய்யப்பட்டது. இந்த தொடரானது கொள்கை வகுப்பாளர்கள் பொருளாதார செயற்பாடுகளிலான பிராந்திய வேறுபாடுகளையும் நாட்டின் வளர்ச்சியிலான செயற்றிறனையும் அடையாளம் காண்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குமான பரந்துபட்ட புள்ளிவிபரவியலினை வழங்குகின்றது.

**விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை**

திணைக்களமானது ஆறு மாதாந்த விலைச்சுட்டெண்களைத் திரட்டி பகுப்பாய்வு செய்துள்ளது. ஐந்து பிரதேச ரீதியான நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் ஐந்து வேறுபட்ட பிராந்தியங்களின் சில்லறை விலைகளில் காணப்பட்ட சராசரி விலை அசைவுகளை அளவிட்ட வேளையில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண் அதே அசைவுகளினை உற்பத்தியாளர் அல்லது மொத்த விற்பனை விலை அசைவுகளுக்காக அளவிட்டது. அனைத்து சுட்டெண்களையும் திரட்டுவதற்கு அவசியமான விலைகள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைமை ஊடாக அல்லது தரவு சேகரிப்பின் ஏனைய முறைகளூடாக சேகரிக்கப்பட்டன.

மேலும், திணைக்களமானது தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பனவற்றின் அடிப்படையிலமைந்த நுகர்வோர் விலைகளின் அசைவுகளது பகுப்பாய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட குறுங்கால மற்றும் நடுத்தர கால பணவீக்கத்தின் எதிர்வு கூறல்கள் விலை அசைவுகளது எதிர்கால போக்குகளுக்கான முக்கிய குறிகாட்டிகளாக பயன்படுத்தப்பட்டன. தரவுகளின் தரத்தினை மேம்படுத்தியதன் மூலம் முறைசாராத்துறைக் கூலி விலைச்சுட்டெண்ணானது மேலும் மேம்படுத்தப்பட்டது. நாடு முழுவதனையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 2003/04 இனை அடிப்படையாகக் கொண்ட அண்மிய நிறையிடல் கட்டமைப்புடன் கூடிய ஒரு அனைத்தையுமுள்ளடக்கிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது 2007 இரண்டாம் அரையாண்டு முதல் வெளியிடும் திட்டத்துடன் பரீட்சார்த்த அடிப்படையில் தொகுக்கப்பட்டது. புதிய அனைத்தையுமுள்ளடக்கிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் இணங்கக் கூடியதாக மாகாண ரீதியான நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் தொகுப்பானது 2006இன் இறுதிப்பகுதியில் தொடங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஆதரவுடன் நாடளாவிய தரவு சேகரிப்பு

முறைமையின் தரவுகளை செய்முறைப்படுத்துவதற்கானதொரு மென்பொருள் முன்னேற்றகரமான அம்சங்களுடன் உருவாக்கப்பட்டது.

வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீடுகளை இத்திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது. இரண்டு அளவீடுகளிலிருந்தும் கிடைக்கப்பெற்ற தகவல்கள் தேசிய கணக்குகளின் தொகுப்புகளுக்கு பயன்படுத்தப்பட்டன. காலாண்டு அளவீடுகளின் முக்கிய கண்டறியப்பட்டவைகள் ஆண்டு முழுவதும் கிரமமான அடிப்படையில் நாணயச்சபைக்கு அறிக்கையிடப்பட்டன. தொழிற்படை மற்றும் தொழிற்சந்தையின் வருடாந்த மற்றும் காலாண்டுப் பகுப்பாய்வுக்கு மேலதிகமாக, காலாண்டு அறிக்கை உள்ளடக்கத்தினை வெளிநாட்டுத் தொழில்நிலை, தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழில் சந்தை சீர்திருத்தங்கள் போன்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் ஒரு காலாண்டு தொழிற்சந்தையின் மீளாய்வு தொடங்கப்பட்டது. தொழிற்சந்தை அபிவிருத்திகள் தொடர்பான அறிக்கைகளின் பகுப்பாய்வு உள்ளடக்கமானது புதிய பரப்புக்களை உள்ளடக்கி விரிவாக்கப்பட்டது.

**புள்ளி விபரங்களைப் பரப்புதல்**

இவ்வாண்டில் புள்ளிவிபரத் திணைக்களமானது அதன் இரண்டு வருடாந்த வெளியீடுகளான இலங்கையின் "சமூக பொருளாதாரத் தரவு 2006 - தொகுதி XXIX" மற்றும் "இலங்கையின் பொருளாதார சமூகப் புள்ளிவிபரங்கள் 2006 - தொகுதி XXVIII" இரண்டினையும் யூன் 2006 இல் வெளியிட்டு வைத்தது. வங்கியின் 2007இற்கான கையடக்கத் தினக்குறிப்பிலுள்ள புள்ளிவிபரவியல் அட்டவணைகள் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன.

இவ்வாண்டில் இத்திணைக்களம் சட்ட ரீதியான அதே போன்று வங்கியின் ஏனைய பல வெளியீடுகளுக்கும் தனது கிரமமான பங்களிப்பினை வழங்கியது. நாணயச்சபைக்கு தேசிய வருமானம், பணவீக்கம், விலைகள், கூலிகள் மற்றும் தொழில்சந்தை என்பன தொடர்பான தற்போதைய நிலைப்பாடுகள் தேவையேற்படும் வேளைகளில் அறிவிக்கப்பட்டது. திணைக்களமானது உள்ளூர் வலையமைப்பிலிருக்கும் திணைக்களத்தின் இணையத்தளமான "ஸ்ரா நெட்" இனை தொடர்ந்தும் கிரமமாகப் பூரணப்படுத்தியதுடன் வங்கியின் இணையத்தளத்திற்கும் ஆண்டு முழுவதும் பங்களிப்புச் செய்தது.

**மத்திய வங்கியின் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கான பங்களிப்பு**

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் மத்திய வங்கியினாலும் அரச அமைச்சுக்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு ஆய்வரங்குகள், செயலமர்வுகள், பயிற்சித் தொடர்கள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்களில் மூலவள ஆட்களாக கிரமமான முறையில் தொழிற்பட்டனர். இவ்வாண்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அலுவலர்கள் மூலவள ஆட்களாக பங்கேற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆய்வரங்குகள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்களது மொத்த எண்ணிக்கை 29 ஆகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களமானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினைச் சேர்ந்த இரு பட்டதாரி மாணவர்களுக்கு உள்ளக பயிற்சியினையும் வழங்கியுள்ளது.

## 20. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

1988இன் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம் மற்றும் 2000இன் 56ஆம் இலக்க நிதியியல் குத்தகைச் சட்டம் என்பவற்றிற்கிசைவாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது தனது அதிகார வரம்புக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதியியல் குத்தகை நிறுவனங்களை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்காததை உறுதிப்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டது.

2006 ஆண்டில், மேலும் ஒரு கம்பனி புதிய ஒரு நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட மொத்த நிதிக்கம்பனிகளின் எண்ணிக்கை 29இற்கு அதிகரித்தது. இதேவேளை, நான்கு உரிமம் பெறப்பட்ட வங்கிகளும் இரண்டு பொது நிறுவனங்களுமான ஆறு நிறுவனங்கள் நிதியியல் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, நிதியியல் குத்தகை வியாபாரத்தினை மேற்கொண்டதுடன் நிதியியல் குத்தகைச் சட்டத்தின் கீழ் ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் ரத்துச் செய்யப்பட்டது. இதன் விளைவாக பதிவு செய்யப்பட்ட நிதியியல் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 2006 திசெம்பரில் 72ஆக விளங்கியது.

### 20.1 பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

**(அ) தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு**

பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு, பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் நிதி நிலைமைகளை கண்டறிந்து கொள்ளும் நோக்குடன் காலத்திற்குக் காலம் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் ஊடாக பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் நிதியியல் கம்பனி சட்ட விதியின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் இயற்றப்பட்ட சட்ட விதிகளுக்கும் அமைவாக ஒழுகுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டது.

**(ஆ) தலப் பரீட்சைகள்**

தலப் பரீட்சைகள் சொத்துக்களின் தரம், மூலதனப் போதுமை, முகாமைத்துவ வினைத்திறன், வருவாய், இலாபத்தன்மை, முறைமைகள் மற்றும் கடப்பாடுகள், பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் ஆளுகைகளின் தகுதி என்பவற்றை மதிப்பீடு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன. 2006ஆம் ஆண்டில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆறு தலப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலாக பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளின் திரவத்தன்மை, கொடுகடன் நிருவாகம், மூலதனப் போதுமை, முறைமையும் கட்டுப்பாடுகளும் போன்ற தெரிவு செய்யப்பட்ட நெருக்கடி மிக்க விடயங்களில் 23 உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை இவ்வாண்டின் அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்களாக கருதப்படவில்லை.

அனைத்தையும் உள்ளடக்கிய தல மற்றும் உடன் பரீட்சைகளின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் தொடர்பான பணிப்பாளர்கள் சபைக்கும், மூத்த முகாமைத்துவத்துக்கும் அறிவிக்கப்பட்டதுடன், குறைபாடுகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்படி அவர்கள் பணிக்கப்பட்டனர். உடனடித் திருத்தும் நடவடிக்கை தேவைப்படும் போது அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் மிகுதியாகவுள்ள குறைகளை

திருத்துவதற்காக உறுதியான அர்ப்பணிப்புடன் கூடிய விசேட கால நிர்ணயம் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டது.

**(இ) பணிப்புரைகள் வழங்குதல்**

இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கு பலவித இன்றியமையாத நோக்கங்களை உள்ளடக்கியதாக ஏழு பணிப்புரைகளும் ஒரு விதியும் வழங்கப்பட்டன. இவற்றுள் ஒன்று புதிய பணிப்புரையாகவிருந்த வேளையில் ஏனைய பணிப்புரைகளும், விதியும் தொடர்பான நோக்கங்களுக்காக முன்பு வழங்கப்பட்ட பணிப்புரைகளையும் விதியையும் பிரதியீடு செய்தன.

* நிதிக்கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) 2006ஆம் ஆண்டின் பணிப்புரை இல. 1

இப்பணிப்புரையானது ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியும் அனைத்து நேரங்களிலும் ஆற்றல் குறையாத மைய மூலதனமாக ரூ.200 மில்லியனுக்குக் குறையாத தொகையினைப் பேணுதலை வேண்டி நிற்கின்றது. 01.02.2006இல் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியானது ரூ.200 மில்லியனுக்குக் குறைவான மைய மூலதனத்தைக் கொண்டிருந்தவிடத்து பணிப்புரையின் ஏற்பாடுகளினை பூர்த்தி செய்வதற்கு 30 மாதங்கள் கொண்ட நீடிக்கப்பட்ட காலப்பகுதி கொடுக்கப்பட்டது.

* *நிதிக்கம்பனிகள் (நிறையேற்றப்பட்ட இடர்நேர்வு மூலதனப் போதுமை விகிதம்) 2006இன் பணிப்புரை இல. 2*

இது நிதிக்கம்பனிகள் (நிறையேற்றப்பட்ட இடர்நேர்வு மூலதனப் போதுமை விகிதம்) 2003இன் பணிப்புரை இல. 2 என்பவற்றுக்குப் பதிலாக வழங்கப்பட்டதுடன் ஆகக் குறைந்தது ரூ.200 மில்லியன் மைய மூலதனத் தேவைப்பாடுகளை உள்ளீடு செய்வதற்கான சில மாற்றங்களை ஒருங்கிணைப்பது அவசியமாகின்றது.

* நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் களுக்கான ஏற்பாடுகள்) 2006இன் பணிப்புரை இல. 3

இது நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள்) 1991இன் பணிப்புரை இல.1 மற்றும் நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்) 1991இன் பணிப்புரை இல.2 என்பவற்றுக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பணிப்புரையின் குறிக்கோள் ஏற்பாடுகளின் நோக்கங்களுக்கான கடன் வசதியளித்தலுக்கு எதிராக பல வகையான சொத்துக்களின் பெறுமதிகளை கழித்து விடுவதற்கு அனுமதிப்பதன் மூலம் அவற்றுக்கு கூடிய நெகிழ்ச்சித் தன்மைகளை இயலச்செய்து அனைத்து பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கும் தனியொரு ஏற்பாட்டு கட்டளை விதிகளை அறிமுகப்படுத்துவதாகும்.

* நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் எல்லை) 2006இன் பணிப்புரை இல. 4

இந்தப் பணிப்புரையானது நிதியியல் கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் எல்லை) 1992இன் பணிப்புரை இல. 1 இற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டது. இந்த புதிய பணிப்புரையானது தனியொரு கடன்பாட்டாளருக்கான கடன் வசதியளிக்கும் எல்லைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளினால் வழங்கப்படும் பாதுகாப்பற்ற கடன்வசதிகளின் தொகை என்பவற்றை உயர்த்திய அதேவேளை தனியொரு கடன்பாட்டாளருக்குக் கொடுக்கப்படும் கடன்வசதிகளின் மொத்தத் தொகை மீது சில கட்டுப்பாடுகளினை விதித்தது

* நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) 2006இன் பணிப்புரை இல. 5

இந்தப் பணிப்புரை நிதிக்கம்பனிகள் (கடன் வழங்குதல்) 1991இன் பணிப்புரை இல.8 மற்றும் நிதிக்கம்பனிகள் (திருத்தங்கள்) 2001இன் பணிப்புரை இல. 2 என்பவற்றிற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பணிப்புரை 2006இன் இல. 4 பணிப்புரைகளுக்கு ஏற்ப நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் எல்லை) ஒருங்கிணைக்கப்பட்ட ஏற்பாடுகளின் விளைவாக திருத்தங்களைக் கொண்டு விளங்கும்.

* நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர் மற்றும் அவர்களினது உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) 2006இன் பணிப்புரை இல. 6

இந்தப் பணிப்புரை நிதியியல் கம்பனிகள் (உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்) 1991இன் பணிப்புரை இல. 5 இற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டது. இந்தப் புதிய பணிப்புரை பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளை அதனது பணிப்பாளர்களினதும், பணிப்பாளர்களின் உறவினர்களினதும் வைப்புக்களை ஏனைய வைப்பாளர்களுக்கு ஏற்புடையதாகவுள்ள நியதிகளின்படி ஏற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்கின்றது. மேலும், மத்திய வங்கியின் ஒப்புதல்கள் இன்றி பணிப்பாளர்களுடனும், பணிப்பாளர்களின் உறவினர்களுடனும் மேற்கொள்ளக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் ஆகக்கூடிய பெறுமதி அதிகரிக்கப்பட்டது.

* நிதியியல் கம்பனிகள் (முதலீடு)2006இன் பணிப்புரை இல. 7

இந்தப் பணிப்புரை நிதியியல் கம்பனிகள் (முதலீடு) 1991இன் பணிப்புரைகள் இல.12 மற்றும் நிதியியல் கம்பனிகள் (முதலீடுகள்) (திருத்தம்) 2001இன் பணிப்புரை இல. 3 இற்கும் பதிலாக ஏற்படுத்தப்பட்டது. முன்னைய பணிப்புரையின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியானது முதலீடு செய்யும் கம்பனியின் வழங்கப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 40 சதவீதத்தினை விஞ்சிய அளவுக்கு ஏதாவது ஒரு கம்பனியின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்தக் கட்டுப்பாடு தற்பொழுது தளர்த்தப்பட்டு ரூ.200 மில்லியனுக்கும் அதற்கு மேலும் மைய மூலதனத்தைக் கொண்டிருந்த பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் துணைக் கம்பனிகளை உருவாக்க அல்லது ஒரு கம்பனியின் வழங்கப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**(ஈ) ஒழுங்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்**

(i) நிதிக்கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) 2001இன் விதி. இல.1 இற்கு பதிலாக நிதிக்கம்பனிகள் (விளம்பரங்கள்) 2006இன் விதி இல.1 வழங்கப்பட்டது. புதிய விதியின் கீழ், முன்னைய விதியின் கீழ் விதிக்கப்பட்ட சில தேவைப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் கொடுகடன் தரமிடல் போன்ற சில மேலதிக தகவல்களை விளம்பரங்களில் உள்ளடக்குதல் தேவைப்படுத்தப்பட்டன.

(ii) மேலும், 2006ஆம் ஆண்டில், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கு பின்வரும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

* நிதிக்கம்பனிகள் 2006ஆம் ஆண்டின் வழிகாட்டலின் இல. 1 (கிளைகள்/அலுவலகங்களை திறத்தல்)

* நிதிக்கம்பனிகள் 2006இன் வழிகாட்டல்கள் இல. 2 (அரையாண்டு நிதியியல் கூற்றுக்கள் வெளியிடுதல்)

### 20.2 பதிவு செய்யப்பட்ட நிதியியல் குத்தகை நிறுவனங்கள்

#### (அ) நிதியியல் குத்தகை நிறுவனங்களைப் பதிவு செய்தல்

மீளாய்வின் கீழான ஆண்டில், இரண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இரண்டு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள், இரண்டு பகிரங்கக் கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்கி 6 நிறுவனங்கள் சிறப்பியல்பு பெற்ற குத்தகை கம்பனிகளாக கருதப்பட்டு நிதியியல் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி ஒன்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றும் ஒன்றிணைக்கப்பட்டதுடன், பகிரங்கக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த பதிவுச் சான்றிதழ் வறிதாக்கப்பட்டது. அதேவகையில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 2006 திசெம்பர் இறுதியில் 72 ஆக விளங்கி, 15 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும், 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளையும், 28 பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளையும் 20 சிறப்பியல்பு பெற்ற குத்தகைக் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.

#### (ஆ) பணிப்புரைகளின் வழங்கல்கள்

2006ஆம் ஆண்டில், அறிக்கையிடும் தேவைப்பாடுகளை வலுப்படுத்தும் முகமாக பின்வரும் ஐந்து பணிப்புரைகள் மீள வழங்கப்பட்டன.

2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஆகக் குறைந்த மூலதன) பணிப்புரை

2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரை

2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்குத்தகை (தனியொரு கடன்பாட்டாளர் எல்லை) பணிப்புரை

2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்குத்தகை (அதிகரிப்பு விகிதம்) பணிப்புரை

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை

இதற்கு மேலதிகமாக சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளிடமிருந்து நிதியியல் தொழிற்பாட்டு மற்றும் கம்பனித் தகவல்கள் என்பவற்றை ஒழுங்கான அடிப்படையில் பெறத்தக்கதாக பின்வரும் இரு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்குத்தகை (நிதியியல் கூற்றுக்கள்) பணிப்புரை

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்குத்தகை (கம்பனி மற்றும் தொழிற்பாட்டுத் தகவல்கள்) பணிப்புரை

#### (இ) சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கண்காணிப்பு

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது 2006 ஆண்டு காலத்தில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியின் தளத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தது. இதற்கு மேலாக திணைக்களத்தினால் நிதியியல் அறிக்கையிடலின் துல்லியமான தன்மையினை உறுதிப்படுத்தவும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு விடுக்கப்படும் பணிப்புரைகளுடனான இணங்கிச் செல்லும் தன்மையினை பரீட்சிக்கவும் 17 உடனடி பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிப்புரைகளுக்கு இணங்காத கம்பனிகள் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் சரிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவர்கள் எடுத்த நடவடிக்கை தொடர்பான செயல் விளைவினை நெருக்கமாக கண்காணிப்பு செய்வதையும் திணைக்களம் மேற்கொண்டது.

### 20.3 முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

நிதிக்கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் முறிவடைந்த ஒன்பது கம்பனிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் என்பன 1988 இலிருந்து நாணயச்சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு கம்பனி 2006இல் மூடப்பட்டதுடன், மூடப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையினை மூன்றிற்கு கொண்டு வந்தது. ஏனைய ஐந்து கம்பனிகளின் விடயத்தில் ஒடுக்கி விடும் செய்முறை தொடர்ந்தது. தொடர்பான கம்பனியிடம் இருந்து சில வருமதிகள் மீளப் பெறப்பட்டதனைத் தொடர்ந்து 2005இல் ஒரு பகுதியான மீள நிதியளிப்பின் மற்றுமொரு வட்டத்தினைத் தொடங்கிய மற்றைய கம்பனி 2006 ஆண்டில் வைப்பாளருக்கு கொடுப்பனவுகளைச் செய்வதனை தொடர்ந்தும் மேற்கொண்டது.

இவ்வாண்டில் முறிவடைந்த நிதிக்கம்பனிகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை புலனாய்வு செய்தல் மற்றும் விதந்துரைப்புக்கள் செய்தல் போன்ற நடவடிக்கையின் பொருட்டு ஒரு கணக்காய்வு நிறுவனமும் இரண்டு சட்ட நிறுவனங்களும் பொறுப்பில் ஈடுபடுத்தப்பட்டன. கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையிலும் விதந்துரைப்புக்களின் அடிப்படையிலும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடர்பான அதிகாரிகளுக்கு புலனாய்வு அறிக்கைகளையும் ஏனைய அவசியமான தகவல்களையும் வழங்குவதற்கு ஒழுங்குதல் செய்யப்பட்டுள்ளன.

### 20.4 நிதி வியாபாரங்களின் அங்கீகாரமற்ற நடத்தை

சட்ட பூர்வமற்ற முறையில் நிதி வியாபாரங்களை நடாத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட பல நிறுவனங்களின் விவகாரம் தொடர்பாக திணைக்களம் தொடர்ந்தும் புலானாய்வுகளை மேற்கொண்டது. அத்தகைய ஆறு நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையினைப் பரிசீலித்த நாணயச்சபை, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் கீழ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் வியாபாரம் நிதிக்கம்பனியின் சட்டத்திற்கு முரணானது எனத் தீர்மானித்தது. இதனைத் தொடர்ந்து நிதிக்கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்நிறுவனங்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவ்வாண்டில் திணைக்களமானது, நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு ஆறு கம்பனிகள் இணங்கத்தவறியதுடன் எந்தவித சட்ட அங்கீகாரமுமின்றி நிதியியல் வியாபாரத்தினை மேற்கொண்டதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் அக்கம்பனிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது.

அதிகாரம் அளிக்கப்படாத வகையில் நிதியியல் வியாபாரங்களை மேற்கொள்ளும் ஆட்கள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்படும் விசாரணைகள்/ முறையீடுகளின் எண்ணிக்கையில்

குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. மத்திய வங்கி அத்தகைய ஆட்கள் தொடர்பாக தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டதும் இதற்கு ஓரளவு காரணமாக இருக்கக்கூடும்.

### 20.5 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

முக்கியமாக நிதி வியாபாரத்தின் அதிகார பூர்வமற்ற நடத்தை தொடர்பான விடயங்களில் திணைக்களம் பொது மக்களுக்குத் தொடர்ந்தும் அறிவூட்டியது. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

(அ) செய்திப்பத்திரிகை வெளியீடுகள்

(i) வைப்புக்களின் வரைவிலக்கணம், பல்வேறு சட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள்/ அமைப்புக்களின் வகைகள் மற்றும் மத்திய வங்கியினால் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் என்பவற்றை வழங்கும் விளக்கக் குறிப்பு. இந்த அறிவித்தல்கள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து மாதாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டது.

(ii) நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு II (2)இன் கீழ் நாணயச் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட 5 கம்பனிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள்.

(iii) ''உங்கள் சேமிப்புக்களை எங்கே வைப்பில் இடவேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்'' என்ற தலைப்பின் கீழான வாசகர் சிநேக பூர்வ அறிவித்தலானது வைப்புக்களை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்களுடன் நிதியங்களை முதலிடுவதில் இணைந்திருக்கும் இடர்நேர்வுகளை எடுத்துக் காட்டுகிறது.

(iv) விதந்துரைக்கப்பட்ட நுண்பாக நிதிநிறுவனங்கள் சட்டத்தின் மீதான பத்திரிகை வெளியீடு

(v) நிதியியல் குத்தகைச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியின் பதிவினை இரத்துச் செய்தலை பொதுமக்களுக்கு அறிவிக்கும் பத்திரிகை அறிவிப்பு.

(ஆ) ''பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள்''

என்று தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம்.

(இ) அச்சிடல் மற்றும் இலத்திரனியல் ஊடகத்தில் குறிப்பாக அதிகாரமளிக்கப் படாத வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும் போது ஏற்படும் இடர்நேர்வு பற்றிய நேர்காணலில் பங்கேற்றல்.

## 21. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்

''நிதியியல் துறையிலுள்ள ஆளணியினருக்கு பயிற்சி மூலம் அறிவாற்றலை மேம்படுத்துவதும் தேர்ச்சியை விருத்தி செய்வதுடன் தொழில்நுட்ப முன்னேற்றகளிலிருந்தும் நிதியியலில் புதிய மாறுதல்களிலிருந்தும் எழும் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான போட்டித்தன்மையுடன் அவர்களை வலுவூட்டுதல்'' என்ற நடைமுறையினை பேணும் விதத்தில் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது 2006 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி உட்பட நிதியியல் துறையிலுள்ள ஆளணயினருக்கு தொடர்ந்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. கிராமியத்துறையின் பயிற்சித் தேவைகளுக்காக நுண்பாக நிதியியலில் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு கிராமியத் துறையின் பங்காளர் நிறுவனங்களான பிரதேச அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள், சமுர்த்தி மேலாண்மை, தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியம் என்பவை தமது பயிற்சித் தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாக அவற்றில் பங்கு பற்றினர். நிதியியல் நிறுவனங்களின் பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக பயிற்சி நெறிகள்/ ஆய்வரங்குகளும் செயலமர்வுகளும் வடிவமைக்கப்பட்டு, மத்திய வங்கி மற்றும் மத்திய வங்கியல்லா நிறுவனங்களினது மிகுந்த அனுபவம் வாய்ந்த தராதரம் பெற்ற மூலவள ஆட்களினால் நடாத்தப்பட்டன.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் அட்டவணை II.13இல் காட்டப்பட்ட பகுப்பின்படி2005இன் 73 நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் 62 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. 62 நிகழ்ச்சித்திட்டங்களில் 48 அட்டவணைப்படுத்தப்பட்ட உள்ளூர் நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்கி ஒரு பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டத்தையும் 13 ஆய்வரங்குகளையும்/ கல்விசார் கற்கை நெறிகளையும் கேள்வியின் நிமித்தம் வழங்கியது.

**அட்டவணை II.13**

**2006இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட பாடங்களை அடிப்படையைக் கொண்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| வகுப்பு | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பயிற்சி பெறுவோர் | | | மொத்த பயிற்சி மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|---|
| | | இ.ம.வ | ஏனையவை | மொத்தம் | |
| 1. வங்கித்தொழில் | 22 | 130 | 570 | 700 | 270 |
| 2. தகவல் தொழில் நுட்பம் | 17 | 250 | 29 | 279 | 660 |
| 3. மொழித்திறன் தொடர்பூட்டல் திறன் | 3 | 64 | 15 | 79 | 146 |
| 4. முகாமைத்துவம் | 3 | 17 | 56 | 73 | 30 |
| 5. கிராமியத்துறை அபிவிருத்தியும் நுண்பாக நிதியமும் | 3 | 0 | 113 | 113 | 36 |
| 6. சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 164 | 363 | 527 | 330 |
| மொத்தம் | 62 | 625 | 1,146 | 1,771 | 1,472 |

மூலம்: வ.தொ.ஆ. இலங்கை மத்திய வங்கி

**2006இல் நடத்தப்பட்ட பகிரங்க மற்றும் ஞாபகார்த்த விரிவுரைகள்**

1. "அபிவிருத்தியடையும் நாடுகளில் விலை உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதிலும் பேணுவதிலும் எதிர்நோக்கும் சவால்கள்" - கலாநிதி நரேந்திரா ஜாதவ், முதன்மை மதியுரையாளரும் முதன்மை பொருளியலாளரும், பொருளியல் பகுப்பாய்வும் கொள்கையும் திணைக்களம், இந்திய ரிசேவ் வங்கி

2. சுதந்திர ஞாபகார்த்த உரை - "E - அரசாங்கம் இலங்கைக்கான அபிவிருத்தியடைந்த நாடுகளின் நடப்பு விடயங்களும், அலுவலர்களின் தொடர்புகளும்" - பேராசிரியர் ஜுலியன் ரிச்சர், மொனாஷ் பல்கலைக்கழகம் - அவுத்திரேலியா

3. "நிதியியல் சீர்திருத்தங்களும் நிதியியல் நெருக்கடிகளும்: சுவீடிஷ் அனுபவங்கள்" - கலாநிதி லார்ஸ் நைபேர்க் துணை ஆளுநர், ரிக்ஸ் வங்கி, சுவீடன்

4. "போக்குவரத்தின் பொருளாதார விடயங்கள் (சிங்களத்தில்)" - திரு. கே. ஜி. டி. டி. தீரசிங்க, உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

5. "குடியரசு ஞாபகார்த்த உரை - மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2005இல் பிரதிபலிக்கப்பட்ட பொருளாதார நிலைமை" - கலாநிதி எச். என். தேனுவர, பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

6. "மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2005இல் பிரதிபலிக்கப்பட்ட பொருளாதார நிலைமை" (சிங்களத்தில்) - திரு. கே. டி. ரணசிங்க, துணைப்பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

7. "இலங்கையின் உள்ளார்ந்த ஆற்றலைக் கட்டவிழ்தல்" - கலாநிதி சாந்தாயணன் தேவராஜன், முதன்மை பொருளியலாளர், தென் ஆசிய பகுதி - உலக வங்கி, வொஷங்டன் டி.சி., ஐ.அ.நா.

8. "வர்த்தக சந்தைகளும், பொருளாதார வளர்ச்சியும்" - பேராசிரியர் ஹரி ப்ளாம், பன்னாட்டு பொருளியல் கல்வி ஆய்வு, ஸ்ரொக்கோம் பல்கலைக்கழகம், சுவீடன் (உறுதிப்படுத்தப்பட்டது)

9. "இலங்கை மத்திய வங்கியின் 56வது ஆண்டு நிறைவு விரிவுரை - மத்திய வங்கியின் தொழில் வளர்ச்சியும், மத்திய வங்கித் தொழிலின் எதிர்கால விளைவு" - கலாநிதி (திருமதி) நளினி ஜெயபாலன், ஐ.அ.நா.

10. "நுண்பாக நிதியிடல் ஊடாக வறுமை ஒழிப்பு" (சிங்களத்தில்) - திரு. டபிள்யு. எம். கருணாரத்ன, பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

11. "இலங்கை தொழிற்சந்தையின் எதிர்கால சவால்கள்" - திரு. சி. பி. ஏ. கருணாதிலக, துணைப்பணிப்பாளர், புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

12. இலங்கையில் "மின்னியல்துறை அபிவிருத்தி முன்நோக்கி" - பேராசிரியர் பிரியந்த விஜேதுங்க, பணிப்பாளர் நாயகம், இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழு

13. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 25வது ஆண்டு நிறைவு விரிவுரை "இலங்கை போன்ற நாடுகளில் உலக வங்கியின் வளர்ச்சிப் பங்களிப்பு" -செல்வி நயோகா இஷி, நாட்டிற்கான பணிப்பாளர், உலக வங்கி அலுவலகம், கொழும்பு

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் முதன் முதலாக பன்னாட்டு நாணய நிதியம், சிங்கப்பூர் பயிற்சி நிறுவனம், சிங்கப்பூர் உடனான ஒத்துழைப்புடன் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகளுக்காக 2006 மே 15-26 வரை ஒரு வெற்றிகரமான கற்கை நெறி ஒன்றினை நடாத்தியது. வர்த்தக வங்கிகளின் வேண்டுகோளுக்கிணங்க செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் விடயங்களை உள்ளடக்கிய 5 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அவை தவணைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும் ஆபரணங்களின் பிணையாக வைத்துப் பெறப்படும் கடன்வழங்கலும் நடைமுறையிலுள்ள கொடுகடன் பகுப்பாய்வுகளின் தயாரிப்பு, உயர்தர பயன்பாட்டாளருக்கான எம்.எஸ்.வேட், அடிப்படை தமிழ் மற்றும் நகர வேளாண்மை என்பன உயர்ந்த கேள்வியினைக் கொண்டிருந்தன. நேபாள அரச வங்கியிலிருந்து வந்த 6 அதிகாரிகள் செயற்படுத்த முடியாத முற்பணங்கள் மற்றும் வங்கித்தொழில் முறைமையில் ஏற்பட்ட பிறழ்வு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றினர். இதற்கு மேலாக வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் வர்த்தக வங்கித்தொழில் கணக்கியல் மற்றும் பொருளியலில் ஒரு சான்றிதழ் கற்கை நெறியினை நடாத்தியது. கணக்கியல், பொருளியல் என்பவற்றுக்கென 2005இலும் 2006இலுமாக இலங்கை மத்திய வங்கியில் 92 உயர் பதவி அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டும்/ பதவியில் உயர்த்தப்பட்டும் உள்ளனர். வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நன்மைக்கென 12 கல்வியியல் ஆய்வரங்குகளை நடாத்தியது. இந்த கல்வியியல் ஆய்வரங்குகளில் 1,389 மாணவர்கள் பங்குபற்றினர்.

கிராமிய நிதியியல்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் நிதியிடப்பட்டு பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் 4 பயிற்சி நெறிகள் வங்கித்தொழில் ஆய்வு நிலையத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு பன்னாட்டுச் சான்றிதழ் பெற்ற மதியுரைக் குழுவானது வசதி குறைந்த பயிற்சியாளருக்கு உதவிகள் புரிந்தனர். வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, பன்னாட்டு பயிற்சியாளர்களின் மேற்பார்வையின் கீழ் அதே அலகுகளையுடைய 07 சிறிய நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியது. அதே செயற்றிட்டத்தின் கீழ் பன்னாட்டு மதியுரையாளர்களினால் கிராமிய நிதியியல்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்காளர்களுக்கான நுண்பாக நிதியியலில் ஒரு மேலோட்டமான பயிற்சி நெறி நடாத்தப்பட்டது.

கீழே தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட 13 பொதுமக்களுக்கான மற்றும் ஞாபகார்த்த விரிவுரைகள், மாண்புமிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பேச்சாளர்களினால் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் நிதியியல் நிறுவனங்களின் தொழில்சார் நிபுணர்கள் மூத்த நிருவாக அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் முக்கிய நடைமுறை விடயங்கள் பற்றிய தமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான ஒரு அரங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

## 22. பயிற்சித் திணைக்களம்

தமது அலுவலர்கள் தத்தம் கடமைகளை செயல்திறனுடனும் கூடிய உற்பத்தியாக்கத்துடனும் செயலாற்றுவதனை இயலச் செய்வதற்கு வங்கியானது தேர்ச்சிகளையும் அவர் தம் தகுதிகளையும் முன்னேற்றுவதற்கான முக்கியத்துவத்தை இனங் கண்டு முன்னைய ஆண்டுகளைப் போலவே தொடர்ந்தும் தமது அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சகல

மட்டங்களிலும் பயிற்சியளித்தது. இதே வேளையில் புதிய கற்றலையும், பயிற்சிக் கொள்கையினையும் நடைமுறைப்படுத்தும் வகையில் வங்கியானது அலுவலர்களுக்கு கற்கவும், தாமாகவே பயிற்சி பெறவும் மற்றும் ஏனைய அலுவலக உறுப்பினர்களுடன் அறிவினையும், சிறப்புத்திறமையையும் மற்றும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்குமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது.

மீளாய்வின் கீழான ஆண்டில் வங்கியானது 122 அலுவலர்களுக்கு வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்ற, வாய்ப்பளித்த வேளையில் 975 பேர் உள்நாட்டில் பிரபல்யமான பயிற்சி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றுவதற்கு நியமிக்கப்பட்டனர். உள்நாட்டில் பயிற்சி பெற்ற அலுவலர்களில் பெரும்பான்மையானோர் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி பெற்றனர். இதற்கு மேலாக, உயர் அலுவலர்கள் வகுப்பில் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களின் நன்மை கருதி அவர்கள் திணைக்களங்களினால் கையாளப்படும் வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்த அலுவலர்களுக்கென செயல்முறை அனுபவங்களைப் பெறும் பொருட்டு வர்த்தக வங்கித்தொழில் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று வர்த்தக வங்கிகளின் உதவியுடன் ஒழுங்கு செய்யப்பட்டது.

வங்கி ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, அவுத்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள பிரபல்யம் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கு மத்திய வங்கி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தமது அலுவலர்களுக்கு வசதியளிக்கும் கொள்கையினைத் தொடர்ந்தும் பின்பற்றியது. அதேவகையில் 2006இல் 10 அலுவலர்கள் தமது பட்டப்பின்படிப்பின் கற்கைநெறியினை தொடங்கியுள்ள வேளையில் வெளிநாடுகளில் தமது பட்டப்பின்படிப்பு கற்கை நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 07 அலுவலர்கள் தமது கடமைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

பயிற்சியாளர் பயிற்சிகளில் பங்குபற்றுவதன் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினை வங்கியிலுள்ள ஏனைய அலுவலர்களும் பெறுவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள்/ ஆய்வரங்குகளில் பங்குபற்றுவதனை இயலச் செய்வதன் வாயிலாக வங்கியானது பல்வேறு நன்மைகளைப் பெறலாம் என்பதை உணர்ந்து 2006இல் வங்கி தமது தொடர்ச்சியான வாராந்த ஆய்வரங்குகளை தொடர்ந்து மேற்கொண்டது.

இதற்கு மேலாக, வங்கியானது தமது அலுவலர்களைப் பழக்கப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரிக்ஸ் வங்கிக்கு ஒரு குறுங்கால ஆய்வுச் சந்திப்புக்களை ஒழுங்கு செய்து வங்கியினால் பயன்மிக்கது என அடையாளம் காணப்பட்ட விடயங்களில் தாமாகவே ரிக்ஸ் வங்கியினால் பின்பற்றப்படும் சட்ட ஒழுங்குகளையும் வழிமுறைகளையும் பழக்கப்படுத்திக் கொள்ள வழி ஏற்படுத்தியது. அந்த வகையில் அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவினரை ரிக்ஸ் வங்கிக்கு விஜயம் செய்து தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொடர்பூட்டல் விடயங்களில் தாமாகவே பழங்கப்படுத்திக் கொள்ள ஒழுங்குகளைச் செய்தது.

## 23. நலன்புரி

நலன்புரித் திணைக்களம் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமான வசதிகளையும் வாய்ப்புக்களையும் சலுகை வட்டி வீதங்களில் கடன் திட்டங்கள் மற்றும் ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் அவர்களில் தங்கியிருப்போருக்குமான மருத்துவ நன்மை போன்ற வெவ்வேறு திட்டங்களின் ஊடாகவும் தொடர்ந்தும் வழங்கி வருகிறது. 2006 இறுதியில் நன்மை பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 9055 ஆகும். இத்திணைக்களம், மருத்துவ நிலையம், உணவு வழங்கல் மற்றும் ஏனைய துணை நலத்துறைப்பணிகள் போன்ற அவசியமான உள்ளகப் பணிகளையும் கூட வழங்கி வந்தது.

மீளாய்வின் கீழான ஆண்டில் இத்திணைக்களம் திடீரென ஏற்படும் கடுமையான நோய்கள், பெரிய அறுவைச் சிகிச்சைகள் மற்றும் நிலைத்து நீடித்திருக்கும் நோய்கள் என்பவற்றுக்கு வழங்கப்படும் நன்மைகளுக்கான எல்லைகளை மீறுமளவுக்கு மருத்துவ சிகிச்சையில் செலவுகள் ஏற்பட்ட வேளையில் வங்கி ஊழியர்கள்/ ஓய்வூதியர் ஆகியோருக்கு நிதி உதவிகளை வழங்கும் நோக்கமாக "இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர் இடர்பாட்டு நிவாரண நிதியம்" என்ற புதிய நிதியத்தினை நிறுவியுள்ளது.

வீடமைப்புக் கடன்திட்டமானது 2006இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு பொது நிருவாக சுற்றுநிருபத்தினை மேற்கோள் காட்டி ஊழியரும் அவரது/ அவளது தாரமும் ஆகிய இருவரும் வங்கியில் தொழிலில் அமர்த்தப்பட்டவிடத்து அவர்/ அவள் புறம்பான வீடமைப்புக் கடனினைப் பெறுவதினை இயலச் செய்யும் வகையில் ஊழியரானவர் ஏற்கனவே வீட்டுச் சொத்தினைக் கொண்டிருந்த போதும் அதற்கு மாறான வகையில் வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் வசதிகளைப் பெறுவதனை இயலச் செய்வதற்காக சட்டதிட்டங்களை இலகுபடுத்தியது. ஓய்வூதியர்கள் 70 வயதுதை அடையும் போது முழுக்கடனினையும் தீர்ப்பனவு செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களது வீடமைப்புக் கடன் நிலுவைக்கான மீள்அட்டவணைப்படுத்தலும் செய்யப்பட்டுள்ளது.

உணவு வழங்கல் பணிகள் செலவுச் சிக்கனமானதாகவும், பயனுறுதியுடையதாக இருப்பதற்கும், மத்திய வங்கிப் பணிமனையினுள் நடைபெறும் அலுவல்சார் நிகழ்வுகளுக்கு உணவை வழங்குவதற்காகவும் மேம்படுத்தப்பட்டது.

## 24. மனித வளங்கள் முகாமைத்துவம்

2006இல் வங்கியின் மனித மூலவளங்கள் முகாமைத்துவ தொழிற்பாடுகள் வங்கியின் உபாயத் திட்டத்துடன் ஒத்திசைவான நோக்குடன் ஒரே கொத்தணியாக மீளத்தொகுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் மனித மூலவளங்கள் திணைக்களமானது வங்கியினால் அடையாளம் காணப்பட்ட மனித மூலவளத் தேவையினை நோக்கங்களாக கொண்டு ஆட்சேர்ப்பு, பதவியிலமர்த்துதல், அடுத்து வருகின்றவர்களைத் திட்டமிடல், செயலாற்றுகை மதிப்பீடு, பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் போன்ற விடயங்களில் தமது நடவடிக்கையினை மேற்கொண்டது. உடன் நிகழ்வாக மனித மூலவளங்கள் திணைக்களமானது வங்கியின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் ஊழியர் செயல் நோக்கினை மேம்படுத்தும் உபாய ஆற்றுப்படுத்துகையை மேற்கொண்டது.

### உரியகாலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டம்

மனித மூலவளங்களை மேலும் ஆய்வறிவுக்குட்படுத்தும் வழிமுறைக்கு அமைவாகவும் உயர்பதவி அலுவலர்களுக்கு 2006 மேயில் ஒரு உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு

ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 20 ஊழியர்களுக்கு வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டது. 20 ஊழியர்களுள் 18 ஊழியர்கள் 2006 ஓகத்து 1இலிருந்து ஓய்வு பெற்றதுடன் 2 ஊழியர்களின் ஓய்வு சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் தேவைகளுக்கு ஏற்ப தாமதப்படுத்தி வைக்கப்பட்டது. அத்தகைய ஒரு ஊழியர் 2006 நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து வங்கிப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

### ஆட்சேர்ப்பு

2006இன் புதிய ஆட்சேர்ப்புகள் பல்வேறு திணைக்களினதும் அடையாளம் காணப்பட்ட திறமை அடிப்படையிலான தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதனை நோக்காகக் கொண்டிருந்தது. மொத்தமாக 13 உயர் பதவி அலுவலர்கள் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட வேளையில் 45 பாதுகாப்பு அலுவலர்களும், 2 தகவல் தொழில்நுட்பவியலாளர்களும், 1 பகுப்பாய்வு நிகழ்ச்சிப்படுத்துநரும், 1 தமிழ் தட்டச்சாளரும் இவ்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டனர். 2006இல் பாதுகாப்புப் பணித்திணைக்களப் பணிப்பாளர் மற்றும் முதன்மை நூலகர் பதவி வெற்றிடங்களும் நிரப்பப்பட்டன.

### பதவி உயர்வு

2006இல் இலங்கை மத்திய வங்கியினது அனைத்து ஊழியர்களதும் தொழில் செயலாற்றம் கவனத்திலெடுக்கப்பட்டு தரங்களுக்கான உயர்வு மற்றும் பதவி நிலை உயர்வு ஆகியவை வழங்கப்பட்டன. தரங்களுக்கான பதவி உயர்வுகளுக்கு செயலாற்ற மதிப்பீடுகளின் புள்ளிகளும் திணைக்களத் தலைவர்களின் விதந்துரைப்புக்களும் தேர்வு முறையில் பயன்படுத்தப்பட்டன. அதன் அடிப்படையில் 2006இல் உயர் அலுவலர்களும், உயர் அலுவலர்கள் அல்லாத வகுப்பினரும் மற்றும் சிற்றூழியர்களுமாக மொத்தமாக 190 அலுவலர்கள் பதவி உயர்த்தப்பட்டனர். பதவிநிலை பதவி உயர்வுகள் விடயத்தில் 4 திணைக்களத் தலைவர்கள் உயர் பதவி சிறப்புத்தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு உதவி ஆளுநர்களாக பதவி குறித்துரைக்கப்பட்டனர். ஒரு உயர் பதவி தரம் IV அலுவலர் உயர் பதவி சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு மூத்த திணைக்களத் தலைவராக பதவி குறித்துரைக்கப்பட்டார்.

### தொழில் தருநர் - ஊழியர் உறவுகள்

தொழிற்சங்கங்களுக்கும் வங்கி முகாமைத்துவத்திற்கும் இடையிலான நெருக்கமான கலந்துரையாடல் இவ்வாண்டிலும் தொடர்ந்துமிருந்தது. வங்கியானது சம்பளத்திருத்தங்களை முடிவுக்குக் கொண்டு வந்து இவ்வாண்டில் அனைத்து தொழிற்சங்கங்களினதும் ஒப்புதல்களுடன் கையொப்பமிட்ட ஒரு கூட்டு ஒப்பந்தமானது 2008 திசெம்பர் 31ஆம் நாள் வரை செல்லுபடியாகும்.

### செயலாற்ற முகாமைத்துவ முறை

2005ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊழியர்களுக்குமான செயலாற்றுகை மதிப்பீடுகள் இவ்வாண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கப்பட்டன. 2007இற்கான தனிப்பட்ட மற்றும் திணைக்கள ரீதியான இலக்கு நிர்ணயமானது வங்கியின் உபாயத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் ஒருங்கிணைவாக மேற்கொள்ளப்பட்டது.

### மனிதவளத் திட்டமிடல்

2006ஆம் ஆண்டில் உரிய காலத்திற்கு முன்னரான சுயவிருப்பு ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் உட்பட மொத்தமாக 39 ஊழியர்கள் ஓய்வு பெற்றனர். இதற்கு மேலாக 5 ஊழியர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக வங்கிப் பணியிலிருந்து தாமாகவே விலகிச் சென்றனர். ஆண்டின் இறுதியளவில் வங்கிப்பணியில் 469 உயர் பதவி அலுவலர்களும் 525 உயர் பதவியல்லா அலுவலர்களும் 96 சிற்றூழியர்களும் காணப்பட்டனர்.

### இலத்திரனியல் சார் மனிதவள முறைமையினை நடைமுறைப்படுத்தல்

2006 திசெம்பரில் மனிதவளத் திணைக்களம் இணையத் தளத்தினை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் சார் மனிதவள முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது. இம் முறைமையானது உபாயத்திட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இம்முறைமையின் நடைமுறைப்படுத்தலுடன் ஊழியர்கள் தமது தனிப்பட்ட அதேநேர தகவல்களை பார்த்துக் கொள்ள முடிவதுடன் முகாமைத்துவம் மனித மூலவளங்கள் தொடர்பான விடயங்களில் ஆகக் குறைவான நிருவாகச் செலவுடன் நேரகாலத்துடன் தீர்மானங்களை எடுக்க முடியும். இவ்விடயம் சார்ந்த அலுவலர் பயிற்சிகள் 2006இல் தொடங்கப்பட்டதுடன் அது 2007 முதற் காலாண்டிற்குள் பூர்த்தியாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலாக ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்பு மற்றும் பூரணப்படுத்துதல் கூடத் தொடங்கப்பட்டுள்ளன.

### உபாய முகாமைத்துவமன்றம்

மனித மூலவளங்கள் திணைக்களமானது, அனைத்து திணைக்களத் தலைவர்களும், கம்பனி முகாமைத்துவக்குழு மற்றும் உபாய திட்டமிடல் குழு போன்றவர்களின் பங்குபற்றுதலுடன் கம்பனி முகாமைத்துவ செயலமர்வு ஒன்றினை ஒழுங்கமைப்பதற்கு உதவியளித்தது. இந்த மன்றம் அனைத்து பங்குபற்றுநர்களுக்கும் திணைக்கள ரீதியான திட்டங்களையும் 2007-2011 காலத்திற்கான உபாயத்திட்டத்தினையும் பற்றி கலந்துரையாடி இணங்கிக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளது.

### ஆளுநர் கலந்து கொண்ட கூட்டங்கள்

2006 சனவரி - யூன் காலப்பகுதியில் ஆளுநர் திரு. சுனில் மெண்டிஸ் பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

(i) மாச்சு 2 -7ஆம் நாள்வரை புறூணையில் நடைபெற்ற 41ஆவது தென்கிழக்காசியா மத்திய வங்கி ஆளுநர்களின் மகாநாடு.

(ii) ஏப்பிறல் 22-26ஆம் நாள்வரை வாசிங்டன் டிசி யில் நடாத்தப்பட்ட பன்னாட்டு நாணய நிதிய/ உலக வங்கி வசந்த காலக் கூட்டம்.

2006 யூலை - திசெம்பர் காலப்பகுதியில் ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால், பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

(i) பன்னாட்டு நாணய நிதிய / உலக வங்கியின் 2006இன் வருடாந்தக் கூட்டங்கள் மற்றும் ஜி-24 கூட்டங்கள் மற்றும் செத்தெம்பர் 15-20 வரை சிங்கப்பூரில் நடைபெற்ற இலங்கை பொருளாதார முதலீட்டு மன்றம்.

(ii) செத்தெம்பர் 22-23ஆம் நாள்வரை கொங்கொங்கில் நடைபெற்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான விளக்கக் கூட்டங்கள்.

(iii) செத்தெம்பர் 30ஆம் நாள் "வங்கித்தொழிலின் ஆளுகையும், கணக்காய்வுக் குழுவினதும், கணக்காய்வாளர்களினதும் பங்களிப்பும்" என்ற தலைப்பிலான பிரதான உரையை நிகழ்த்துவதற்கு இந்தியா சென்னையில் இடம்பெற்ற "தென்னாசிய பிராந்தியத்தில் கணக்கியல் தொழிலசார் நிபுணத்துவம் - அவற்றின் பெறுமதியும், தோற்றப்பாடும்" பற்றிய தென்னாசிய கணக்காய்வாளர் கூட்டமைப்பு.

(iv) கொழும்பு பங்குப் பரிவர்த்தன நிலையம், சிங்கப்பூர், இலங்கை உயர் தூதுவராலயத்துடன் இணைந்து அனுசரணை வழங்கி நவெம்பர் 22ஆம் நாளன்று சிங்கப்பூரில் நடைபெற்ற நிதிய முகாமைத்துவ மகாநாடு. இதில் அவர் கலந்து கொண்டு "இலங்கை பொருளாதாரத்தின் பொதுநோக்கு" என்ற தலைப்பில் முக்கிய உரையாற்றினார்.

**நியமனங்கள் / பதவி உயர்வுகள்**

1. திரு. அஜித் நிவாட் கப்ரால் 2006 யூலை 01 ஆம் நாளிலிருந்து, 4 ஆண்டு காலப்பகுதிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.
2. பின்வரும் பதவி உயர்வுகளும் நியமனங்களும் 2006 ஒத்தோபர் 11ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.
   (i) புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் (திருமதி) அனிலா.டி.பண்டாரநாயக்க அவரது தற்பொழுது வகித்து வரும் பதவிக்கு மேலதிகமாக உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
   (ii) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக விடுவிப்பில் இருக்கும் கலாநிதி பி.டபிள்யூ.ஆர்.பி.ஏ.யு. ஹேரத், உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
   (iii) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் எச்.என். தேனுவர அவரது தற்பொழுது வகித்து வரும் பதிவிக்கு மேலதிகமாக உதவி ஆளுநர் நியமிக்கப்பட்டார்.
   (iv) உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் டி.எஸ். விஜேசிங்க உதவி ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
3. செயலகத்திணைக்களத்தின் பதில் செயலாளர் திருமதி. ஜே.ஏ.என். திஸ்ஸநாயக்க 2006 யூன் 29 ஆம் நாளிலிருந்து செயலகத் திணைக்களத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
4. பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிக கண்காணிப்பாளர் கலாநிதி டபிள்யூ. எம். ஹேமச்சந்திர 2006 ஓகத்து 01ஆம் நாளிலிருந்து வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
5. பாதுகாப்புப்பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மேஜர் ஜெனரல் எஸ். வணிகசேகர 2006 மே 02ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.
6. உள்நாட்டுத்தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஏ.கமலசிறி 2006 நவெம்பர் 15ஆம் நாளிலிருந்து உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
7. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளரான திரு. டி. வசந்த 2006 யூலை 10ஆம் நாளிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.
8. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு. பி. சமரசிறி 2006 ஓகத்து 14ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
9. திரு.ஜோர்ச் என் பர்னாந்து 2006 யூன் 01ஆம் நாளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நிதி உளவறிதல் பிரிவின் முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார்.

**பதவி விலகல்கள் / ஓய்வு பெறல்**

1. ஆளுநர் திரு. சுனில் மென்டிஸ் 2006 யூன் 30ஆம் நாள் தொடக்கம் தமது பதவியிலிருந்து தாமாகவே விலகிச் சென்றார்.
2. நாணயச்சபையின் நியமன உறுப்பினர் திரு. பி.டி. ரொட்ரிக்கோ 2006 பெப்புருவரி 15ஆம் நாள் தொடக்கம் சபையில் இருந்து இராஜினாமாச் செய்தார்.
3. உதவி ஆளுநர் முனைவர் ஏ.ஜி. கருணாசேன 2006 யூன் 15ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
4. உள்துறை நிருவாக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த உதவி ஆளுநர் முனைவர் யூ. விதானபத்திரன 2006 ஒத்தோபர் 29ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
5. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் திரு. எச்.ஏ.ஜி. கெட்டியாராச்சி 2006 சனவரி 10 ஆம் நாள் தொடக்கம் வங்கிப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
6. செயலகத் திணைக்களத்தின் செயலாளர், திரு. டபிள்யூ எஸ்.எல். பர்னாந்து 2006 யூன் 29ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
7. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் செல்வி ஜே.பி.ரி. த சில்வா 2006 ஓகத்து 14 ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
8. திருமதி பி.ரி. பெரேரா, சிறப்பு அலுவலர்/ சட்ட சீர்திருத்தச் செயற்றிட்டம்2006 திசெம்பர் 11ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
9. பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பணிப்பாளர், மேஜர் ஜெனரல் டபிள்யூ.பி.பி. பர்னாந்து, அவர்களுடைய பணி ஒப்பந்தம் 2006 ஏப்பிரல் 14ஆம் நாளன்று முடிவு பெற்றது.

**விடுவிப்பில் / விடுப்பில் உள்ள அலுவலர்கள்**

1. உதவி ஆளுநர் திரு. ஆர்.ஏ. ஜயதிஸ்ஸ மூத்த பொருளியல் மதியுரையாளராகவும், திறைசேரியின் துணைச்செயலாளராகவும் பணியாற்ற நிதித்திட்டமிடல் அமைச்சிற்கு
2. உதவி ஆளுநர் முனைவர் பி.டபிள்யூ.ஆர்.பி.ஏ.யூ ஹேரத் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக.

3. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் திரு. எம்.எம். அத்தநாயக்க, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு
4. திரு. எஸ். ஆர். ஆட்டிகல, உயர் பதவி வகுப்பு தரம் III அலுவலர் நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
5. திருமதி. வை.எம். இந்திரரத்ன, உயர் பதவி வகுப்பு தரம் III அலுவலர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்கு
6. திரு. எம். மகிந்த சாலிய, உயர் பதவி வகுப்பு I அலுவலர், நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
7. திருமதி. ஏ.கே. கெட்டியாராச்சி, தனிப்பட்ட செயலாளர் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு
8. திருமதி. எம்.சி.ஜே. பர்னாந்து தனிப்பட்ட செயலாளர் நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
9. திருமதி டி.ஜி.டி.ஜ. ஏக்க நாயக்க, உயர் பதவி வகுப்பு I அலுவலர் நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
10. திரு. ஈ.டபிள்யூ.கே.ஜே.பி. எகலப்பொல, உயர் பதவி வகுப்பு I அலுவலர் நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
11. திரு. கே.ஏ.யூ.எஸ்.கே. திலகரத்தின உயர் பதவி வகுப்பு I அலுவலர் நிதிதிட்டமிடல் அமைச்சிற்கு
12. திரு. ஈ.ஏ. கெட்டியாராச்சி, உயர்வகுப்பு தரம் IV சம்பளமற்ற விடுப்பில் .

## 25. நிதியியல் உளவறிதல் பிரிவு

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி அதிமேதகு சனாதிபதியினால் 2006 மாச்சு 23ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானி கட்டளையின்படி நிதியியல் உளவறிதல் பிரிவு இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டதுடன் அப்பொழுதிலிருந்து அது தொழிற்பட்டுவருகின்றது. நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டமானது பயங்கரவாதம் மற்றும் நிதிசார் குற்றங்களுக்கு நிதியிடுவதனை ஒழிப்பதற்காக இயற்றப்பட்ட மூன்று சட்டவாக்கங்களுக்குள் ஒன்றாக இருப்பதுடன் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குவதன் மீதான சமவாயச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச்சட்டம் என்பனவே மற்றைய இரண்டுமாகும். இச்சட்டவாக்கமானது பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழிப்பது மீதான பன்னாட்டு முயற்சிகளுடன் ஒத்துழைப்பதற்கான இலங்கையின் பற்றுறுதியினை எடுத்துக் காட்டுவதுடன் நிதியியல்முறை உறுதிப்பாட்டிற்கான மத்திய வங்கியின் பொறுப்பாண்மையினை மேலும் திரட்சிப்படுத்துவதுமாகும்.

### இதன் கடமை

சட்ட நியதிகளின்படி நிதியியல் உளவறிதல் பிரிவின் கடமையாதெனில் உள்நாட்டு ரீதியிலும், பன்னாட்டு ரீதியிலும் மேற்கொள்ளப்படவேண்டியனவாக விளங்கும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடல் என்பனவற்றை ஒழிப்பதற்கான தகவல்களை பெறுவது, பகுப்பாய்வு செய்வது மற்றும் பரப்புவதாகும். இக்குறிக்கோள்களிற்கு காத்திரமான தகவல்களைப் பகிர்ந்து சொள்ளும் பொறிமுறையொன்றின் தேவை இன்றியமையாத தாகவுள்ளது. இதன்படி, சட்டத்தின்படி குறித்துரைக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் சந்தேகத்திற்குரிய நடவடிக்கையுடன் தொடர்பான அறிக்கைகளையும் காசுக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் போன்ற மற்றைய கட்டாயமான வெளிப்படுத்துகை களையும் தயாரித்து அவற்றை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இத்தொழிற்பாடுகளை மையப்படுத்துவதும், நிதியியல் தகவல் பெறுபவர் என நிதியியல் உளவறிதல் பிரிவினை பெயர் குறித்துரைப்பதும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழிப்பதற்கான தேசிய ரீதியிலும் பன்னாட்டு ரீதியிலுமான கட்டமைப்பு இரண்டின் அடிப்படையிலும் காத்திரமான முறையில் தடைகளை மேற்கொள்வதற்கு அடிப்படையாகவுள்ளது.

### கட்டாய அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

அதிமேதகு சனாதிபதி, நிதியமைச்சர் என்ற அவருக்குள்ள உரித்தின் மூலம் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் முதலாவது ஒழுங்குவிதிகளை 2006 மாச்சு 23ஆம் நாளிடப்பட்ட இல. 1437/25ஆம் இலக்க அரச வர்த்தமானியின் மூலம் வெளியிட்டார். இதன்படி, நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 6(அ)இன் நோக்கங்களுக்காக அறிக்கையிடப்படவேண்டிய விஞ்சிய தொகை தீர்மானிக்கப்பட வேண்டியவிடத்து, எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களும் ரூ.500,000 பணத்தினை அல்லது அதற்குச் சமனான வெளிநாட்டு நாணயங்களை விஞ்சுமிடத்தும் பிரிவு 6(ஆ)இன் நியதிகளில் இலத்திரனியல் நிதியமாற்றல்கள் ரூ.500,000இனை அல்லது அதற்கு சமனான வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சுவிடத்தும் அறிக்கையிடப்படவேண்டியமை தொடர்பாக 1ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் ஒழுங்கு விதி விடுக்கப்பட்டது.

### இதன் செயற்பரப்பு

சட்டத்தின் நியதிகளின்படி நிதி உளவறிதல் பிரிவு, அதன் கடமைகளை ஆற்றும் பொழுது முதலில், உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகள் என்பன குறித்துரைக்கப்பட்ட தொகையினை விஞ்சிய காசுக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களையும் அத்துடன் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடும் நடவடிக்கைகள் தொடர்பான எந்த ஒரு ஐயத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களையும் அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டது. பெறப்பட்ட தரவுகள் நிதி உளவறிதல் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டதுடன், அவசியமானவிடத்து சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களின் ஒத்துழைப்புடன் சட்டத்தின் நியதிகளுக்கேற்ப பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதியியல் உளவறிதல் பிரிவின் நிறுவனத்தன்மையும் மூலவள இயலாற்றலும் விரிவடைவதனால், நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கட்டாய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கும் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா நிறுவனங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படவுள்ளது. சட்டத்தின் நியதிகளில் நிறுவனங்களின் உள்ளடக்கம் மிக விசாலமானதாக சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுக்கு இசைவான முறையில் நிதி வியாபாரத்திலுள்ள முயற்சிகள் மற்றும் ஆட்களையும் அதேபோன்று நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு நிதியல்லா வியாபாரமென குறித்துரைக்கப்பட்ட வியாபாரத்திலுள்ள முயற்சிகளையும் ஆட்களையும் உள்ளடக்குகிறது.

இவ்வறிக்கையிலும் தேவைப்பாடுகள் காணப்பட்டபோதும் அனைத:த பிணிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா - நிறுவனங்களும் நிதிகள் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கு இணங்கி ஒழுகுமாறு கேட:டுக் கொள்ளப்படுகின்றன

சட்டத்தின் நியதிகளின்படி நிதியியல் நிறுவனங்களினால் இணங்கி ஒழுகப்பட வேண்டிய உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுதல், வாடிக்கையாளர் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்துதல், வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் போன்றன ஏற்கனவே வரையப்பட்டுள்ளதுடன் உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கும் விரைவில் வழங்கப்படவுள்ளன.